அறைவு 04 இயம் 01 August 01-06, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

04 ஆண்டு ஆரம்பம்

Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 24 விலை : 30.00
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

## மலைமுரசு
MALAIMURASU

04 வது வருடம்

**அன்புள்ளங்களே!**

இன்று மலைமுரசு தனது நான்காவது அகவையில் கால்பதிக்கின்றது. மூன்று வருடங்களின் நிறைவென்பது பத்திரிகையைப் பொறுத்தளவில் ஒரு மைற்கல் என்பது எவ்வளவு மறுக்க முடியாததோ, அதேயளவிற்கு அம் மைற்கல்லைத் தாண்ட உங்கள் அனைவரினதும் இடையறாத உதவியும் ஆதரவுமே காரணங்களாக இருக்கின்றன என்பதும் மறுக்க முடியாதவையே.

பல தவறுகளைப் பொறுத்துக்கொள்ளும் நீங்கள் உங்கள் ஆதரவைத் தொடர்ந்து அளித்து வருவதே இப் பத்திரிகையின் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்கு வழிவகுத்துக்கொண்டிருக்கின்றது.

மலைமுரசின் ஊடாகப் பல விடயங்களை வெளிக்கொணர்ந்து, அவ் விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுத்து, அதனூடாக மக்களுக்குச் சேவையாக ஆற்றக் கிடைத்திருக்கும் வாய்ப்பானது எமது பத்திரிகையில் பணியாற்றும் சிறு குழாமிற்கு அளவில்லா மனநிறைவைத் தந்திருக்கின்றது.

உங்களது ஆதரவே எமது பயணத்தின் படிக்கட்டுக்கள். அப்படிக்கட்டுக்களின் ஊடாகப் பணிவுடன் உங்களை வந்து சேரப் பகீரதப் பிரயத்தனத்துடன் நாம் பயணிக்கின்றோம்.

எல்லாம் வல்ல இயற்கையின் ஆதரவுடன் அப் பயணத்தில் நாம் மற்றுமோர் மைற்கல்லைத் தாண்டும் நாளில் சந்திப்போம்.

என்றென்றும் அன்புடன்!
ஆசிரியர் குழாம்

"சம்பூர் கானிகளுக்குள் அனல் மின் நிலையக் குழாய்கள்"

# மக்கள் எதிர்ப்பு




விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பூர் நிலப்பகுதியில் சம்பூர் அனல் மின்நிலையத்திற்கான பாரிய குழாய்களை அமைக்கும் திட்டம் வெளியானதை அடுத்து அதற்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 27ம் திகதி சம்பூர் பகுதிக்கு பயணித்த திருகோணமலை மாவட்டச் செயலாளர் தெரிவித்திருந்த அவரது கருத்தின்படி சம்பூர் கடலிருந்து சம்பூர் அரசடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாக செல்லும் வீதி சுமார் 60 அடிக்கு அகட்டப்பட்டு தொடுவான்குளம் 21

# மூதூர் முஸ்லிம்களுக்கு ஆசனம் வழங்குவதில் சிக்கல்!!!

மூதூர் முஸ்லிம்களுக்குத் தருவதாகப் பேசப்பட்ட நாடாளுமன்ற ஆசனத்தை அவர்களுக்கு வழங்குவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழுபறிநிலையை அடைந்துள்ளது.

மூதூர் வாழ் முஸ்லிம்களால் முன்மொழியப்பட்ட இருவரை முஸ்லிம் காங்கிரஸ் தன்னுடைய வேட்பாளர் பட்டியலில் இணைக்காததால் மூதூர் முஸ்லிம்கள் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்கவும் அதற்காக தேசியப் பட்டியல் ஊடாக ஆசனமொன்றைப் பெற்றுக்கொள்ளவும் 21


(படம் - சசிகுமார்)

# "தமிழ்க் காங்கிரசிற்கே ஆதரவு"



## ரூபன் (ஆத்மலிங்கம் ரவீந்திரா) அறிவிப்பு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கே தனது முழு ஆதரவையும் வழங்குவதாக திரு. ஆத்மலிங்கம் இரவீந்திரா (ரூபன் - முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் - திருகோணமலை மாவட்டம்) அவர்கள் வெளிப்படையாக அறிவித்துள்ளார்.

கடந்த 31ம் திகதி இலத்திரனியல் ஊடகங்களுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

"ஒரு நாடு இரு தேசம்" என்ற திருப்திகரமானதும், அடையக் கூடியதுமான தீர்வொன்றை முன்வைத்து தமது அரசியல் 21


(தென்னமரவாடியில் தமிழ் காங்கிரசின் மக்கள் சந்திப்பின் பின் யானை வருமிடங்கள் தொடர்பாக உரையாடிய போது)

விருப்பு, வெறுப்பின்றி உண்மையை உரைக்கும் கிழக்கின் வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## விலை பேசப்படும் தமிழரின் வாக்குகள்!

நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் அறிவிக்கப் - பட்டதன் பின்னர் தமிழ்க் கிராமங்கள் பலவற்றில் ஒரு புது வேகம் பிரவாகிப்பதைக் காண முடிகின்றது.

அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்நத போது பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன. நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களுக்கு முன்பாக இயல்பாகவே ஒரு வார்த்தை ஒட்டிக் கொள்கின்றது.

அவ்வார்த்தை "முன்னாள்" நாடாளுமன்ற உறுப்பினர் என்பதாகும்.

இந்த முன்னாள் என்ற வாத்தை ஒட்டப்பட்டதன் பின்னர் வரும் சில நாட்களுக்கு மக்கள் எசமானர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் (முன்னாள்) சேவகர்களாகவும் மாறிவிடுவது கிராமங்களிடையே பிரவாகிக்கும் புதுப் பொழிவிற்கு முதற் காரணமாக அமைகின்றது.

தேர்தலின் பின்னர் கடந்த ஐந்து வருடங்களாகத் தமது தொகுதியின் கிராமங்களை எக்காரணம் கொண்டும் எட்டிப்பார்க்காத அம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தேர்தலுக்காக அந்தக் கிராமங்களுக்கு வருகை தந்து மக்களிடம் வாக்குறுதிகளை அள்ளிவீசத் தயாராகிவிட்டனர்.

வாக்குறுதிகள் வழங்கப்படும் அதேவேளை வாக்குகளை உடனடியாகப் பணமாக மாற்றிக் கொள்ளும் வசதியொன்று காணப்படுவது கிராமங்களில் பொங்கிப் பிரவகிக்கும் புதுப் பொழிவிற்கு இரண்டாவது காரணமாகும்.

கிராமத்திற்கு வாக்குக் கேட்டு வரும் அனைவரிடமும் காசாகக் கிடைக்கத்தக்கவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் விசேடமாகத் தமிழ் மக்களிடையே காணப்படுகின்றது.

வாக்குறுதிகளைக் கேட்டுக் கேட்டு அவை எவையும் நடைமுறைப்படுத்தப்படாததால் சோர்வடைந்துள்ள தமிழர்கள் வரும் அனைத்துக் கட்சிகளுக்கும் உங்களுக்கே வாக்களிக்கின்றோம் என்று ஏதிர் வாக்குறுதிகளைக் கொடுத்து அதனை நிறைவேற்றாதிருக்க எண்ணம் கொண்டுள்ளனர். அதேவேளை உங்களுக்கே வாக்களிப்போம் என்று கூறி அதற்காக ஏற்படும் செலவுகளுக்கு ஒரு தொகைப் பணத்தைப் பெற்றுக்கொள்ள இளைஞர்கள் தயாராகியும் உள்ளனர்.

ஆக மொத்தத்தில் வாக்குகளை வாக்குறுதி - களுக்காகவும் பணத்திற்காகவும் விலையிட்டு விற்கத் தயாராகிவிட்ட தமிழர்களும் எம்மிடையே உள்ளனர்.

ஒரு நாட்டைப் பெற்றுக்கொள்ள மூன்று தசாப்தங்களாக உன்னதமானதும், உயர்ந்த அழிவுகளைக் கொண்டதுமான ஆயுத விடுதலைப் போரினை நடாத்தி முடித்து வெறும் ஆறு ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில் அந்த இனத்தின் அரசியல் போருக்கான சுடுகலத் தோட்டாக்களான வாக்குகள் விலை பேசப்படுவது மிக வருந்தத் தக்கது.

தமிழர்களின் வாக்குகள் வெறும் நாடாளுமன்றக் கதிரையைத் தீர்மானிப்பதற்கானவையாக மாற்றப்-பட்டுள்ளதாலேயே அதனை விற்று குறுங்காலச் சுகத்தை அனுபவிக்கவும், நாடி வருபவர்களை ஏமாற்றவும் தமிழர்களில் ஒரு சாரார் தயாராகியுள்ளனர்.

விடுதலைக்கான அரசியலை முன்னநகர்த்த வேண்டிய தமிழ் இனம் இன்று தனது அரசியலை அடகுவைக்கத் தயாராகி விட்ட நிலைமைக்கு காரணமானவர்கள் யாரென? அடையாளம் காண வேண்டும்.

தமிழரின் அரசியலை அவர்களது கைகளில் இருந்து பிரித்து கனவான்களின் அரசியலாக்கிக் கோலோச்ச முனைபவர்களாலேயே இந்த இழிநிலை எமக்கு எழுந்துள்ளது.

வாக்கு என்பது தமிழர்களின் குரல் என்பதையே மறந்துபோய் நிற்கின்றோம் நாம். அந்த வாக்கானது வெறும் சில பணத்தாள்களுக்காகவும் சாராயப் புட்டிகளுக்காகவும் விலையிடப்பட்டுள்ளமையானது தமிழத் தேசிய எழுச்சியின் மீது மிகப் பாரிய இறுக்கமொன்றை உருவாக்கவுள்ளது.

விலையிடப்படாமல் எம் வாக்குகளை விடுதலைக்கான அரசியல் அம்பாக்க அணிதிரள்வோமா?

## சட்டவிரோத துப்பாக்கி பாவனை

சட்டவிரோதமான முறையில் சொட்கண் துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 10ஆம் கட்டை கித்துள் உதுவ பகுதியில 29 வயதுடைய ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைதுசெய்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர். மிருக வேட்டைக்காக இந்தத் துப்பாக்கியை இவர் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்திய-தாக வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டு-ள்ளதாக காவல்துறையினர் கூறினர்.

## தகுதியுடையோருக்கு வாக்களியுங்கள் - "கத்தோலிக்க ஆயர் சபை"

பொதுத் தேர்தலின்மூலம் தகுதியுடைய வேட்பாளர்களை மாத்திரம் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுப்பதற்காக அதிகபட்ச பங்களிப்பை நல்குமாறு அனைத்து பிரஜைகளிடமும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை கத்தோலிக்க பேராயர் சம்மேளனத்தின் தலைவர் பேரருட்திரு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் கையொப்பத்துடன் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பக்கச்சார்பின்றி வாக்களிப்பதை உறுதிசெய்தலின் பொருட்டு, அனுபவமிக்க மற்றும் விழிப்புடன் கூடிய சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல்கட்சிகள் வெவ்வேறு வடிவங்களில் கூட்டணி அமைத்து அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரல்களை முன்வைத்துள்ளதாகவும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் நிறைவேற்றப்பட்டுள்ள 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் என்பவற்றினூடாக தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் காரணமாக சுதந்திரமானதும், நீதியுமான தேர்தலை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை கட்டியெழுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறந்த கல்வித் தகைமை, சட்டத்திற்கு மதிப்பளித்தல், நேர்மை மற்றும் ஒழுக்கத்துடன் கூடிய அரசியல் தலைமைத்துவம் என்பன வேட்பாளர்களின் குணவியல்புகளாக இருத்தல் அவசியம் எனவும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியல் கட்சியொன்றின் மீது ஒருவருக்குள்ள பரம்பரை சார்ப்புத் தன்மை, வாக்களிப்பதற்கான ஒரேயொரு தகுதியாக அமைந்துவிடக் கூடாது என்றும் பேரவையின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் தீக்கிரை

திருகோணமலை சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள வாகனங்கள் திருத்தும் நிலையத்தில் இரண்டு வருடங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு சொந்தமான வாகனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தீப்பிடித்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த வாகனம் இயந்திரக் கோளாறுக்கு உள்ளாகியமையால் பழுது பார்ப்பதற்காக வாகனங்கள் திருத்தும் நிலையத்தில் விடப்பட்டது. இதன் மின்கலம் பழுதடைந்த நிலையில் அகற்றப்பட்டிருந்தது.

தீ பிடித்தமைக்குரிய காரணம் தெரியவரவில்லை என்று தெரிவித்த அவர்கள், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கூறினர்.

## 58இலட்ச நிதி அபிவிருத்திப் பணிக்காக பங்கீடு

*சேனையூர் நிரூபர்*

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் வருடாந்த அமுலாக்கல் செயற்றிட்டத்தின் மூலமாக 49 அமைப்புக்களுக்கான 58 இலட்சம் பெறுமதியான நிதிக்கான ஒதுக்கீடு கடிதங்கள் வழங்கும் நிகழ்வானது கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த 29ம் திகதி புதன்கிழமை கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தலைமையில் இடம் பெற்றது.

இவ்வாறு வழங்கி வைக்கபட்ட நிதியில் பாடசாலைகள், நூலகங்கள், அறநெறி பாடசாலைகள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆலயங்கள் போன்ற அரச அங்கீகாரம் பெற்ற அமைப்புக்களினூடாக இவ் நிதி அபிவிருத்தி பணிகளுக்காக பகிர்ந்தளிக்கபட்டது.

கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட-வர்களுக்கு இவ்வாறான சிறிய கட்டுமானம் மற்றும் பாடசாலைக்கான சில உபகரணங்களைப் பெறக் கூடிய இந்த நிதியானது சிறு ஆறுதலை வழங்குவதுடன் எமது மாணவர்களின் கல்விக்கும் உறுதுணையாக அமையும் என கல்வி அமைச்சர் தெரிவித்தார்.



## கடினப்பிரதேச கொடுப்பனவு கிடைக்கவில்லை
### ஆசிரியர்கள் விசனம்

ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஊட்டல் பாடசாலைகளாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கனிஸ்ட்ட பாடசாலைகள், யுத்தத்தின் பின்னரான மீள் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் மாதிரி ஆரம்பப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர், அதிபர்களுக்கு கடந்த ஒரு வருடமாக கஷ்டப் பிரதேச இடர்காலக் கொடுப்பனவு கிடைக்கவில்லையென (குச்சவெளி கோட்டப்பாடசாலை) மேற்படி பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் தமது சொந்த வசிப்பிடங்களிலிருந்து எழுவது கிலோ மீட்டருக்கு அப்பால் பேருந்துப் பிரயாணம் செய்யும் ஆசிரியர்கள் பலர் இப்பாடசா-லைகளில் கடமையாற்றி வருகின்றனர்

. ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் உரிய காலத்தில் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியது அதிகாரிகளின் கடமையாகும். ஆனால் கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள் இவ்விடயத்தை இழுத்தடிப்பதாக ஆசியர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## யானைகளிடமிருந்து பாதுகாப்பு தாருங்கள்

### பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

காட்டு யானைகளின் தொல்லைகளை கட்டுப்படுத்துமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கடந்த புதன்கிழமை பாதிக்கப்பட்ட பாவற்கொடிச்சேனை, உன்னிச்சை, எட்டாம் கட்டை, இருநூறுவில், கரவெட்டி, கள்ளச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காடுகள் அழிக்கப்பட்டமையினால் தங்களின் குடியிருப்புக்கள், பயிர்கள் ஆகியவற்றை யானைகள் சேதப்படுத்தி வருவருடன், இதனால், தங்களின் வாழ்வாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். யானைகளின் தொல்லை தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும், அவர்களினால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் கூறினர். இந்நிலையில், இதற்கான நடவடிக்கையை எடுப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்துசென்றனர்.



## சட்டவிரோத மது விற்பனை முறியடிப்பு

சட்டவிரோதமாக மதுபானத்தை கொண்டுவந்து விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இருவரை கடந்த வியாழக்கிழமை அதிகாலை வவுணதீவு, சொறுவாமுனைப் பகுதியில் கைது செய்ததாக வவுணதீவு கால்துறையினர் தெரிவித்தனர். அத்துடன், சந்தேக நபர்களிடமிருந்து 60 மதுபானப் போத்தல்களையும் இரண்டு தோணிகளையும் கைப்பற்றியுள்ளனர். மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான் பகுதியிலிருந்து வாவி ஊடாக தோணிகளில் மதுபானத்தை வவுணதீவு, சொறுவாமுனைக்கு ஊடாக கொண்டுசெல்ல முற்பட்ட வேளையிலேயே இந்த சந்தேக நபர்களை கைதுசெய்ததாகவும் காவல்துயைறினர் கூறினர்.

## இறந்த குடியரசுத் தலைவருக்கு அஞ்சலி



இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அமரர் அப்துல் கலாமுக்கு அஞ்சலிக் கூட்டம், மட்டக்களப்பு அமெரிக்கன் மிசன் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அப்துல் கலாமின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. இளைஞர் அணியின் தலைவர் எஸ்.செயோண் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் கே.துரைராஜசிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான கே.சௌந்தரராஜா, ஞா.சிறிநேசன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராஜா ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

## தேர்தல் முறைப்பாடுகள்

காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பகுதிகளில் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் வேட்பாளர்களின் உருவப்படங்களை கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை தொடர்பில் பொதுமக்கள் சிலர் தமது அமைப்புக்கு முறைப்பாடு செய்துள்ளதாக பப்ரல் அமைப்பின் காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி பிரதேசங்களுக்கான இணைப்பாளர் எம்.ஐ.எம்.ஹரீஸ் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார். அத்துடன், இப்பிரதேசங்களில் வீடு, வீடாக பிரசாரத்துக்கு செல்லும் வேட்பாளர்களின் ஆதராவாளர்கள், வீட்டு உரிமையாளர்களிடம் அனுமதி பெறாமல் வேட்பாளர்களின் தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்களை வீட்டுச்சுவர்களில் ஒட்டுவதாகவும் சிலர் முறைப்பாடு செய்துள்ளனர் என்றார்.

## ஊழியர்கள் மருத்துவ சான்றிதழ் பெற வேண்டும்

ஆரையம்பதி சுகாதார அலுவலகத்தின் ஏற்பாட்டில், மண்முனைப்பற்று பிரதேச சபைப் பிரிவிலுள்ள உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகளின் உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம், மண்முனைப்பற்று பிரதேச சபையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம்.எம்.பசீர், "சுத்தமான உணவும் தண்ணீருமே நோய் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கும். மண்முனைப்பற்று பிரதேச சபைப் பிரிவிலுள்ள உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களும் சமையற்காரர்களும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன், இவர்களுக்கான மருத்துவச் சான்றிதழ் இருந்தால் மாத்திரமே, மண்முனைப்பற்று பிரதேச சபையினால் உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கமுடியும்" என்றார்.

## 4 ஆசனங்களை கைப்பற்றினால் தீர்வு நிச்சயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்தது 4 ஆசனத்தையாவது தமிழர்கள் கைப்பற்ற வேண்டுமாயின் அனைவரும் தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார். வாகரையில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நாடாளுமன்ற பதவியை கொண்டு என்னையோ, எனது குடும்பத்தையோ, எனது குடும்ப உறவுகளையோ அபிவிருத்தியடைய செய்யவில்லை. தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுத்து பணமும் பெறவில்லை. காரணம் இது ஒரு தூய பணி. அதை திறம்பட மேற்கொள்வதை கடமையாக கொண்டேன். எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் முடிவானது நீண்டகாலமாக இம்மண்ணில் எது தமிழ் இனத்தின் உரிமைக்காக போராடிய எமது உறவுகளின் தியாகங்களின் முடிவை சர்வதேசத்தின் அனுசரணையுடன் பெறக்கூடிய சூழலை தரவல்லதாகும் என்றார்.

## மதுவை ஒழிப்போம் - நாடகம்

"மதுபாவனையை ஒழிப்போம் புகைத்தலை தடுப்போம்" என்னும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு, கல்லடி, உப்போடை விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலய மாணவர்கள் ஏற்பாடுசெய்த மாபெரும் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

தேசிய போதை ஒழிப்பு மாதத்தினை முன்னிட்டு கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய பாடசாலை மட்டத்தினாலான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கடமையில் ஈடுபட சந்தர்ப்பம் வேண்டுமென கோரிக்கை

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் கடமையில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித் தருமாறு மட்டக்களப்பு மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு சங்கம் அனுப்பிய கடிதத்தில், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் கடமையில் பங்குபற்றுவதற்கான உரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டுவருகின்றது. உத்தியோகத்தர்கள் அரசியல் கட்சிகளுடன் சார்ந்து செயற்படுகின்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவ்வாறு மறுக்கப்படுகின்றது.

சந்தேகத்தின் பேரில் அனைத்து ஊழியர்களின் சலுகைகளை மறுப்பதானது நியாயமான செயலாகாது. எமது தேர்தல் கடமையில் ஈடுபடுவதற்கான சலுகைகளை வழங்குதல் தொடர்பான சாதகமான பதிலை விரைவில் பெற்றுத்தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மிச் நகரில் வன்முறை

தேர்தல் வன்முறைச் சம்பவமொன்று மட்டக்களப்பு ஏறாவூர் பிரிவிலுள்ள மிச் நகர் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர். ஏறாவூர் மிச்நகர் ஆயுர்வேத வைத்தியசாலை வீதியிலுள்ள வீடொன்றின் மீது கோஷ்டியொன்று தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் அந்த வீட்டு கதவு, யன்னல் மற்றும் தளபாடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டது. வீட்டிலிருந்தவர்கள் உறங்கிக்கொண்டிருந்த வேளை படலையை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த கோஷ்டியினர், உடைமைகளுக்குச் சேதம் ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தொடர் விபத்துக்களால் ஒருவர் மரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் ஒருவர் மரணமடைந்ததுடன், ஏழு பேர் காயமடைந்துள்ளனர். வந்தாறுமூலையில் [illegible] முச்சக்கரவண்டி [illegible] வீதியோரத்திலிருந்த மரமொன்றுடன் மோதியதினால், ஏறாவூர், மீராகேணியை சேர்ந்த மரக்கறி வியாபாரியான முஹம்மத் லத்தீப் பாறூக் என்பவர் சம்பவ இடத்தில் மரணமடைந்தார்.

மேலும், ஓட்டமாவடி [illegible] பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த காவல்துறை உத்தியோகஸ்தர்கள், பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை இடைமறிக்க முற்பட்டபோது, அம்மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி போக்குவரத்து பிரிவு உத்தியோகஸ்தர் ஒருவர் மீது மோதியதில் இருவரும் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை காவல்துறையினர் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருளுடன் பாவனையில்

### 16 வயது மாணவ, மாணவிகள்

ஆற்றங்கரையில் போதையில் இருந்த 6 மாணவர்களையும் அவர்களுடனிருந்த 3 மாணவிகளையும் நாவலப்பிட்டி காவல்துறையினர் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர். அட்டனிலுள்ள பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த இம்மாணவர்கள் கினிகத்தேனை பகுதியில் மகாவலிகங்கை ஆற்றங்கரையில் போதையில் இருப்பதாக பொதுமக்களினால் வழங்கப்பட்ட தகவலையடுத்து அங்கு சென்ற நாவலப்பிட்டி கால்துறையினர் அவர்களைக் கைதுசெய்து காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். உயர்தரத்தில் கல்வி கற்கும் இவர்கள் அனைவரும் பத்தொன்பது வயதுடையவர்கள். ஆறு மாணவர்களும் ஒரே பாடசாலையைச் சேர்ந்தவர்கள் எனவும் அதேபோன்று மாணவிகள் மூவரும் ஒரே பாடசாலையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இவர்களது பெற்றோர்களை அழைத்து அவர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவுரை வழிகாட்டல்களை வழங்கி வியாழன் இரவு 8 மணியளவில் இவர்களைப் பெற்றோரிடம் காவல்துறையினர் ஒப்படைத்துள்ளனர்.

## தேர்தல் விஞ்ஞாபனம் சர்ச்சையில்

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்டுள்ள சில விடயங்கள் இரு பிரதான கட்சிகளிடையே விவாதத்திற்கு உள்ளாகியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு இணைப்பு, சுயாட்சி, தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக சம்'டி ஆட்சியை தோற்றுவித்தல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனினும் இந்த விடயங்கள் நடைமுறைக்கு சாத்தியமற்றவை என எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். மேலும் பிரிவினைவாதத்தை கைவிட்டு வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொறுப்புக் கூற வேண்டிய கூட்டமைப்பும், அரசாங்கமும்

எதுமே கிடைக்காத உள்ளக விசாரணையொன்றின் மூலம் எமது மக்கள் நடுத்தெருவில் விடப்படுவதற்கு இலங்கை அரசிற்கு அப்பால் கூட்டமைப்பு முழுமையாக எமது மக்களிற்கு பொறுப்பு கூறவேண்டியிருக்கும். ஆட்சி மாற்றம் கோசத்தின் கீழ் கூட்டமைப்பே துரோகத்திற்கு பொறுப்பு கூறவேண்டியிருக்கும்.

என்றோ ஒருநாள் எமது மக்களிற்கு இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டிவரும். அப்போது இலங்கை அரசுடன் இணைந்து தமிழ் மக்களிற்கு செய்த துரோகத்திற்கு கூட்டமைப்பும் பொறுப்பு கூற வேண்டிவருமென எச்சரித்துள்ளார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவராக காணப்பட்ட கஜேந்திரகுமார் தனது வாயிலிருந்து ஒரு தடவை சுமந்திரனை முட்டாளெனவும் விவரித்தார்.

## போர்க்குற்ற விசாரணை அறிக்கை 21இல் கையளிப்பு

சிறிலங்காவின் யுத்தக்குற்றங்கள் குறித்து அறிக்கை அடுத்த மாதம் 21ம் திகதி சிறிலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கப்படவுள்ளது.

அரசாங்கத் தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணைக்குழு, சிறிலங்காவின் யுத்தக்குற்றங்கள் குறித்த விசாரணைகளை நடத்தியுள்ளது. இந்த அறிக்கை கடந்த மார்ச் மாதம் முன்வைக்கப்படவிருப்பதாக கூறப்பட்டிருந்தது. எனினும் இது காலம் தாழ்த்தப்பட்டு எதிர்வரும் செப்டம்பர் மாதம் முன்வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்த அறிக்கை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 21ம் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காவல்துறையினரை தாக்கிவிட்டு தப்பியோட்டம்

கடந்த புதன்கிழமை இரவு சீதுவ காவல் நிலையத்தைச் சேர்ந்த இரு காவல்துறையினர் கட்டுநாயக்க பகுதியில் சிவில் உடையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு காரில் வந்த இருவர் காரை நிறுத்தி அதன் இலக்கத் தகட்டை மாற்றுவதை அவதானித்துள்ளனர். ஏதோ ஒரு சட்டவிரோத செயலில் ஈடுபடுவதற்காகவே இவ்வாறு இலக்கத் தகட்டை மாற்றுவதை உணர்ந்த அவர்கள் அவ்விடத்திற்குச் சென்று வினவிய போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தகராறு முற்றவே இருவரும் கம்புகளினால் கால்துறையினரை தாக்கியதுடன் காரை அங்கே விட்டுவிட்டு அவர்களின் இரு மோட்டார் சைக்கிள்களையும் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். அவர்களது காரில் ஆயுதங்கள் இருந்துள்ளது.


விசாரணை நடத்திய சீதுவ காவல்துறையினர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள்களை மினுவாங்கொடை மற்றும் யடியன பகுதிகளிலிருந்து மீட்டுள்ளனர். மற்றைய சந்தேக நபரைக் தேடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## த.தே.கூ பொய்ப் பிரச்சாரம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்குப் பின்னர் வர இருக்கின்ற யோசனையில், இனப் பிரச்சினைக்கான தீர்வு அல்லது நல்லிணக்கம் என்பது இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என மனித உரிமைகள் பேரவை கூறவுள்ளதாக வதந்தி வந்திருக்கிறதெனவும், இந்த வதந்தியை வைத்துக்கொண்டு உள்ளகப் பொறிமுறை ஒன்றின் மூலம் தீர்வு காண தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இணங்கியுள்ளதாகப் பொய்யான பிரசாரம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ள தெனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.



## மீளாய்வு பெறுபேறுகள் வெளியீடு




2014 க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேற்றின் மீளாய்வு பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் படி www.doenets.lk என்ற இணையத்தளத்தில் தமது சுட்டெண்ணை பயன்படுத்தி மீளாய்வு பெறுபேறுகளை பார்வையிட முடியுமென பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் கடந்த ஏப்ரல் மாதம் வெளியாகியதுடன் அதனைத் தொடர்ந்து பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதன்படி மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட பெறுபேறுகள் தற்போது இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இதேவேளை மீளாய்வுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பெறுபேறுகள் அவர்களின் பாடசாலைகளுக்கு மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அவர்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## விக்னேஸ்வரனை பிறகு பார்த்துக் கொள்வோம்

### இரா.சம்பந்தன்

நாடாளுமன்றத்தில் பிரச்சாரம் செய்யப்போவதில்லை என்ற வட மாகாண முதல்வரின் நிலைப்பாடு குறித்து தேர்தலுக்குப் பிறகு பேசுவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்காக பிரச்சாரம் செய்யப் போவதில்லையென்று வடக்கு மாகாணத்தின் முதலமைச்சரான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் விடுத்திருந்த அறிக்கையில், "கூட்டமைப்பினர் என்னை வட மாகாண முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்திருந்தாலும் அவர்களது தேர்தல் களங்களில் அக்கட்சி வேட்பாளர்களுக்காக பேசுவது எனக்கு அழகல்ல" என்று தான் கருதுவதாகக் கூறியிருந்தார்.

போருக்குப் பின்னரான புனர் நிர்மாண நடவடிக்கைகள் மக்களின் தேவைகளை அனுசரித்து நடத்தப்படாமல் தான் தோன்றித்தனமாக நடைபெற்று வருவது மனவருத்தத்தைத் தருவதாகவும் விக்னேஸ்வரன் தனது அறிக்கையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## பெரும் சர்ச்சையை எழுப்பும் அகதி விவகாரம்

அமெரிக்காவின் மனித உரிமைத் துறை அமைச்சகம் சமீபத்தில் நவீன அடிமைத்தனம் என்ற வருணனையுடன் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் அகதிகள் விவகாரத்தை மிகவும் மோசமாகக் கையாளும் நாடுகளின் 3-ஆம் பிரிவில் தாய்லாந்து, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இடம் பெற்றுள்ளது. ஆனால், அமெரிக்காவுடன் வர்த்தக உறவை மேம்படுத்தி வரும் மலேசியா, மற்றும் பரம எதிரியாக இருந்து தற்போது அமெரிக்காவுடனான உறவைப் புதுப்பித்து வரும் கியூபா ஆகிய நாடுகள் 3-ஆம் பிரிவிலிருந்து, அகதிகள் விவகாரத்தை ஓரளவு சரிவரக் கையாளும் நாடுகளின் 2-ஆம் பிரிவுக்கு உயர்த்தப்பட்டுள்ளன.

இந்த அறிக்கைக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளன. மேலும், அகதிகள் விவகாரம் குறித்த அறிக்கையை அமெரிக்க அதிபர் ஒபாமா அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துகிறார் என்ற சர்ச்சையை எழுப்பியுள்ளது.

## போலி அப்பிள் நிறுவனம் முற்றுகை



அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் தொலை-பேசிகளைப் போன்ற, போலியான தொலை-பேசிகளை உற்பத்தி செய்து வந்த தொழிற்சாலையொன்று, சீனாவில் முற்றுகை-யிடப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தொழிற்சாலையிலிருந்து, 41,000 போலி அப்பிள் ஐபோன்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. போலியான தொலைபேசிகளை, மீளப் பொதியிட்டு, சந்தைக்கு அனுப்பும் பணியில், இங்கு நூற்றுக் கணக்கானோர் ஈடுபட்டு வந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

## மாரடைப்பின் போதும் கடமை உணர்வு

பிரித்தானியாவில் 69 வயதான புகைப்படக்காரர் ஒருவர் படம்பிடித்துகொண்டிருந்தபோது, அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு மர்ம நபர்கள், அவரிடம் இருந்த கமெராவை பறிக்க முயன்றுள்ளனர்.

இந்த அதிர்ச்சியில் புகைப்படக்-காரருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது, இருப்பினும், மோட்டார் சைக்கிளில் வந்த அந்த மர்ம நபர்களை அவர் புகைப்படமெடுத்து அதை காவல்துறையிடம் ஒப்படைத்துள்ளார். தற்போது உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

அப்பகுதி மக்கள் பயமின்றி பூங்காக்களுக்கு வருவதற்கு உதவும் வகையில், அந்த திருடர்களை உடனடியாக கைது செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## காவல்துறையை கத்தியால் மிரட்டிய கைதி

பிரித்தானியாவில் கைது செய்ய வந்த காவல்துறையினரை கத்தியை காட்டி மிரட்டிய மனிதரின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியாவின் நாட்டிங்கம்சியர் பகுதியில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்று தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி இரு கால்துறைஅதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்றுள்ளனர்.

அங்கு லீ விக்கெர்ஸ் என்பவர் கையில் கத்தியுடன் தனது வீட்டின் முன் நின்றுகொண்டிருந்தார். காவல்துளையினர் அவரை கத்தியை கீழே போடுமாறு கூறினர்.



ஆனால் அவர் கத்தியுடன் அவர்களை ஆவேசமாக தாக்க முயற்சி செய்துள்ளார். எனினும் சாமர்த்தியமாக செயல்பட்டு அவரை மடக்கி பிடித்தனர். கைது செய்யப்பட்ட அவருக்கு நீதிபதி மூன்றரை ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய கட்டிட அத்திவார பணியால் 4 மாடி சரிந்தது

விஷ்ணு கார்டன் பகுதியில் 4 மாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந்தனர். 15 பேர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இடிபாடுகளை அகற்றி அதில் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணிகளில் எட்டு தீயணைப்பு வாகனங்களில் வந்த வீரர்கள், தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், உள்ளூர் காவல்துறையினர், அதிகாரிகள் என ஏராளமானோர் ஈடுபட்டுள்ளனர்.



அருகில் புதிய கட்டடம் கட்ட அதிக ஆழத்திற்கு அஸ்திவாரம் தோண்டியதால் தான் அந்த 4 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## சிறுவனுக்கு கிடைத்த அதிஷ்டம்

துருக்கியில் சிரியாவில் இருந்து வந்த அஹ்மத் ஹமாடொ (13) என்ற அகதிச் சிறுவன் திசுக்கள் விற்கும் தொழிலை செய்துவந்துள்ளான். சம்பவம் நடைபெற்ற அன்று, அப்பகுதியில் இருந்த ஒரு ஹொட்டலின் முன்பு நின்று கொண்டிருந்த



ஒரு பெண்ணிடம், அஹ்மத் திசுக்களை விற்றுக்கொண்டிருந்த போது ஹொட்டலின் உரிமையாளர் தமது வாடிக்கையாளர்களை தடுப்பதாக கூறி அஹமத்தை பிடித்து கண்மூடித்தனமாக தாக்கியுள்ளார். இதைக் கண்ட அத்தெருவில் உள்ள சிரியாக்காரர்கள் விரைந்து வந்து அச்சிறுவனை மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தகவல் வெளியானதும் துருக்கி அரசு உடனடியக அந்தச் சிறுவனின் குடும்பத்தை அழைத்து அவர்களுக்கு ஆடம்பர ஹொட்டல் ஒன்றில் 3 நாட்கள் விடுமுறையை கழிக்க ஏற்பாடு செய்ததுடன் அஹமத்தின் தந்தைக்கு போதிய வேலை தேடித்தருவதாகவும் உறுதியளித்தனர்.

இஸ்மிர் பகுதியில் தங்கியிருக்கும் 6 லட்சத்திற்கும் அதிகமான சிரியா அகதிகளுக்கு சொந்தமாக வீடு எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.எஸ்.ஐ ஆல் தமிழகத்துக்கு ஆபத்து

தமிழகத்தில் தீவிரவாதத் தாக்குதல் சம்பவங்களை முறியடிக்க அவ்வப்போது அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு தீவிரவாதத் தாக்குதல் சம்பவங்கள் அதிகமாக நடைபெறுவது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் அவ்வப்போது சிறு சிறு அசம்பாவித சம்பவங்கள் நடைபெறுவது தவிர்க்க முடியாததாகவே இருந்துவருகிறது. இந்நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் தமிழகத்துக்கு ஆபத்து இருப்பதாக மத்திய உளவுப் பிரிவு காவல்துறையினர் சமீபத்தில் எச்சரிக்கைத் தகவல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.



இதையடுத்து மாநிலம் முழுவதும் காவல்துறை உஷார் படுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பாக உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது் இது வழக்கமான எச்சரிக்கைத் தகவல்தான். அவ்வப் போது இதுபோன்ற தகவல்களை மத்திய உளவுப் பிரிவு அதிகாரிகள் அனுப்பிவைத்துக் கொண்டேயிருப்பார்கள். தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்றார்.

## "நான் போகவே மாட்டேன்" என்கிறார் திரிஷா

இப்போது மட்டுமல்ல எப்போதுமே அரசியலில் இறங்கும் திட்டமில்லை என்று நடிகை த்ரிஷா தெரிவித்திருக்கிறார். தமிழ்த் திரையுலகில் முன்னணி நடிகைகள் பலரும் அரசியலில் களம் கண்டு வருகிறார்கள். பல்வேறு கட்சிகளில் இணைந்து பணியாற்றி வருகின்றார்கள். இந்த நடிகைகள் வரிசையில் த்ரிஷாவும் அரசியலில் இறங்க இருக்கிறார் என்று செய்திகள் வெளியானது. தனது ட்விட்டர் பக்கத்தில் ஜெயலலிதாவிடம் த்ரிஷா விருது வாங்குவது போன்ற புகைப்படத்தை மாற்றி இருந்தார். இதனால் அ.தி.மு.க.வில் இணையப் போகிறார் த்ரிஷா என்ற செய்திகள் இணையத்தை வட்டமிட்டன. இச்செய்திக்கு த்ரிஷா மறுப்பு தெரிவித்திருக்கிறார்.



'சமீபத்தில் வெளியாகி இருக்கும் செய்திகள் போல நான் அரசியலில் எல்லாம் சேர திட்டமிவில்லை. இப்போது மட்டுமல்ல, எப்போதுமே அந்த எண்ணம் எனக்குக் கிடையாது' என்று தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணையடி நீ எனக்கு...



26

– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

தொடர் நாவல்

–மறுக்கப்படுவதற்காகவோ
பிறப்பெடுத்தன என் கனவுகள்
என் மனப் பிரபஞ்ச விளிம்பில்
உன் நினைவுகளைப் பரப்பி
ஆரம்பம் இதுவென நீ சொன்னாய்
இதுவரையும் அது
ஆரம்பமாகவே...
எனக்கான முடிவு தெரியவில்லை
நான்
என்ன செய்யட்டும்
என்னைப் பார்த்து
பரிதாபப்பட்டு பறக்கும்
அந்த சின்னஞ்சிறு பறவையுடன்
நானும் சேர்ந்து பறக்கவா
இல்லை
நீ சொல்ல
ஏதும் மீதமிருக்கிறதா.
சொல்
காத்துக்கிடக்கிறேன்.–

– பிரபஞ்சப் பிரியன் –

வடக்கு யுத்த நிலைமையின் தாக்கம் கிழக்குக்கும் பரவத் தொடங்கின. இளைஞர்களும், யுவதிகளும் வெளியில் அதிகம் நடமாட அச்சப்பட்டனர். யுத்த பூமியில் வெந்து போன மண்ணாக வடகிழக்கு மண் தீக்குளித்து கொண்டிருந்தது.

யாழ் நகரில் ஏற்பட்ட மக்கள் அவலம் குறித்து பல கண்டனக் குரல்கள் எழும்பின கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் சார்பில் தமது எதிர்ப்பைக் காட்டவென மாணவர்கள் பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கினர்.

வீதி மறியல் போராட்டம், கண்டனக் கூட்டம் என பல்வேறு நடவடிக்கைகளை தொடக்கிவிட்டு தமது தார்மீக எதிர்ப்பைக் காட்டினர்.

கிழக்கு மக்களின் உணர்வுகளை மலுங்கடிக்கும் வகையில் பல இடங்களில் தொடர்ச்சியாக கைதுகளும், சுற்றி வளைப்புகளும் நடந்தேறிக் கொண்டிருந்தன. நாடே யுத்த சன்னதம் கொண்ட நிலைக்கு மாற்றமுறும் வகையில் தாகம் பெரிதாக இருந்தது.

மாணவர் மத்தியிலும் சில துடிப்புள்ள மாணவர்கள் சேர்ந்து வட கிழக்கில் யுத்தம் என்ற போர்வையில் பொது மக்கள் பாதிக்கப் படுவது தொடர்பாக அதற்கு எதிரான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்து செயற்பட்டனர்.

அன்று மாலை ரதன் பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் சக மாணவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது பவித்திரா ஓடி வந்தாள்.

'ரதன் நிவேதாவும் சுகந்தியும்.... வந்தாறுமூலை வாசிகசாலைக்கு போனவங்க வரும்போது ... வழியில் நின்று இராணுவத்தினர்... விசாரித்த வங்களாம்... இன்னும் வரல்ல... எனக்கென்றா பயமாயிருக்கு... ஒருக்கா விசாரித்து பார்ப்பமா...?

பவித்ரா வந்து சொன்னதுதான் தாமதம் ரதனும் அவனது நண்பர்களும் உடனே புறப்பட்டு ஹொஸ்டல் வார்டனை சந்திக்கச் சென்றனர். மாலை ஐந்து மணியாகி விட்டிருந்ததால் பல்கலைக்கழக ஊழியர்கள் அனைவரும் மட்டக்களப்பு நகரில் உள்ள தமது இல்லங்களுக்கு புறப்பட்டு போயிருந்தனர். எனவே அவர்களுக்கு உபவேந்தரையோ, பதிவாளரையோ சந்திக்க முடியவில்லை. ஆண்கள் விடுதியின் சப் வார்டனாக இருந்தவர் விஞ்ஞான பீட விரிவுரையாளராக இருந்தார். அவர் உடனே தொலைபேசி மூலம் உபவேந்தருடனும், பதிவாளருடனும் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கிவிட்டு நிவேதாவும், சுகந்தியும் தங்கியிருந்த பெண்கள் விடுதி சப் வார்டனையும் ரதன் உட்பட ஓரிரு மாணவர்களையும் அழைத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த இராணுவ முகாம் பொறுப்பதிகாரியை சந்திக்கச் சென்றனர். ஆனால் அவரை உடன் சந்திக்க முடியவில்லை. மாலை ஆறு மணிக்கு பின்னரே அவரை சந்திக்க முடிந்தது.

அவரிடம் நிலைமையை விளக்கிச் சொல்லவும் அவரிடம் இருந்து வந்த பதில் ஏமாற்றமாகவே இருந்தது.

'தங்கள் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அப்படி ஒருவரையும் கைது செய்யவில்லை என்றும் வேறு முகாம்களைச் சேர்ந்தவர்கள் அழைத்துச் சென்றிருக்கலாம், விசாரித்து பார்க்கிறேன்'. என்றவர் அவர்களை காத்திருக்கச் சொன்னார். அதற்கிடையில் உபவேந்தரின் முயற்சியால் மட்டகளப்பு நகரில் இருந்து மாவட்ட இராணுவ பொறுப்பதிகாரி மற்றும், காவல்துறை அதிகாரிகள் மட்டகளப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரின் தொலைபேசிகள் அழைப்புக்கள் அங்கு வரத்தொடங்கின. அழுத்தம் அதிகமாகத் தொடங்க.... மும்முரமாக செயற்பட்ட பொறுப்பதிகாரி வெளியே வந்து "உங்கட ஸ்ருடன்சை விசாரணைக்கு என அழைத்துப் போயிருக்காங்க... நீங்க போங்க..... அவங்க கொண்டு வந்து விடுவாங்க என்றார்"....

அதைக் கேட்க..... ரதனுக்கும் அவனது நண்பர்களுக்கும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.....

"ஏன் அவங்கள்ட கம்பஸ் அடையாள அட்டை இருந்தது தானே.... பின் ஏன் கைது செய்தாங்க.......?"

வார்டன் ஆங்கிலத்தில் கேட்க, அந்த அதிகாரிக்கு சரியான பதில் சொல்ல முடியவில்லை.

"ஏதாவது சந்தேகம் இருக்கலாம்..... அது தான் கொண்டு போயிருக்காங்க..... பிரச்சினையில்லை இப்ப கொண்டு வந்து விடுவாங்க..... நீங்க போகலாம்...." என்றவர் தான் புறப்பட ஆயத்தமானார். அதற்கு மேல் அங்கு நிற்பது எதுவித பலனையும் அளிக்காது என்பது அவர்களுக்கு புரிந்தது. அவர்கள் எவ்வளவு கேட்டும் அவர்களை எந்தப்பகுதி முகாமை சேர்ந்தவர்கள் அழைத்து போனார்கள் என்பதை அவர் வெளிப்படுத்த விரும்பவில்லை. அழைத்து சென்றதை நேரில் கண்ட சாட்சியாக பவித்ரா சாட்சி சொன்னதால் அதனை அவரால் மறுக்கவும் முடியவில்லை.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

இரவு 8 மணி இருக்கும் கிழக்குப் பல்கலை கழக வாசலில் ஒரு ஜீப் வந்துநின்றது. அதிலிருந்து நிவேதாவையும் சுகந்தியையும் இறக்கி விட்டு அந்த ஜீப் பறந்து போனது. எப்படியாவது அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையில் அந்த கைதுக்கு எதிராக நாளை பல்கலைக்கழகத்தில் நடாத்த வேண்டிய ஆர்ப்பாட்டம் தொடர்பாக ரதனும் ஏனைய மாணவர்களும், மாணவிகளும் சேர்ந்து கலந்துரையாடி கொண்டிருந்தனர். அவர்களுடன் ஹொஸ்டலில் தங்கியிருந்த சில விரிவுரையாளர்களும் சேர்ந்து ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருந்தனர்.

தூரத்தே நிவேதாவும், சுகந்தியும் ஹொஸ்டலை நோக்கி வருவது வீதி வெளிச்சத்தில் காணக்கூடியதாக இருந்தது. அனைவரும் ஹொஸ்டல் வாசலுக்கு வந்தனர்.

நிவேதாவைக் கண்டதும் தான் ரதனின் முகம் விடிந்தது ஆனால் அவள் முகத்தைப் பார்க்க வழமையாக இருக்கும் அந்த தேஜஸ் இல்லாமல் இருந்தது. ஏதோ சோகம் அப்பிக் கிடந்தது. சுகந்தியை விடமிகவும் மோசமாக நிவேதா காணப்பட்டாள். அந்த நேரத்தில் அவர்களிடம் அதிக கேள்விகளை கேட்டு அவர்களை மேலும் களைப்படைய செய்ய அவர்கள் விரும்பவில்லையாயினும் ஆவலை அடக்க முடியவில்லை.

பெண்கள் விடுதி மேற்பார்வையாளரான பெண் விரிவுரையாளரே அவர்களிடம் கேட்டார், "நிவேதா ஏன்....... உங்களை கொண்டு போனவங்க.....?" நிவேதா பதில் சொல்லவில்லை. கீழே எதையோ வெறித்துப் பார்த்தவளாக இருந்தாள்.

சுகந்தியே கூறினாள். "மிஸ்..... அவங்க நிவேதாவை பற்றி தான் விசாரித்தவங்க... கம்பஸ்ஸில் கூட்டம் வைத்தது தொடர்பாகவும் ஏதோ விசாரிக்க வேண்டும் என்று தான் கூட்டி போனவங்க. நானும் கூட பேரயிருந்ததால் என்னையும் கூட்டி போனவங்க........."

"எந்த இடத்திற்கு கூட்டி போனவங்க எண்டு தெரியுமா?

"தெரியல மிஸ்.... ஜீப்புகுள்ள ஒரே இருட்டாக இருந்தது. பாதை தெரியலை.... அநேகமா வாழைச்சேனை பக்கமாகத்தான் இருக்க வேணும்"

"விசாரணை எப்படி இருந்தது......?"

"எனக்கு குறைவு தான் ஆனால் நிவேதாவைத்தான் தனிய கூட்டி போய் விசாரிச்சாங்க......"

அதற்கு மேல் அவர்களிடம் ஒன்றும் கேட்கவில்லை. விடிந்த பின்னால் விசாரித்து கொள்ளலாம் என்ற முடிவில் "சரி சரி ரூமுக்கு போய் ரெஸ்ட் எடுங்க என்றவர் உப வேந்தர் பதிவாளர் ஆகியோருக்கும் தொலை பேசி எடுத்து நிவேதாவும் சுகந்தியும் வந்தது பற்றி கூறத் தொடங்கினார்.

மறுநாள் கிழக்குப் பல்கலைக்கழகம் ஸ்தம்பிதம் அடைந்தது போல் காணப்பட்டது. நேற்றைய நிகழ்வை கண்டிக்கும் முகமாக மாணவர்கள் அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருந்தனர். விரிவுரைகள் ஒன்றும் நடைபெறவில்லை. மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்த வேண்டிய தேவை நிர்வாகத்திற்கும் இருந்ததால் நிர் வாகமும் மாணவர்களுக்கு சார்பாக செயற்பட்டது.

பொது மக்களுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் தெரிவிக்கும் முகமாக மாணவர்கள் நேற்று நடந்த கைதினை விரிவாக எழுதி துண்டுபிரசுரமாக அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகித்தனர். மாணவர் பிரதிநிதிகளும் நிர்வாகமும் கூடிக் கதைத்து அவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு தரப்புடன் கதைப்பது என தீர்மானிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் மும்முரமாக மேற் கொள்ளப்பட்டன.

பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களும் விரிவுரையாளர்களும் கூடியிருந்த அந்த இடத்தில் நிவேதாவைக்க காண முடியவில்லை. "இப்போ வருவாள் வருவாள்" என எதிர்பார்த்திருந்த ரதனுக்கு அவள் வராதது. சந்தேகமாக இருந்தது. நேற்றைய நிகழ்வின் பாதிப்பில் இருந்து அவள் விடுபடவில்லையோ அல்லது எதுவும் சுகவீனமா என்பதை அறிய மனம் அவா கொண்டது. பவித்ராவைக் கண்ட அவன் அவளிடம் சென்றான். கூட்டமாக நின்று கதைத்துக் கொண்டிருந்த பவித்ராவும் சுகந்தியும் ரதனைக் கண்டதும் ரதனிடம் வந்தனர்.

"பவித்ரா .. நிவேதா வரலையா..?"

"இல்ல ரதன்... அவளுக்கு சரியான தலையிடி ரூமில்தான் படுத்திருக்கா... இரவெல்லாம்... அழுதழுது நித்திரையும் இல்ல..." பவித்ரா சொல்லவும் சுகந்தியும் சேர்ந்து கொண்டாள்.

"ரதன் நீங்க ஒரு முறை போய் பார்த்தீங்கன்னா நல்லது... நாங்க எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்பதாக இல்லை. பார்க்க பாவமா இருக்கு .." சுகந்தி சொல்லவும் "நான் போய் பார்க்கிறேன்.." என சொல்லியபடி ரதன் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு பல்கலைக்கழகத்தில் இருந்து பெண்கள் விடுதியை நோக்கி விரைந்தான்.

விடுதியில் ஒருவரும் இருக்கவில்லை. அன்றைய ஆர்ப்பாட்ட நிகழ்வுக்காக அனைத்து மாணவர்களும் மாணவிகளும் பல்கலைக்கழகம் சென்றிருந்ததால் விடுதி வெறுச் சோடிப் போயிருந்தது. வழமைபோல் இந்த நேரத்தில் விடுதியையும் வளவையும் கூடிப் பெருக்குவதற்கென வரும் வேலைக்கார பெண்மணி மட்டும் வளவை பெருக்கிக்கொண்டிருந்தாள். விடுதி வளவுக்குள் நின்ற வாகை மரத்தடியில் தனது சைக்கிளை நிறுத்தி விட்டு விடுதிக்குள் சென்ற ரதன் நிவேதாவின் ரூமை நோக்கி சென்று "நிவேதா" என அழைத்தபடி கதவைத் தட்டினான். வழமையாக நிவேதாவை சந்திக்க வரும் போது முன் பக்கத்தில் உள்ள விருந்தினர் அறையில் வைத்தே சந்திப்பது வழக்கம். பெண்களின் ரூமுக்குள் செல்வதற்கு ஆண்களுக்கு அனுமதி இல்லை. ஆனால் அன்றைய நிலை நிவேதாவை அழைப்பதற்கு யாரும் இல்லாத நிலையில் ரதன் உள் சென்றான்.

கதவு பூட்டப் படாமல் இருந்ததால் தானாகவே திறந்து கொண்டது. உள்ளேயிருந்த கட்டிலில் நிவேதா சுருண்டு படுத்திருந்தாள். அருகில் சென்ற ரதன் "நிவே" என அழைத்தபடி அவளது தோளைத் தொட்டு திருப்பினான். அவள் அழுது கொண்டிருக்க வேண்டும் அவன் திருப்பியதும் தான் தாமதம்... விம்மி விம்மி அழத் தொடங்கினாள். கண்கள் சிவந்து முகம் கோவைப் பழம் போல் இருந்தது. தலைமுடி கலைந்து பொட்டும் அழிந்து அவளைப் பார்க்க அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

தான் அணு அணுவாக பார்த்து ரசித்த முகம். மஞ்சள் பூசி பூசி உடம்பே மஞ்சளாகி விட்டதைப் போன்ற தங்க நிறத்தில் அழகு தேவதையாக வலம் வந்தவள் இன்று சிதைந்த ஓவியத்தைப் போல் இருப்பதைக்காண அவனுக்கு என்னவோ செய்தது.



மேலும்... ... ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## இருட்டை எழுதும் முனைவு

இருட்டை எழுத
முனைகிறது - என்
பேனா

முனைவின் போது
வெந்நிறத் தாளில்
தன் நிறம் கொண்டு
வரிகள்......
இருட்டை வரைய
முயலும்

இருட்டை
இருளினுள்
இருந்து எழுதும்
என் முயற்சி...

இருளின் நிறத்தை
உணர... உணர
வெண்நிறத் தாளில்
தன்னிறம் கொண்டேகும்
என் கோல்
இருட்டை வரையும்
முயற்சியில்
தொடர்பற்ற சலனங்களை
அலங்கோலக் கோடுகளாய்
கிழிக்கும்.....

இருளின் இருட்டை
உணர ... உணரப்
பயம்....

அக்
காரிருள் நிறம்
அரக்க வடிவம் பூண்டு
அருகில் வரும்....
பாசக் கயிறு ஏந்தி

இருளின் உரிமையாளர்கள்
என் முன்னே... இதோ
இதோ..... இதோ......
உங்களுக்குத் தெரியாது....
அவர்கள் என்னருகில்
இருப்பதை..... இருள்
அதை மறைக்கும்.....

ஐயோ.... இதோ
இதோ.... என்னருகில்
இருளின் உரிமையாளர்கள்....

எனைக் கேள்வி கேட்கிறார்கள்..

நீ.. யார்? இருட்டை வரைய...

கெக்கலிக்கும் அவர்களின்
சிரிப்பு...
வெண்நிறத் தாளில்
நான் வரைய முயன்ற
இருட்டின் கிழிப்புக்களைக்
கேலி செய்கின்றன...

உன்னாலும் முடியாது
இருட்டை வரைய....
முயன்றோர் எல்லாம்
இருட்டின் கறுப்பில்
கரைந்து போனார்கள்
உன்னால் முடியாது
இருட்டை வரைய

இருட்டை வரைய
முடியாதென் விரல்கள்
நசுங்கிப் போயின...

என் ஓலக்குரலை
இரசித்த வண்ணம்
இருள் - கரைகிறது
அந் நாளில்...

விடியலில் நான்
தொலைந்து போயிருந்தேன்....

அனாதரவாய்
அவ்வறையில்
ஓர் எழுதுகோல்
வெற்நிறத் தாள்...
ஓரிரண்டு
இரத்தத் துளிகள்......

- மாயன் -

## வென்றிடுவோம்!

சிந்தனை தான் இல்லாமல்
சீரழியும் சமூக மதை
நிந்தனைகள் செய்வ தனால்
நிச்சயமே செய மில்லை!
நல்வழியில் பயணிக்கும்
நயமான திட்டங்கள்,
சொல்லும் வகை செய்வோம்:
செயலாலே வென்றிடுவோம்!

ஒற்றுமையை ஒழுக்க மதை
ஓம்புகின்ற படிப்பி னையை,
கற்பதற்கு இடம ளித்து
கயமைஇருள் தனை ஒட்டி,
மற்றரும் மனித ரெனும்
மனநிலையை உருவாக்கும் -
பெற்றோராய் நாமி ருந்து
பிள்ளைகளை வளர்த் திடுவோம்!

கல்விபயில் கூடத்தும்
கலை ஓங்கு மாடத்தும்
வல்லஇறை ஆல யத்தும்
வருகின்ற சிறிசு களை
நல்வழியில் கால்ப திக்க
நலமான திட்டங்கள் -
சொல்லும் முறை செய்வோம்
சுதந்திரத்தை வென்றி டுவோம்!

அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு

## தலையிடிக்கு கைமருந்து

வெற்றிலைச் சாற்றில்
வேர்க் கொம்பை உரைத்து
நெற்றியில் தடவினால்
நிற்கும் தலையிடி!

வேலிப் பருத்தி சாற்றில்
வேற் கொம்பை உரைத்து
தலையிடிவர நெற்றியில்
தடவினால் நிற்கும்!

கற்பூரத் தூளுடன்
வெற்றிலை சாற்றில்
கலந்து சூடாக்கி
நெற்றியில் போட
நிற்கும் தலையிடி!

ஒருத்தலைப் பாக்கை
உரைத்துப் பூசினால்
ஒரு பக்கத் தலையிடி
வருத்தங் குறையும்!

- சேனையூரான்

## ஓர் ஏமாற்றுப் பாட்டு

இரவுகளில் உன் நினைவுகள் என்னைச் சுற்றுகின்றன
ஆறு தன்னுடைய நிலையான ஒப்பாரியைக்
கடலோடு சேர்ந்து இசைக்கிறது
உதய நேரத் துறைமுகம் போல
எதுவும் இல்லாமல் ஆயிற்றே.

இது பிரிவின் வேளை
ஓ! பிரிந்து சென்றவளே!
குளிர் மலரின் முகங்கள் அனைத்தும்
என் நெஞ்சில் சாராலாகின்றன.
ஓ! எருக்குளியே நீ
கப்பலையும் மூழ்க வைத்த பயங்கரக்
கெவியாகி விட்டாய்.

நூல் : மறுபாதி
-[illegible] மைதீன்-
[illegible] - 2002

## இரவுடனான கடவுளின் முடிவு

இந்த மாலைப் பொழுது
மரணம் புதைந்த
நிசப்தங்களை இரவுகளாக்கி
புறப்படுகின்றது

ஊரை விழுங்க
காத்திருக்கும் கடல்
அதில் விழப்போகும் நிலவு
புற்று நீங்கிய பாம்புகள்
எல்லாமே ஒருவிதமாக வாழ்வை
எச்சரிக்கத்தான் செய்கின்றன

இவ் மாலைப் பொழுதின்
மரண வெளிகளுடாக
குறித்த இரவை நோக்கிய
அபத்தம் நிறைந்த வாழ்க்கை
முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது

சத்தமில்லாமல் பெய்யும்
பனிபோல அந்த இரவு
இன்னும் சற்று நேரத்தில்
வரப்போகிறது

புரிய முடியவில்லை
கடவுளின் குறி
இனி என்னவாக
இருக்கப் போகின்றதென்று

தி.பவித்திரன்,
நூல் : குறியடல்

## நூறாண்டு

தமிழே தமிழே தேடி வா.
தரமாய் 'அறிஞன்' ஆக்க வா!
அமுதே அழகே அணைக்க வா.
அறியாதவை அறிவிக்க வா !

மூல மொழியே முன்னே வா.
முதலில் புவியில் வந்தாய் - வா!
காலம்போமுன் கடிதில் வா.
கற்றிடச் செய்யும் நோக்கில் வா !

நெருப்பும் நீரும் அழித்தனவோ ?
நிலக்கறையானும் அரித்ததுவோ !
திருப்பு முனையாய்ச் செழித்தே வா !
திருவே கருவே சிறப்புற வா !

வந்தால் இயங்கும் தலை மூளை.
வாராவிட்டால் வெறு முண்டம் !
தந்தால் வாழ்க்கை நூறாண்டு
தாராவிட்டால் சிலநாளே !

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தோற்பதற்கு வேட்பாளர் தேடும் அதிசய நாடு"

ஓர் பார்வை

"பகலவன்"

உலகிலேயே தோற்பதற்காக வேட்பாளர்களைத் தேடும் நாடு ஒன்றுண்டானால் அது இலங்கை தான். இந்தத் தேர்தல் முறையில் சில விடயங்களுக்குத் தீர்வு காணாத நாடும் இலங்கையே தான். அது மட்டுமல்ல இரட்டை நீதி வழங்கப்படுவதும் இங்கே தான்.

1989 இல் ஈழவர் ஜனநாயக முன்னணி எனும் அமைப்பு (ஈரோஸ்) சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டது. இது யாழ்ப்பாணத்தில் 7, திருமலையில் 2, மட்டக்களப்பில் 1, வன்னியில் 1, தேசியப்பட்டியல் 1, என 12 ஆசனங்களைக் கைப்பற்றியது. இந்த அமைப்பு 1990 இல் புலிகளுடன் இணைந்து கொண்டதும் நாடாளுமன்ற ஆசனங்களைத் துறந்தது. அப்போது தான் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு குழுவின் உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாகப் பதவி துறந்தால் அடுத்து என்ன செய்வது என்பது குறித்து இலங்கைத் தேர்தல் சட்டத்தில் இடமில்லை என்பது புரியவந்தது.

**சிங்கக் கொடியை ஆட்டிவிட்டு நான் பத்திரகாளியின் பக்தன் அதனால் தான் ஆட்டினேன் என்கின்றார் சம்பந்தன் ஐயா**

1994 தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மூலம் எப்படியோ நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய இராமேஸ்வரன் சகோதரர்கள் பின்னர் தலைமையுடன் முரண்பட்டார்கள். இவர்களைக் கட்சியில் இருந்து நீக்கியது தலைமை. அதன் மூலம் அவர்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்தார்கள். தமது பிரதிநிதித்துவத்தைத் தக்கவைக்க இவர்கள் என்னென்ன-வெல்லாமோ செய்து பார்த்தனர் முடியவில்லை. ஆனால் எதிர்க்கட்சியில் இருந்து ஆளும் கட்சிக்கு மாறும் எவரும் தமது பிரதிநிதித்துவத்தை இழக்கவில்லை. ஏற்கெனவே கட்சித் தாவல் சட்ட மூலம் இருக்கிறது. ஒருவர் குறிப்பிட்ட ஒரு கட்சி மூலம் தெரிவாகிய பின்னர் அணி மாறினால் தனது பிரதிநிதித்துவத்தை இழப்பார் என்று சட்டம் சொல்கிறது.

ஆனால் எதையும் தனது தேவைக்காக மாற்றும் வல்லமை படைத்தவராக விளங்கிய ஜே.ஆர் மட்டக்களப்பு எம்.பி இராசதுரை கட்சி மாறிய போது அமைச்சர் பதவி வகிக்கும் ஒருவர் மீது கட்சித் தாவல் சட்டமூலத்தில் நடவடிக்கை எடுக்க முடியாது என்றொரு நிலையைக் கொண்டு வந்தார். அதன் மூலம் இராசதுரையின் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட்டது. கட்சி மாறிய ஒருவர் மீது தலைமை நடவடிக்கை எடுக்க முடியும் போது அவர் நீதிமன்றம் மூலம் இடைக்காலத் தடை பெறுவார். இது தொடர்பான விசாரணைகள் இழுபட்டு நாடாளுமன்றம் கலையும் வரை அவரது பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும்.

அடுத்தது தோற்பதற்காக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது. இதைப் பற்றி விளக்கமாக அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். வலம்புரி நாளிதலும் தனது ஆசிரியர் தலையங்கத்தில் இதனைக் குறிப்பிட்டிருந்தது. இதற்கான உதாரணங்கள் பல உள்ளன. இதனை ஆரம்பித்து வைத்தவர் ஜே.ஆரின் மருமகன் ரணில் 1994 இல் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட திருமதி.ஹேமா பிரேமதாஸ முயற்சித்தார். இதற்கென முறைப்படி என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்தார். இதில் ஏதும் பிரச்சினை இருப்பதாக கட்சித் தலைவர் ரணில் முதலில் எதுவும் சொல்லவில்லை. ஹேமா நம்பிக்கையுடன் செயற்படும் வரை அமைதியாக இருந்தார். நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் தினத்தன்று தனது ஆதரவாளர்களுடன் கொழும்புக் கச்சேரிக்குச் சென்றார் ஹேமா. தலைமை வேட்பாளர் ரணில் நியமனப் பத்திரத்தை தாக்கல் செய்து விட்டு வெளியே வந்தார். அதன் பின்னர் தான் தெரிய வந்தது ஹேமாவின் பெயர் அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்கவில்லை என்று.

ஹேமா இந்த நாட்டின் முதற் பெண்மணியாக இருந்தவர். இடம் கொடுக்க விருப்பம் இல்லாவிட்டால் "அம்மணி உங்களது பெயர் வேட்பாளர் பட்டியலில் உள்ளதா என்று உறுதிப்படுத்திய பின் கச்சேரிக்குச் செல்லுங்கள்" என்று மூன்றாவது நபர் ஒருவர் ஊடாக தொலைபேசி அழைப்பின் மூலமாவது சொல்லியிருக்கலாம். ஆனால் ஹேமாவை அவமானப்படுத்தவென்றே ரணில் அவ்வாறு நடந்து கொண்டார். ஹேமா போட்டியிட்டால் தன்னைவிட அதிகமாக விருப்பு வாக்குகளைப் பெற்றுவிடுவார் என்றும் இதனால் தனது ஆளுமை பாதிக்கப்படும் எனவும் அவர் கருதினார். பிரேமதாஸாவுக்கு என்று கொழும்பில் பலமான வாக்கு வங்கி உண்டு. அவர் வீடற்ற மக்களுக்கென தொடர்மாடித் திட்டம் போன்றவற்றை அமுல்படுத்தினார். அவரது 10 இலட்சம் வீட்டுத் திட்டத்தினால் பயனடைந்தோர் அவருக்கே வாக்களிப்பர். எத்தகைய உயர் பதவி வகித்த போதும் அவரை எந்தச் சாதாரண பொது மகனும் சந்தித்து தமது தேவையை நிறைவேற்றிக் கொள்ளலாம். அவரது முதற் சந்திப்பு அதிகாலை 4 மணிக்காக இருக்கும். அப்படியாயின் அவர் தனது காலைக் கடன்களை முடித்து அலுவலக ஆடையுடன் வர குறைந்தது ஒன்றரை மணித்தியாலத்துக்கு முதல் எழுந்திருக்க வேண்டும். வீதியில் இறங்கினாலும் தனது பழைய ஆதரவாளர்-களைக் கண்டால் அவர்களை நிறுத்தி சில நிமிடங்களாவது உரையாடாமல் சென்றதில்லை. குறிப்பாக ஏழை நடுத்தர மக்களின் கதாநாயகனாக விளங்கினார்.

பொதுவாக கட்சித் தலைமையைப் பொறுப்-பேற்றவர்கள் பழைய கட்சித் தலைமையின் குடும்பத்தினரை விரட்டுவதோ புறக்கணிப்பதோ இலங்கையின் வழக்கம். ஜே.ஆர் கட்சித் தலைமையை பொறுப்பேற்றதும் முன்னைய தலைவரான டட்லி சேனநாயக்காவின் பெறாமகன் ருக்மன் சேனநாயக்காவைப் புறந்தள்ளினார். ஏற்கெனவே டெடிகம தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ருக்மனுக்கு 1977 பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதி மறுத்தார். ஒரு வேளை ருக்மன் சுயேச்சையாகப் போட்டியிட்டால் என்ன செய்வது என்று சிந்தித்த அவர் தலதா மாளிகையின் தியவதன நிலமேயாக விளங்கியவரைக் கட்சி வேட்பாளரா-க்கினார். எனினும் ருக்மன் அத் தேர்தலில் கட்சிக்கு எதிராகப் போட்டியிடவில்லை.

பிரேமதாஸ இந்த நடைமுறையை மாற்றினார். ஜே.ஆரின் மருமகன் ரணில் முன்னர் இளைஞர் விவகார அமைச்சராக விளங்கினார். அவரைக் கல்வி அமைச்சர் என்ற நிலைக்கு உயர்த்தினார் பிரேமா. அப்படிப்பட்ட பிரேமதாஸாவின் குடும்பத்தி-னரைக் கருவறுக்கவே ஹேமாவை அவமானப்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டார். அத்துடன் சிறு வயது முதலே கொழும்பில் வளர்ந்த சஜித் பிரேமதாஸாவை அம்பாந்தோட்டையில் போட்டியிடுமாறு கூறினார். ஜே.வி.பியினரின் கிளர்ச்சியில் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அம்பாந்தோட்டையும் ஒன்று. எனவே அங்கே ஜக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான மனவுணர்வு இருக்கும். அங்கே சஜித்தை அனுப்பித் தோற்கடித்தால் பிரேமா குடும்பத்தினரை நிரந்தரமாக அரசியலில் இருந்து விலக்கலாம் எனக் கணக்குப் போட்டிருக்கலாம். ஆனால் சஜித் தனது ஆளுமையை நிரூபித்தார். அரசியலில் இருந்து ஒதுக்கப்பட முடியாதவர் தான் என்பதை ரணிலுக்கு உணர்த்தினார். இவ்வாறாக [illegible] ஏற்பட்டாலும் தலைமைக்கு பாதகம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற தவறான முன் மாதிரியாக விளங்கினார் ரணில். இதையே இன்று தமிழ்த் தலைமைகளும் செய்கின்றன.

வடமாகாண சபைத் தேர்தலில் அனந்தி சசிதரன் பெற்ற வாக்கு எண்ணிக்கை கட்சித் தலைமைக்கு அச்சத்தைக் கொடுத்தது. அரசியலில் ஈடுபடுவோர் தமது அடுத்த கட்ட எதிர்பார்ப்பு என்ன என்று சொல்லக் கூடாது. முதல் நாள் மஹிந்தவுடன் முட்டை அப்பம் சாப்பிட்ட சிறிசேன அடுத்த நாள் ஜனாதிபதி வேட்பாளர் என அறிவித்தது போல கமுக்கமாக இருந்திருக்க வேண்டும். வெற்றிப் பெருமிதத்தில் தனது அடுத்த கட்டம் நாடாளுமன்றத் தேர்தல் என்று உளறிவைத்தார் அனந்தி. சுதாகரித்துக் கொண்டது தலைமை. இவர் போட்டியிட்டால் தமது முக்கியத்துவம் அடிபட்டுப் போகும் என எங்கே தவறு செய்வார் அனந்தி என்று காத்துக்கிடந்தது. அதற்கேற்றாற் போல மீண்டும் வாயைக் கொடுத்தார் அனந்தி. அவ்வளவுதான் "சிக்கெனப் பிடித்தேன்" என்று பிடித்துக் கொண்டது. ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக நடந்து கொண்டதாகக் கூறி கட்சியில் இருந்து இடை நிறுத்தியது. இவர்களது ஒரே இலக்கு அனந்திதான் என்பது கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட சிவகரன் மீதான நடவடிக்கையைக் கைவிட்டதில் இருந்து தெரிகிறது.

கட்சிக்குள் இருந்து பல்வேறு கோளாறுகளைச் செய்த குலநாயகத்துடன் தோள் மீது கைபோட்டுக் கொண்டு திரியும் கட்சித் தலைமை அனந்தி விடயத்தில் மட்டும் கீழிறங்கத் தயாரில்லை. குலநாயகத்தைப் போலவே காரைதீவு, வலி.தென் மேற்கு, வலி.கிழக்கு... பிரதேச சபைகளிலும் வவுனியா நகர சபையிலும் கலகக்காரர்-களாக விளங்கிய எவருக்கும் எதிராக நடவடிக்கை இல்லை. அனந்திக்கு வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது என்பது பல வகையிலும் புலப்படுத்தப்பட்டது. கடைசியில் அனந்தி போட்டியிட விண்ணப்பிக்கவில்லை என திருவாய் மலர்ந்தருளியது கட்சித் தலைமை.

திருமலையிலும் இதே நிலைமை. கட்சியின் ஆயுட்கால உறுப்பினரான ரூபன் (ஆத்மலிங்கம் ரவீந்திரா) இம்முறை தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்தார். 1999 தேர்தலில் கட்சி 13,000 வாக்குகள் மட்டுமே பெற்று தமிழர் பிரதிநிதித்துவத்தை இழந்தது. இதனால் அங்கு மீண்டும் தமிழர் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தும் பொருட்டு தலைவர் பிரபாகரனால் திருமலைக்கு ரூபன் அனுப்பி வைக்கப்பட்டார். அவர் இது சம்பந்தமாக உரையாட சம்பந்தன் ஐயாவை சம்பூருக்கு அழைத்தார். இதன் பின் 2000 ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 63,000க்கு மேற்பட்ட வாக்குகளைக் கட்சி பெறவும் சம்பந்தன் ஐயா மீண்டும் நாடாளுமன்றம் போகவும் வழி பிறந்தது. இதன் பின்னர் திருமலையில் 2004 தேர்தலில் இரு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகக் கூடியதாக இருந்தது.

இதெல்லாவற்றையும் மறந்து "நாங்கள் சிறிசேனவுடனும் ரணிலுடனும் சேர்ந்து பலமான அரசொன்றை அமைக்க இருக்கிறோம் ரூபனுக்கு இடம்கொடுத்தால் புலிகள் என்று மஹிந்த பிரச்சாரம் செய்வார்" என்று கூறி மறுத்தார் சம்பந்தன் ஐயா. கருணாவை தேசியப் பட்டியலில் எம்.பியாக்கி பிள்ளையானை முதலமைச்சராக்கிய மஹிந்தவின் இந்தப் பிரச்சாரம் எடுபடுமா என்று அவர் யோசிக்கவில்லை. சிங்கக் கொடியை ஆட்டிவிட்டு நான் பத்ரகாளியின் பக்தன் அதனால் தான் சிங்கக் கொடியை ஆட்டினேன் என்று சொன்னவரல்லவா அவர். ரூபனுக்கு வேட்பாளர் பட்டியலில் இடம்கொடுக்காதது தவறு என்று அரசியல் ஆய்வாளரும் திருமலையில் போட்டியிடுபவருமாகிய யதீந்திராவும் இணையத்தளங்கள் மூலமாக கருத்து வெளியிட்டிருக்கிறார்.



இது பற்றி மூத்த பத்திரிகையாளர் ஒருவரிடம் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி ஒருவர் "புலி எண்டதெல்லாம் ஒரு பிரச்சினையில்லை ரூபன் போட்டியிட்டால் விருப்பு வாக்கில சம்பந்தன் ஐயா ரெண்டாம் இடத்துக்குத் தள்ளப்படுவார்" என்று உண்மையைப் போட்டுடைத்தார். ஆகமொத்தத்தில் தோற்கக் கூடிய வேட்பாளர்கள் தான் கட்சிக்குத் தேவைப்-படுகிறார்கள். இதனை நிரூபிக்குமாற் போல இப்பட்டியலில் சரா.புவனேஸ்வரனின் பெயர் இடம்பெற்றுள்ளது.

இலங்கையிலேயே சனசமூக நிலையங்களில் மிகச் சிறந்தது என அடையாளம் காணப்பட்டது அரியாலை சனசமூக நிலையம். விளையாட்டுக் கழகமும் உள்ளது. "சரா புவனேஸ்வரனை நாம் விலத்திவிட்டோம் இனிமேல் அவருடன் யாரும் தொடர்பு வைக்க வேண்டாம்" என பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளிவந்தது. இவர்கள் தான் கூட்டமைப்பினருக்குத் தேவைப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் தான் தோற்கக் கூடியவர்கள். கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகள் அனைத்தும் ஏற்கெனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்-களை விட கூடுதலான வாக்குகளைப் பெறக் கூடியவர்களைத் தெரிவு செய்ய-வில்லை. மட்டக்களப்பிலும் இதே நிலைமை தான். பொன் செல்வராசா, அரியம், யோகேஸ்வரன் கொடுத்த அலப்பறையில் வந்தாறுமூலையில் தான் உட்பட்ட வேறு எவரையுமே வேட்பாளர்களாக நிறுத்தவில்லை கட்சிச் செயலர் கி.துரைராஜசிங்கம். குறிப்பாக அரியமும் யோகேஸ்வரனும் ஆளுக்கொரு இணையத் தளங்களைத் துணையாக வைத்துக் கொண்டு கூட்டமைப்பின் ஏனைய வேட்பாளர்களான இரா.துரைரத்தினம் ஜனா ஆகியோர் செய்த படுகொலைகள் பற்றிய செய்திகளை வெளியில் கொண்டுவர கூடியளவு முயற்சி எடுக்கின்றனர். எல்லாமே தங்களது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சிதான். விருப்பு வாக்கு விடயத்தில் தான் தென்னிலங்கையில் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரா கொல்லப்பட்டார். முஸ்லிம்களிடமும் ஒரே கட்சியில் யாரை எம்.பியாக்குவது என்பதில் காத்தான்குடிக்கும் வாழைச்சேனைக்குமே எப்போதுமே போட்டி.

எல்லோருமே மக்கள் நலன் என்பதை இரண்டாம் பட்சமாகக் கருதுவது இந்த நிலைமைக்குக் காரணம் இதற்குத் தற்போதைய தேர்தல் முறையும் ஒரு காரணம். அதற்காக இதனை மாற்ற வேண்டும் என்றில்லை. சிறுபான்மையினருக்கு இது பாதுகாப்பானதே. கட்சிகள் தமது அணுகுமுறையில் பொது நலனை முன்னிறுத்தினாலே போதும். மக்களுக்கும் அவர்கள் சார்ந்த கட்சிகளுக்கும் நன்மை விளையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் கூட்டமைப்புக்கு ஆதரவில்லை

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் அதிரடி அறிவிப்பு

– –நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன்– –
முதலமைச்சர், வடமாகாண சபை
- www.pathivu.com -

**என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,** நான் வெளிநாடுகள் சென்ற சமயத்தில்த்தான் பொதுத்தேர்தல் நியமிக்கப்பட்டது. நான் தற்பொழுது திரும்பி வந்துள்ளேன். தேர்தலில் உங்கள் பங்களிப்பு என்ன என்று பலரும் என்னைக் கேட்கின்றார்கள். யாழ் தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பத்துப் பேர் ஏழு ஆசனங்களுக்காகவும் வன்னியில் ஒன்பது பேர் ஆறு ஆசனங்களுக்காகவும் போட்டியிடுகின்றனர். தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் ஒரே கட்சிக்குள்ளேயே விருப்பு வாக்குகளைப் பெறபோட்டியாளர்களிடையே முரண்பாடுகள் எழுவது எதிர் பார்க்கப்படுவதொன்றே.

வடமாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்காக 2013ம் ஆண்டில் பொதுவேட்பாளராக நான் நிறுத்தப்பட்டேன். நான் பதவிக்கு வந்ததும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் பல நான் பக்கச் சார்பற்று நடுநிலை வகிக்கவில்லையே என்று என் மீது குறைபட்டுக் கொண்டனர். நான் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குப் பக்கச் சார்பாக நடந்து கொள்வதாக என்னை விமர்சித்தனர். முதலமைச்சர் என்பவர் எல்லோருக்கும் பொதுவானவர் என்ற முறையில் பக்கச் சார்பற்று நடந்து கொள்ள வேண்டும் என்றார்கள்.

**"அரசியல் ரீதியான ஒரு நிரந்தர தீர்வு எமக்குக் கிடைக்கும் வரையில் எக்காலத்திலும் அமைச்சுப் பதவிகளை எமது பிரதிநிதிகள் ஏற்கக்கூடாது என்பதே எனது கருத்து" - சீ.வி.விக்னேஸ்வரன்**

உண்மையில் இதே மாதிரியான ஒரு நிலை சுமார் 53 வருடங்களுக்கு முன்னர் நான் கொழும்பு சட்ட மாணவர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் எனக்கு ஏற்பட்டது.

ஒரு சாரார் தேர்தலில் எனக்கு வாக்களித்து வெற்றி கொள்ளச் செய்தனர். எனக்கெதிராக வாக்களித்தவர்கள் தலைவர் பதவி வகிக்க வந்தவுடன் நீங்கள் சகல சட்ட மாணவமாணவியர்களுக்குந் தலைவர் என்ற முறையில் பக்கச் சார்பற்று நடந்து கொள்ள வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். எனக்கு வாக்களித்தவர்கள் தாம் அவ்வாறு என்னைத் தேர்ந்தெடுக்கக் காரணமாய் இருந்ததால் தமது நலவுரித்துக்களை மட்டுமே நான் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் ஏற்றுக் கொண்ட பதவியின் கடமைகள், பொறுப்புக்கள், கடப்பாடுகள் ஆகியவற்றை உத்தேசித்து சட்ட மாணவனாக நான் இருந்த போதே அத்தருணத்தில் பக்கச் சார்பற்றவனாக நடந்து கொள்வதே எனது கடமை என்று முடிவு செய்தேன். எனது தலைவர் பதவிக்காலம் முழுவதும் என் ஆதரவாளர்களின் மன அளைச்சலுக்கு மத்தியில் நான் பக்கச் சார்பற்றே நடந்து கொண்டேன். எது சரியோ, எது முறையோ அதையே செய்தேன்.

அதேவிதமான ஒரு சூழ்நிலை தற்போது என்னை நாடி வந்துள்ளது. என்னைக் கூட்டமைப்பினர் வடமாகாண முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்திருப்பினும் அவர்களின் தேர்தல் களங்களில் பக்கச் சார்பாக இறங்கி அக்கட்சி அபேட்சகர்களுக்காக ஆதரித்துப் பேசுவது எனக்கழகல்ல என்பதே எனது கருத்து.

என்னைப் பொறுத்தவரையில் மக்கள் யார் யாரைத் தேர்ந்தெடுக்கின்றார்களோ அவர்கள் யாராக இருப்பினும் அவர்களுடன் சேர்ந்து அன்னியோன்யமாக இயங்குவது எனக்கு ஒரு பிரச்சினையல்ல. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மக்கள் நலனுக்காக அர்ப்பணிப்புடனும் ஐக்கியத்துடனும் கடமையாற்றக் கூடியவர்களாக இருக்கவேண்டும். கட்சிகளின் நலனை விட எமது மக்களின் நலனும் நலவுரித்துக்களுமே முதன்மை பெறவேண்டும் என்பது எனது கருத்து.

அண்மையில் இங்கிலாந்தில் ஹரோ என்ற இடத்தில் இம் மாதம் 17ந் திகதி பேசிய போது நான் கூறியதை இங்கு உங்களுக்கு குறித்துக் கூற ஆசைப்படுகின்றேன். "மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் எம்நாட்டில் வாழும் எமது மக்கள் தெரிவு செய்ய வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. தமிழ்ப் பிரதிநிதிகளைப் பொறுத்தவரையில் வள்ளுவன் வாக்கிற்கிணங்க, நேர்மையான அரசியல், கொள்கையில் உறுதி, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய மனோபாவம், தூரநோக்குப் பார்வை, எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணத்திற்காகவும் விலைபோகாதமனோதிடம் கொண்ட அரசியல்வாதிகளே எமக்குத் தேவைப்படுகின்றார்கள்.

அத்துடன், தமிழர்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி, அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி, எமதுமக்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களே எமது மண்ணுக்கும் மக்களுக்குமாக இன்றைய காலத்தில் தேவையாக இருக்கின்றார்கள். அதனை உணர்ந்து அவர்கள் தமக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை, தார்மீகக் கடமையைச் சரிவரச் செய்வதற்கு நான் துணையாக நிற்பேன்" என்று கூறினேன்.

போர் முடிந்து ஆறு வருடங்கள் கழிந்த நிலையில் எமது வடமாகாண சபை தேர்ந்தெடுக்கப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் போருக்குப் பின்னரான சூழலில் மூன்று முக்கிய சவால்களை நாம் யாவரும் எதிர் நோக்கியுள்ளோம்.

முதலாவதாக போருக்குப் பின்னரான புனர்நிர்மாண, மீள்குடியேற்ற, அபிவிருத்திப் பணிகள் எமது மக்களின் தேவைகளையும் அத்தியாவசியங்களையும் அறிந்து அனுசரித்து முழுமையான நோக்குடன் நடத்தப்படாமல் தான் தோன்றித் தனமாக அப்போதைக்கப் போதையவாறு நடைபெற்று வருவது மனவருத்தத்தை அளிக்கின்றது.

இரண்டாவதாக அரசியல் ரீதியாக நிரந்தரத் தீர்வு இன்னமும் எங்கள் கைகளுக்குப் படாமல் விலகிச் செல்வதாகவே இருக்கக் காண்கின்றோம்.

மூன்றாவதாக போரினால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைப்பதும் சேய்மைப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

இவ்வாறான ஒரு சூழலிலேயே நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டிய ஒரு கடப்பாட்டில் உள்ளீர்கள். இவ்வாறான சூழலிலே, இங்கிலாந்தில் நான் குறிப்பிட்டதற்கிணங்கவே எமது பிரதிநிதிகளை நீங்கள் தேர்ந்தெடுக்கவேண்டியது அத்தியாவசியமென்று எனக்குப்படுகிறது. நான் குறிப்பிட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் உங்களுள் சிறந்த பிரதிநிதிகளை நீங்கள் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்திற்கு அனுப்புவது உங்கள் தலையாய கடமையாக விளங்குகின்றது.

தேர்தல் முடிந்ததும் எமது மிகமுக்கிய சவாலான அரசியல் தீர்வுகளுக்காக ஒரு மனதுடன் அரசியல் ரீதியாக ஒத்துழைக்கக் கூடிய பிரதிநிதிகளையே நீங்கள் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும்.

அண்மையில் தெற்கத்தைய அரசியல்வாதியொருவர் என்னிடம் கேட்டார் புதிதாக அமைக்கப்படப் போகும் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மந்திரிப் பதவிகள் கொடுக்க முன்வந்தால் உங்கள் கட்சி அவற்றை ஏற்குமா என்று. அப்போது பிரித்தானிய பிரதமர் கமரூன் அவர்களுக்கு ஜேர்மானியத் தலைவி அன்ஜெலாமேர்கல் அவர்கள் கூறியது தான் என் நினைவுக்கு வந்தது. அரசியல் ரீதியான கூட்டுக்களிலும் கூட்டமைப்புக்களிலும் "சிறிய கட்சியே எக்காலத்திலும் அடிபட்டுப் போய் விடுகிறது" என்றார் அவர். எனது சிங்கள நண்பருக்கு நான் கூறினேன்- அரசியல் ரீதியான ஒரு நிரந்தரத் தீர்வு எமக்குக் கிடைக்கும் வரையில் எக்காலத்திலும் அமைச்சுப் பதவிகளை எமது பிரதிநிதிகள் ஏற்கக் கூடாது என்பதே எனது கருத்து என்று.

இல்லையென்றால் அதாவது அவ்வாறு நாங்கள் ஏற்றுக் கொண்டால் எமது மக்களின் கோரிக்கைகள் காற்றோடு காற்றாய்ப் பறந்து விடுவன. எம்மைப் பெரும்பான்மைச் சமூகம் தன்னுள் உள்ளிழுத்துக் கொண்டுவிடும் என்றேன். மேலும் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பு என்ற கொள்கையின் கீழ் எமது அமைச்சர்கள் சுதந்திரம் இழந்துவிடுவார்கள். எமது மக்களின் உரித்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் அவர்கள் கைவிடவேண்டிய நிலைவரும் என்றேன்.

மேற்கூறியவை பல எமது வடமாகாணமக்களுக்கு மட்டும் பொருந்தும் கருத்துக்கள் என்று எண்ண வேண்டியதில்லை. இந்நாட்டின் சகலருக்கும் பொதுவான



கருத்துக்களே அவை. இவ்வருடத் தொடக்கத்தில் எம்மக்கள் புதியதொரு சகாப்தத்தை உருவாக்க முன்வந்தனர். நல்லாட்சி, நீதி, நியாயம், சமத்துவம், சமாதானம், சகலருக்கும் பாதுகாப்பு போன்ற கொள்கைகளை முன்வைத்து புதியதொரு எதிர்காலத்தைக் கட்டிஎழுப்ப முன்வந்தார்கள். அந்தவாறான மக்களின் அபிலாஷைகளை, எதிர்பார்ப்புக்களை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு சகல அரசியல் வாதிகளுக்கும், சகல நிறுவனத் தலைமைத்துவங்களுக்கும், ஊடகங்களுக்கும், குடிசனசங்கங்களுக்கும் இருக்கின்றது என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. தனிப்பட்ட மனித குழுக்களின் நன்மைகளுக்காக மட்டும் நடந்துகொள்ளாது, மற்றைய மக்கட் கூட்டங்களுக்குக் கெடுதி விளைவிக்காது, நல்லாட்சியை ஏற்படுத்தக் கூடிய சக்திகளை இனங்கண்டு ஜனநாயகரீதியில் நாம் யாவருஞ்சேர்ந்து அச்சக்திகளுக்குத் துணையாக நிற்பதற்கு வருந்தேர்தலானது களம் அமைத்துக் கொடுக்கும் என்று நம்புகின்றேன். எமதுதேர்தல் வாக்குறுதிகளும் விஞ்ஞாபனங்களும் இந்நாட்டின் கூடியமக்களின் நலனைப் பேணும் விதமாக அமையவேண்டும். அப்படி நடந்து கொண்டால்த்தான் வருங்காலச் சந்ததியினர் எம்மை நன்றிக் கண்களுடன் பார்ப்பார்கள்.

எது எவ்வாறு நடப்பினும் ஜனநாயக அத்திவாரத்தை இட்டு அதன் மீது எமது வருங்காலத்தை நம் நாட்டில் ஏற்படுத்த சர்வதேச சமூகமானது துணையாக நிற்கும் என்று எதிர்பார்க்கின்றோம். எமது மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் சர்வதேச சமூகம் எம்முடன் கைகோர்த்துச் செல்லும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

எனவே எனது சதோதர சகோதரிகளே! நான் உங்களிடம் இச்செய்தியின் ஊடாகக் கேட்டுக் கொள்வது யாதெனில் திறமான வேட்பாளர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யுங்கள். வள்ளுவன் வழி நின்று உங்களை வாழவைக்கக் கூடியவர்களைத் தேர்ந்தெடுங்கள். நாம் யாவரும் எமது ஜனநாயக உரித்துக்களை முழுமையாகப் பாவித்து எமது அரசியல் பயணத்தை பலம் மிக்கதாகச் செய்வோமாக! எம்முடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து நாம் யாவரும் உங்கள் சேவையில் வெளிப்படைத் தன்மையுடனும் பதிலளிக்கும் கடப்பாட்டுடனும் நடந்து கொள்ள உதவுவீர்களாக! தேர்தல் காலங்களில் நாம் சுற்றுலாக்காலப் பயணிகள் போன்று நடந்து கொள்ளாதிருப்போமாக!

"அரசாங்கம் ஒரு நம்பிக்கைப் பொறுப்பு. அதன் அலுவலர்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள். நம்பிக்கைப் பொறுப்பும் அதன் பொறுப்பாளர்களும் மக்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளார்கள்" (ஹென்றிக்ளே– மேம்பட்டஅரசியல் வாதியும் சிறந்த அமெரிக்கப் பேச்சாளரும்)

இறைதுணை உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைப்பதாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கன்னங்கள் பள பளக்க...

### அழகு குறிப்பு

கன்னங்கள் அழகாக இருந்தால் முகத்துக்கே தனி அழகுதான். ஒருசிலருக்கு கன்னங்கள் மிகவும் ஒட்டிப்போய் இருக்கும். பெரும்பாலும் நிறைய பெண்களுக்கு கன்னத்தில் பருக்கள் தொல்லை இருக்கும். இவர்கள் இந்த குறிப்புகளை பின்பற்றி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்!

- முதலில் அதிகாலையில் எழுந்து பழகும் பெண்களுக்கு இயற்கையாக சுத்தமான காற்று கிடைக்கிறது. இதனால் முகத்தில் ஒருவித பொலிவு கிடைக்கும்.
- மிதமான சுடுநீரில் சிறிதளவு உப்பு கலந்து பத்து நிமிடம் வாய்க்குள் வைத்து பின் கொப்பளிப்பது நல்லது. இப்படி தொடர்ந்து செய்வதால் கன்னத்தின் அழகு அதிகரிக்கும்.
- சந்தனம், மஞ்சள் போன்றவற்றை பொடியாக்கி முகத்தில், கை, கால்களில் தடவலாம். வறண்ட சருமத்தைக் கொண்டவர்கள் பால், வெண்ணை கலந்து குழைத்துப் பூச வேண்டும்.
- எண்ணைத் தன்மை கொண்ட சருமத்தை உடையவர்கள் வெள்ளரிக்காய் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, தக்காளிச் சாறு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து சிறிதளவு தேனும் சேர்த்து உடலில் பூசலாம்.
- முகப்பரு இருப்பவர்கள் வேப்பமரப் பட்டையை வெண்ணையில் அரைத்துத் தடவுவது நல்லது. மஞ்சளை, கறி வேப்பிலையுடன் சேர்த்து அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் தடவினால் முகப்பரு மற்றும் அதனால் ஏற்பட்ட வடுக்களும் மறையும். அதேபோல் துளசி சாற்றை தினமும் முகத்தில் தேய்த்துவருவதும் நல்ல பலனைத் தரும்.

## பற்களின் கரையை நீக்க



நீண்ட நாட்களாக இருக்கும் கறைப் படிவங்களை சுத்தம் செய்வது மிகவும் எளிது. பொட்டாசியம் பர்மாங்கனேட் என்ற வேதிப்பொருள் இதனை வாங்கி வெது வெதுப்பான நீரில் மிகச்சிறிய அளவில் போட்டு அந்த தண்ணீரை வாயில் ஊற்றி நன்றாக கொப்புளிக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக கொப்புளித்த பின்னர் பிரஷ் கொண்டு (பேஸ்ட் போடாமல்) சுத்தம் செய்யும் போது பல வருடங்களாக இருந்த கறைகள் பெயர்ந்து வெளியேறும்.

### இயற்கை பொருட்களாலும் நீக்கலாம்

- கல் உப்பை பொடியாக்கி அதனை தினமும் பற்களில் தேய்த்து வர கிருமிகள் தாக்குதல் இருக்காது, மேலும் பற்களும் வெண்மையாகும்.
- இரவு தூங்க செல்வதற்கு முன் ஆரஞ்சு பழ தோலை பற்களில் தேய்துவிட்டு பின்பு காலையில் எழுந்த பின்னர் கழுவும் போது பற்களில் படிந்துள்ள பாக்டீரியா நீங்கி பற்கள் வெளிச்சிடும்.
- எலுமிச்சம் பழத்தை பற்களில் தேய்துவருவதன் மூலம் கரைகள் நீங்கும்.

### கரையை ஏற்படுத்தும் உணவுப்பொருட்கள்

- அசிடிக் அமிலம் அதிகம் கலந்துள்ள உணவுபொருட்களை உண்பதால் பற்களில் கரை ஏற்பட வாய்ப்புள்ளது.
- சோடாக்களில் சிட்ரிக் ஆசிட் அதிகமுள்ளதால் அது பற்களின் எனாமலை கரைத்து விடுகின்றன.
- அதே போன்று காபியில் உள்ள நிறம் பற்களில் தங்கி, அதன் வெண்மை நிறத்தை பாதிக்கிறது, எனவே காபி குடித்த பின்னர் வாயை நன்றாக கொப்பளிப்பது நல்லது.

## சமையல் குறிப்பு

### மீன் கிரேவி



#### தேவையான பொருட்கள்

கட்லா மீன் துண்டுகள் - ½ கிலோ, வெங்காயம் - பாதி அளவு, மிளகாய்தூள் - அரை தே.கரண்டி, புன்னை இலை -. பாதி அளவு, மிளகு - 3 அல்லது 4, தனியாத்தூள் - ½ தே.கரண்டி, எண்ணை - தேவைக்கேற்ப, உப்பு - தேவையான அளவு

#### செய்முறை

கட்லா மீன் துண்டுகளை சுத்தம் செய்து சூடான எண்ணையில் பொரித்து வைக்கவும். வாணலியில் எண்ணையைச் சூடாக்கி நறுக்கிய வெங்காயத்தை வதக்கவும். இதோடு மிளகாய்தூள், தனியாத்தூள், மிளகு, புன்னை இலை, இஞ்சி, பூண்டு, விழுது, மஞ்சள் தூள் எல்லாவற்றையும் சேர்த்து பச்சை வாசனை போகும்வரை வதக்கவும். இதில் உப்பு, அரை கப் தண்ணீர் விட்டு சிறுதீயில் கொதிக்கவிடவும்.

மசாலா வெந்து எண்ணை பிரியும் போது தேவையான கிரேவியின் அளவுக்குத் தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும். கிரேவி நன்றாக கொதித்து வரும்போது பொறித்து வைத்துள்ள மீன் துண்டுகளைப் போட்டு எண்ணை மேலே மிதக்கும்போது இறக்கி வைக்கவும்.

## மனதோடு (கீதா)

### குட்டிக் கதை

நேற்று வரை கந்தசாமி என்று அழைக்கப்பட்ட 48 வயதான அந்த நபர் வாய்பிழந்து இறந்து கிடந்தார். தலை பலமாக தாக்கப்பட்டிருந்தது. அதில் இருந்து இரத்தம் கசிந்து உறைந்திருந்தது. ஈக்கள் மும்முரமாக அவற்றின் பணியினை அந்த வீட்டில் செய்து கொண்டிருந்தன.

கந்தசாமியின் மனைவி அழுதழுது ஓய்ந்து போய் அமைதியாக சுவரோரம் தலையை சாய்த்து அமர்ந்திருந்தார்.

"சொல்லும்மா என்ன ஆச்சு" இன்ஸ்பெக்டர் விசாரணையைத் தொடக்கினார்.

"சார் ஒரு வாரத்துக்கு முன்னாடி எனக்கும் என் புருஷனுக்கும் தகராறு சார். அதனால பக்கத்துத் தெருல இருக்கற என் பொண்ணு வீட்டுக்கு போயிட்டேன் சார். இன்னிக்கு விடிகாலைல இப்படி ஒரு சேதி சார்."

என்று விசும்பினார். அழுகை மெலிதாக எட்டிப்பார்த்தது.

"சரி ஏன் உன் புருசனை கொன்ன சொல்லு"

அவள் ஓவென்று அழ ஆரம்பித்தாள். புருசன் இறந்ததற்கு அலட்டிக்கொள்ளாத அவள் இப்படி இன்ஸ்பெக்டர் கேட்டவுடன், மிகுதியாக அதிர்ந்தாள். அருகில் இருப்பவர்கள் யாராவது துணைக்கு வரமாட்டார்களா என பார்த்தாள்.

"சார் சார். நான் எதுக்கு சார் என் வூட்டுக்காரர கொலை பண்ணனும். அவருக்கும் எனக்கும் அடிக்கடி தகராறு வரும்தான் சார். ஆனா கொலை பண்ற அளவுக்கு எல்லாம் எனக்கு தைரியம் கிடையாது சார்"

"உன் புருசன் என்ன பண்ணிட்டிருந்தார்"

"செங்கல் சூளையில வேலைக்கு போயிட்டு இருந்தார் சார்."

"அங்க எதாவது தகராறு"

"எப்பவும் யார் கிட்டயாவது தகராறு பண்ற ஆளுதான் சார் என் புருசன். தெரியலை சார் என்னாச்சுன்னு"

இன்ஸ்பெக்டர் அவரது விசாரணையின் அடுத்த கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதே நேரம்.. அந்தத் தெருவின் மூலையில் இருந்த கோவிலில் ஒரு ஓரமாய் அமர்ந்திருந்தான் அவன்.

அவன் வேறு யாருமல்ல இவன் தான்......

"என் பேரு கணேசனுங்க.. எனக்கு பதினைஞ்சு வயசு ஆகுது. கடந்த ஒரு வருசமா என்னைய பைத்தியம்னு இந்த ஊர் சொல்லிட்டு இருக்கு. சின்னப்பசங்கல்லாம் என் மேல கல்லடிச்சு விளையாடுவாங்க. ஆனா இந்த ஜனங்கதாங்க பைத்தியம். எல்லாம் காமப்பிசாசுங்க. என்னடா இந்த வயசுப்பையன் பேசுற பேச்சாடா இது. என்னடா பேசுற.. வயசுக்குத் தகுந்த மாதிரி பேசுடாங்கறீங்களா. என் கதையைக் கேட்டா. நீங்க அப்படி சொல்ல மாட்டீங்க.

ஆமாங்க. நான், என் தங்கச்சி, எங்கம்மா, அப்பான்னு எவ்வளவு அழகான, பாசமான குடும்பம் தெரியுமா எங்களுது.

ஆனா.. ஆனா.. அதெல்லாம்.. ஒரு வருசத்துக்கு முன்னதான்.. இப்ப நான் ஒரு அனாதை."

கோவிலின் சுவரில் தலை சாய்த்து அமர்ந்திருந்த அவன் கண்களில் நீர் துளிர்த்தது.

"என்ன அதிர்ச்சியாயிட்டீங்களா. அதுக்குக் காரணம்.... அதுக்குக் காரணம்.. இது நான் யார்கிட்டயும் சொல்லாம... காலம் முழுக்க என்னோடயே போகணும்னு நினைச்ச இரகசியம். ஆனா இப்ப என்னையும் மீறி இதை என் மனசு யார்கிட்ட சொல்லுதுன்னே தெரியலைங்க எனக்கு."

மீண்டும் அவன் கண்களில் இருந்து நீர் துளிர்த்தது. பின் அவன் மனசு சிறிது நேரம் மௌனமாயிருந்தது.

"என் தங்கச்சிக்கு எட்டு வயசுதான் ஆகுது, ரொம்ப புத்திசாலி நல்லா படிப்பா.. எப்பவும் சுறுசுறுப்பா இருப்பா.. எங்க தெருவுக்கே செல்லக் குழந்தையா இருந்தா. அந்த தங்கச்சி திடீர்னு காணாமப் போயிட்டா. நாங்க தேடாத இடம் இல்லை. அவ கிடைக்கவே இல்லை. அடுத்த நாளும் நாங்க ஆளுக்கொரு பக்கமா போயி தேட ஆரம்பிச்சோம். தேடிக்களைச்சு போய் தண்ணி குடிக்கலாம்னு ஆத்தங்கரை பக்கம் போனேன். அங்க ஒரு மூட்டை கரை ஒதுங்கி இருந்தது. எனக்கு மனசுல ஒரு நடுக்கம், சந்தேகம்.

கூடாது.. கூடாது எனக்கு இப்ப தோணின மாதிரி இருந்துடக் கூடாதுன்னு நினைச்சுகிட்டே, அந்த மூட்டையை பிரிச்சுப் பாக்கறேன்.

ஆ.. அது என் தங்கச்சியோட கொலுசேதான். போன மாசம் என்னோட முதல் சம்பாத்தியத்துல வாங்கிக் கொடுத்த கொலுசு அது. நான் வெள்ளிப் பட்டறைல வேலை செஞ்சேன்.

அவளோட உடம்பு ஒரு லுங்கில சுத்தி இருந்தது. அது அது... எங்க வீட்டு எதிர் வீட்ல குடியிருந்த ஆளோடது. அடிக்கடி அந்த ஆள் அதைக்கட்டி பாத்திருக்கேன். எப்பப் பாத்தாலும் அந்தாளும் அவங்க வீட்டுப் பொம்பளையும் ரோட்டுல தகராறு பண்ணிக்குவாங்க. அப்புறம் அந்தம்மா கிளம்பி எங்கயோ போகும். அப்புறம் பத்து நாளுக்கு வராது.

எனக்கு விசயம் என்னன்னு புரிஞ்சுடுச்சு. யாரோ வர்ர அரவம் கேட்டுச்சு. மறுபடியும் அந்த மூட்டையை ஒரு கல்லைப் போட்டு கட்டி நடு ஆறு வரைக்கும் இழுத்துட்டு போயி விட்டுட்டு வந்தேன்.

அப்புறம் எவ்வளவு நேரம் நான் கரைல உக்காந்து அழுதிட்டிருந்தேன்னு தெரியாது. தங்கச்சி நீ திடீர்னு ஆத்துல இருந்து எந்திருச்சி வந்துடும்மான்னு கதறினேன். எதாவது அதிசயம் நடக்கும்னு நம்பினேன். ஒரு வாரம் இதை ஜீரணிக்க முடியாமல் பித்து புடிச்ச மாதிரி திரிஞ்சேன். தேடும் படலம் நடந்துக்கிட்டே இருந்தது. ஒரு நாள் என் நாக்குல சனி உக்காந்திருந்திச்சு போல. எங்கம்மாகிட்ட... இந்த விசயத்தை சொன்னேன்.

அவங்களும் அப்பாவும் கதறினாங்க துடிச்சாங்க. அவங்களால இதைத் தாங்கவே முடியலை. ரொம்ப நேரம் அழுதிட்டே இருந்தாங்க. மூனு பேரும் அழுதழுது நான் தூங்கிட்டேன். காலைல எந்திருச்சி பாக்கறேன். எங்கம்மாவும் அப்பாவும்... எங்கம்மாவும் அப்பாவும்...

எங்க வீட்டு உத்தரத்துல தொங்கிக்கிட்டு இருந்தாங்க..."

அந்தக் கோவிலின் இன்னொரு மூலையில் இருந்த தண்ணீரைப் பிடித்து சிறிது தொண்டையை நனைத்துக் கொண்டான் அவன். பேசுவது மனதாக இருந்தாலும் தொண்டை துக்கத்தால் வரண்டிருந்தது.

"மனிதர்களுக்கு காமம்ங்கறது ஒரு உணர்வு அவ்வளவுதான... தோ நான் இப்ப தாகம் எடுக்குதுன்னு தண்ணி குடிச்சனே அது மாதிரிதான. தாகம் எடுத்ததுன்னா தண்ணியதான குடிப்போம். வேற எதாவது கழிவுப் பொருளை குடிச்சிருவமா. அந்த ஆளோட காமத்தை வெளிப்படுத்த ஒரு பச்சை மண்ணுதான் கிடைச்சுதா"

கண்களில் நீர் பொலபொலவெனக் கொட்டியது. அவனது உடல் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந்தது.

"இந்த ஆளோட காமத்துக்கு எங்க குடும்பமே பலி ஆயிடுச்சே. இதெல்லாம் வெளியே சொல்ற விசயமா. அப்படி சொல்லிட்டா.. என் தங்கச்சி... என் தங்கச்சி... ஆத்மா எப்படி தவிக்கும். இப்படி மானம் போயிடுச்சேன்னு. அதான் மனசைக் கல்லாக்கிக்கிட்டு அந்தக் கல்லைதான் அவளுக்குத் துணையா அந்த மூட்டைக்குள்ள போட்டு நடு ஆத்துக்கு இழுத்துட்டு போய் விட்டுட்டு வந்தேன். இன்னமும் அந்த ஆத்துக்கு அடில என் தங்கச்சி தூங்கிட்டு இருக்கா. சமயம் பாத்துட்டே இருந்தேன் அந்தாளைப் பழிவாங்க.. இதோ இன்னிக்கு காலைல இன்னொரு கல்ல அந்தாள் தலைல போட்டேன்."

அவன் மெல்ல எழுந்து நடக்க ஆரம்பித்தான்.

"சொல்லுங்க.. காமம்ங்கறது உயிர்களை உருவாக்குவதற்காகவா? இல்லை உயிர்களை அழிப்பதற்காகவா?" என்றவாரே.. அருகில் இருந்த கோவில் கிணற்றில் குதித்தான் அவன்.

**உண்மை மூழ்கிக் கொண்டிருந்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 64

# கடவுளை நம்புவதும் கடவுளை நம்பாமல் இருப்பதுவும்

(வி.என்.சந்திரகாந்தி)



எமது வாழ்க்கையானது அனுபவங்களினூடாக எடுத்துச் செல்லப்படுவது. குழியில் நிற்கும் நீருக்கு அசைவில்லை. ஆனால் மலையில் ஊற்றெடுக்கும் அருவி ஆறாக பிரவாகித்து ஓடுகின்றது. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அளவிற்கு அதற்கு சக்தி உண்டாகின்றது. அதே போன்று எமது அனுபவங்கள் பெற்றுத்தரும் சக்தியில் தான் எமது வாழ்கையின் வெற்றி தங்கியுள்ளது.

சோதனைகளும் துன்பங்களும் நிறைந்த இந்த மானுட வாழ்கை என்ற கடலைத் தாண்டுவதற்கு எம்மில் பலர் கடவுள் மீது நம்பிக்கை வைத்து ஒவ்வொரு காரியத்தையும் ஆற்றுகின்றனர். அது எமக்கு பெரும் நம்பிக்கையையும் வினைத்திறனுடான முயற்சிகளில் ஈடுபடக்கூடிய ஆற்றலையும் காரிய சித்தியையும் வழங்குகின்றது.

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்ற பல சோதனைகள் நிறைந்த இந்த வாழ்கையில் கடவுள் நம்பிக்கை போன்ற உறுதுணை மற்றெவரிடமிருந்தும் கிடைக்காது என்றே கூறவேண்டும். இளமைக்காலத்தில் பெற்றோரும் மற்றும் அற நூல்களும் எமக்கு கடவுள் நம்பிக்கையை உண்டுபண்ணி விடுவதால் நாம் சமூகத்தில் நல்லவர்களாக உருப்பெறுகின்றோம். சத்தியம், பொறுமை, உண்மை, நேர்மை போன்ற நற்குணங்களுக்கு நாம் ஆட்படுகின்றோம். அது எமக்கு மற்றவர்களிடையே நன்மதிப்பை பெற்றுத்தருகின்றது. நல்ல



நண்பர்கள் கூட்டம் எம்மை சூழ்ந்து கொள்கின்றது.

பலனை பற்றி நாம் கவலைப்படாமல் மேற்கொள்ளும் எந்த வேலையும் மனதை தூய்மைப்படுத்துவதுடன் விவேகத்தையும் உண்டுபண்ணுகின்றதென்று கீதோபதேசம் கூறுகின்றது. விவேகத்தின் ஒளியில் தான் கடவுள் நம்பிக்கை உண்டாகின்றது.

மன அமைதிக்காக கடற்கரைக்கு செல்கின்றோம் ஆனால் அதிக கூட்டம் மன நிம்மதி வேண்டி கோவிலுக்கு தான் செல்கின்றது. ஒரு பொழுது கோயிலில் நின்று அவதானித்தால் புரியும். மக்கள் வெள்ளம் எப்படி அலைமோதுகின்றதென தெரிந்து கொள்ளலாம். முதியோர் மட்டுமல்ல குடும்ப பெண்கள், குடும்ப தலைவர்கள் இளைஞர்கள், சிறார்கள் என அனைத்து தரப்பினரும் கடவுளில் நம்பிக்கை வைத்து மன ஆறுதல் பெற அங்கு கூடுகிறார்கள்.

முதியோர்கள் ஆரோக்கியமான வாழ்வை வேண்டியும்... குடும்பஸ்தர்கள் தமது பிள்ளைகளின் நல்ல எதிர்காலத்திற்காகவும் மனமுருகி பிரார்த்திக்கின்றார்கள். இளைஞர்களினதும் இளம் யுவதிகளினதும் கவலை வேறு. அவர்களுக்கு கூறக் கூடிய அறிவுரை ஒன்றுதான்... முகநூலில் உங்களுக்கான துணையை தேடுவதை முற்றாக கைவிடுங்கள். பெண்களே உங்களுக்கேற்ற கணவன் நல்ல தெய்வ பக்தனா என்று பாருங்கள். அவன்தான் உங்களுக்கு பொருத்தமானவன் என்று நம்புங்கள். கந்தசஷ்டி விரதம் அனுஸ்டிக்கும் ஒரு இளைஞனிடம் சிறந்த பண்புகள் என்று போற்றப்படுவன அத்தனையும் அவனில் குடிகொண்டிருக்கும்.

அதே போன்று... ஆண்களே உங்களுக்கு பொருத்தமான துணையை பெண்ணின் கவர்ச்சியை வைத்து தெரிவு செய்யாதீர்கள். இன்றைய கணனி யுகத்தில ஆண்களும் பெண்களும் எத்தனை எத்தனை சீரழிவுகளுக்கு உட்படுகின்றார்கள். ஆண்களும் பெண்களும் சரிசமமாக சுற்றித்திரியக்கூடிய இக்கால கட்டத்தில் கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் வெளியே அனுப்பிவிட்டு நிம்மதியாக இருக்க முடியுமா?

இயற்கையின் நியதி எப்போதும் மாறிக்கொண்டே இருப்பது. சுற்றுப்புறத்திலும் சூழ்நிலையிலும் ஏற்படும் பலவிதமான மாறுதல்களுக்கு மனிதன் எப்போதும் ஆட்பட்டுக்கொண்டே இருக்கின்றான். இந்த அபாயங்களில் இருந்து தப்பவும் முழுமையான சந்தோசத்தையும் வெற்றியைம் ஈட்டவும் எமக்கு உண்டான நிலையான வழி கடவுள் நம்பிக்கைதான்.

எமது பிள்ளைகளுக்கு நாம் இந்த உண்மையை புகட்ட வேண்டும். மாறிக்கொண்டே இருக்கும் உலக சூழலில் பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்த்தெடுப்பதே பெரும் சவாலாக உள்ளது. 'பிள்ளைகளே இங்கே வாருங்கள்... மது அருந்தாதீர்கள், போதைவஸ்துக்கு அடிமையாகாதீர்கள், தீய நட்பு கொள்ளாதீர்கள், வன்முறை-யில் ஈடுபடாதீர்கள் என்று பிரம்பும் கையுமாக இருந்து அறிவுறுத்திக்கொண்டிருக்கவா முடியும்... மனித மனம் ஆறு போன்றது... புத்தி அதன் கரைகள் போன்றது. ஆறு நேர் பாதையில் போக வேண்டுமானால் கரைகள் பலமாக இருக்கவேண்டும். அவ்விதம் மனம் நல்வழியில் செல்ல-வேண்டுமானால் புத்தி பலமுள்ளதாக... வாழ்கையின் யதார்த்தத்தை உணர்ந்ததாக, இறைநம்பிக்கை கொண்டதாக இருக்க வேண்டும் எமது பிள்ளைகளை கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக உருவாகுவதொன்றே அவர்களை அன்பு, கருண்ணை, அஹிம்சை ஆகிய வழிகளில் இட்டுச்செல்ல உதவக்கூடியது.

எத்தனை தம்பதியினர் பிள்ளைப் பாக்கியம் இல்லாமையால் வாழ்வில் பற்றுவிட்டு மனம் உடைந்து வாழ்கின்றனர். பணவசதி படைத்த பலர் பல மில்லியன் ரூபா செலவு செய்து செயற்கை கருத்தரிப்புக்காக முயற்சி செய்கின்றார்கள். பல ஏழை தம்பதியினர் இறைவனில் நம்பிக்கை வைத்து ஆலமரத்திலும், அரச மரத்திலும் பிள்ளைத் தொட்டில் கட்டி நேர்த்திகடன் வைத்து காத்திருக்கின்றார்கள்.

நாம் பெற்றெடுத்த பிள்ளையை கடவுள் நம்பிக்கை உடையவர்களாக வளர்த்து அவர்களுக்கும் குடும்பத்திற்கும், இந்த சமூகத்திற்கும் பயனுள்ளவர்களாக வளர்ப்பது எமது பொறுப்பல்லவா?

வேதங்கள் அனைத்தும் கடவுள் இருக்கின்றார் என்றே போதிக்கின்றன. எம்மில் பலர் கடவுள் என்று ஒருவர் இல்லை என்று கருதி வாழ்ந்து வருகின்றனர். சமூகம் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் காரண கர்த்தா-க்கள் அவர்களே.

கடவுளே இல்லை என்று தூஷிப்பவர்கள் பெற்றோரின் சொல் கேட்பார்களா? தமக்கு வேண்டியவர்கள் என்று உள்ள எவரது சொற்களைத்தானும் கேட்பார்களா? நீதி எதனை தடை செய்கின்றதோ அதனை செய்யவே தலைப்படுவர். தண்டனைக்கு மேல் தண்டனை வழங்கினாலும் அவர் திருந்த மாட்டார்.

அதனால் தான் இன்று ஆண் பெண் இருபாலருமே சரி நிகர் சமனாக வெட்கமின்றி குற்றச்செயல்-களில் ஈடுபடுகின்றார்கள். இணையத்தை அவதானித்தால் இந்த உண்மை உறுதியாகும். ஆண்கள் மட்டும் தான் புகைப்பார்கள், மது அருந்துவார்கள், போதைப் பொருள் பாவிப்பார்கள். வன்முறைகளில் ஈடுபடுவார்கள் என்ற நிலை இன்று இல்லை. பெண்களும் அத்தனை குற்ற செயல்களிலும் தனித்தும் கூட்டாகவும் ஈடுபடுகின்றார்கள்.

இன்னும் சொல்லப்போனால் கணவன் மனைவிக்கும் மனைவி கணவனுக்கும் துரோகம் செய்வது கூட பெரிய காரியமாக இல்லை!

புத்தன், யேசு, காந்தி பிறந்ததும் இந்த பாரினில் தான். கடவுள் நம்பிக்கையேயற்ற பெரும் அரசியல்வாதி ஈ.வே.ரா, நடிகர் கமலஹாசன் போன்றோர் பிறந்ததும் இந்த பூமியில் தான்! எனது தங்கை ஒருத்தி சிறுவயதில் கடவுளுக்காக மனிதர்கள் நேர்த்தி வைத்து உடலை துன்புறுத்துவதை கண்டு சகிக்கமாட்டாதவளாக இருந்தாள். ஆனால் கடவுள் நம்பிக்கையுடன் இருந்தாள். அவள் கனடா போய் சேர்ந்தது மட்டுமன்றி விவாகமாகி இரு பெண்குழந்தை-களையும் பெற்ற நிலையில் தனது உறவுகள் பலரையும் அங்கு வரவழைத்துவிட்டாள். சென்ற வாரம் அவளது உறவுகள் மட்டுமன்றி அவளும் கூட அலகு பாய்ச்சியும் செடில் குத்தியும் பாற் செம்பும் காவடியும் எடுத்திருந்தனர்!

# வெளிச்சமின்றிப் போகும் வாழ்க்கை

சஞ்சயன் செல்வமாணிக்கம்

சில நாட்களுக்கு முன்பொரு நாள் மாலை நேரம் வெளிநாட்டவர் செறிந்து வாழும் புறநகர்ப்பகுதியினூடாக நடந்து கொண்டிருந்தேன். நேரம் 9 மணியிருக்கும். பனி பெய்து கொண்டிருந்தது. பனிசுத்திகரிப்பு வாகனங்கள் பாதையை சுத்திகரிக்க மனிதர்கள் தத்தமது வீடுகள் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர்.

எனது வாழ்க்கை நிலை பற்றி சிந்தித்தபடியே, சுய பரிதாபத்துடன் நடைபாதையில் நடந்து கொண்டிருந்தேன். ஒருவர் என்னைக் கடந்து போனார். உள்ளுணர்வின் தூண்டலினால் திரும்பிப் பார்த்தேன். அவரும் திரும்பிப் பார்த்தார். பின்பு "அண்ணே நீங்களா என்றார்". எனது நினைவு வங்கியில் அவர் பற்றிய எதுவித இருப்பும் இருந்ததாய் தெரியவில்லை. எனவே "யாரய்யா நீங்க" என்றபடியே அருகில் சென்று அவரின் முகத்தைப் பார்த்தேன். பரீட்சயமான முகமாயிருந்தது. ஆனால் பெயர் நினைவில் இருக்கவில்லை. "அங்கே வாருங்கள் பேசுவோம்" என்று கூறியபடியே எனது பதிலை எதிர்பார்க்காமல் நடக்கத் தொடங்கினார். அவரின் வேகத்துக்கு என்னால் ஈடுகொடுக்க-முடியவில்லை. வீதியில் ஒளி குறைந்த ஒரு சந்தியில் நின்றிருந்தார். அருகில் சென்று உரையாடினேன், அவருடன்...

சில மாதங்களுக்கு முன் அவரை ஒரு கடையில் சந்தித்திருக்கிறேன். அதன் பின் அதே கடையில் அவரை சிலதடவைகள் சந்தித்திருந்தது நினைவிற்கு வந்தது. "எப்படி இருக்கிறீர்கள்?" என்ற போது, சில நாட்களுக்கு முன் அவரை போலீசார் கைது செய்ய வந்தபோது ஓடித்தப்பி தற்போது வேறு ஒரு இடத்தில் வாழ்ந்து வருவதாகச் சொன்னார். இருட்டிய பின்பே வெளியே திரிவதாகவும், தற்போது வேலைக்கு சென்றுகொண்டிருப்பதாகவும் கூறினார்.

அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். நோர்வேயில் வதிவிட அனுமதியும், அகதி அந்தஸ்தும் மறுக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேறும்படி அறிவிக்கப்பட்டவர். முன்பு நான் சந்திக்கும் போதே இது பற்றி அவர் கூறியிருந்தார். இருப்பினும் தனது மூன்றாவது விண்ணப்பம் பரிசீலனையில் இருப்பதால் அந் நாட்களில் அவருக்கு வதிவிட அனுமதியிருந்தது. அவரின் நண்பர்களாக சில மலையத்தவர்களும் அவருடன் இருந்தார்கள். அவர்களில் சிலர் வதிவிட அனுமதி மறுக்கப்பட்டவர்கள். எனவே தொடர்ந்து ஒரேயிடத்தில் தங்குவதை தவிர்த்து வந்தார்கள். அவர்கள் அனைவரும் தொழில் அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களாகையால் இரகசியமாகவே தொழில் புரிந்தனர். அவர்களின் சம்பளங்களும் உரிமைகளும் சராசரிச் சம்பளத்தை விட மிகவும் குறைவானதாகவும், எவ்வித உரிமைகள் அற்றதாகவுமே இருந்தன. இப்படியான தொழில்களை தெரிவு செய்வதை விட அவர்களுக்கு வேறு வழியிருக்கவில்லை.

நான் குறிப்பிடும் நண்பர் அவரது குடும்பச்சொத்தான வீட்டை ஈடுவைத்த பணத்திலேயே இங்கு வந்துள்ளார். அவருக்கு 30 - 33 வயதிருக்கலாம். திருமணமாகாதவர். தனது சகோதரியின் திருமணத்திற்கு முன் வீட்டை மீட்டு கொடுக்கவேண்டும் என்பதில் கருத்தாயிருந்தார். வீட்டையே இன்னும் மீட்கவில்லை, அதற்கிடையில் நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவு வந்திருக்கிறது. ஊரிலேயே இருந்திருக்கலாம் வீடாவது மீதமிருந்திருக்கும் என்றார். சகோதரியின் திருமணம், தனது வாழ்க்கை, தாயாரின் உடல்நிலை என்று அவரின் பேச்சு அலைந்துகொண்டிருந்தது. மன அமைதியை முற்றிலும் இழந்து அமைதியற்றவரா-யிருந்தார்.

தற்போது ஒரு இடத்தில் தொழில் புரிவதாகவும் மிகவும் கடினமான வேலை, சம்பளம் மிகக் குறைவு என்றும், தன்னை போலீஸ் தேடுவதை ஏனையவர்கள் அறிவதை அவர் விரும்பாதிருந்தார். சில இடங்களில் சிலருக்கு இரண்டு, மூன்று மாதங்கள் சம்பளம் கொடுக்கப்படாமல் அவர்கள் போலீசில்



காட்டிக் கொடுக்கப்பட்டு அவரவர்களின் நாடுகளுக்கு திருப்பி-யனுப்பப் பட்டுள்ளதை அவர் அறிந்திருந்தார். நானும் இது பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். நான் அறிந்த சம்பவத்தில் 6 மாத சம்பளம் கொடுக்கப்படாமலே அவர் காட்டிக்கொடுக்கப-பட்டதாகப் பேசிக் கொண்டார்கள்.

நோர்வேயில் இருப்பது ஆபத்தானது என்பதால் போர்த்துக்கல் சென்று அந்நாட்டு வீசா பெற்றுக்கொண்டால் மீண்டும் இங்கு திரும்பவரலாம் என்று ஒருவர் கூறுவதாகவும் அது பற்றி ஏதும் எனக்கு தெரியுமா என்றார். இல்லை, ஆனால் விசாரித்துப் பார்க்கலாம் என்றேன். ஆனால் போர்த்துக்கல் வீசா எவ்வாறு கிடைக்கும் என்று எனது கேள்விக்கு அவரிடம் பதில் இருக்கவில்லை. மாறாக ஒரு பாக்கிஸ்தானியர் 30000 குறோணர்கள் தந்தால் போர்த்துக்கல் வீசா பெற்றுத்தருவதாகக் கூறுகிறார் என்றார். என்ன செய்யப்போகிறீர்கள் என்றதற்கு ஒரு பெருமூச்சொன்றே பதிலாய்க் கிடைத்தது. மௌனத்தில் கடந்து போனது சில கணங்கள். வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லையே என்ற போது அவர் குரல் தளுதளுத்திருந்தது. என்னால் ஏதும் பேச முடியவில்லை. "ஏதோ யோசித்துச் செய்யுங்கள்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டேன். கும்மிருட்டினுள் கரைந்து போனார் அவர். இருட்டு அவருக்கு பழக்கப்பட்டது போல் இருந்தது. இருட்டும் அவரை விழுங்கிக்கொண்டது.

வீசா, தங்குமிட அனுமதி, இந் நாட்டுப் பிரஜை, நிரந்தரத் தொழில் என்று பல வசதிகள் உள்ள நான் எனது வலிகள் தாங்கமுடியாதவை என்று புலம்பிக் கொண்டிருக்கும் போது, வாழ்வாதாரமே இன்றி, இருட்டின் துணையுடன் வாழும் அவர், எனக்கு எதையோ உணர்த்திப்போனது போலிருந்தது.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

# திரை விமர்சனம்

## தனுஷின் இயக்கத்தில் தனுஷ், காஜல் அகர்வால் நடிக்கும் "மாரி"

வேலையில்லா பட்டதாரி, அனேகன் படத்தின் தொடர் வெற்றியை தக்க வைத்து ஹாட்ரிக் அடிக்க வேண்டும் என்று தன் மீசையை முறுக்கி மாரியாக தனக்கே உரித்தான லோக்கல் சென்னையில் களம் இறங்கியிருக்கிறார் தனுஷ். ஆடுகளம் படத்தை செம்ம கமர்ஷியலாக, எடுத்தால் எப்படியிருக்கும் அப்படி ஒரு படம் தான் இந்த மாரி. சென்னையில் லோக்கல் பையனாக ஒரு ஏரியாவை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தனுஷ், புறா ரேஸ் விடுபவர். இவரை எப்படியாவது புறா ரேஸில் வீழ்த்தி விட வேண்டும் என்று எதிர் கூட்டணியில் போட்டி போடுபவர் 'மைம்' கோபி. தனுஷை எப்படியாவது கைது செய்ய வேண்டும் என அவருடைய பழைய கேஸை (கொலை வழக்கு) ஒரு பக்கம் தீவிரமாக தேடுகிறார் போலிஸ் அதிகாரி விஜய் ஜேசுதாஸ். அந்த கொலையை தனுஷ் செய்ததற்கு எந்த ஆதாரமும் இல்லாத நிலையில், காஜல் அகர்வாலின் காதலால் அந்த உண்மையை வெளியே கொண்டு வந்து தனுஷை கைது செய்கிறார் விஜய் ஜேசுதாஸ். அதன் பின்பு தனுஷின் மார்க்கெட் இறங்க, விஜய் ஜேசுதாஸின் உண்மை முகம் உடைய, தான் இழந்ததை எல்லாம் தனுஷ் எப்படி மீண்டும் பிடித்தார், விஜய் ஜேசுதாஸ் சூழ்ச்சி வலையை எப்படி உடைத்தார் என்பதே மீதிக்கதை.



தனுஷ் ஒரு தண்ணீர் போல, எந்த பாத்திரமாக இருந்தாலும் அப்படியே அந்த உருவமாக மாறுகிறார். ஒரு தாதாவாக இருக்க உடல் வாகு தேவையில்லை என்று தனுஷ் புதுப்பேட்டையிலேயே நிரூபித்துள்ளார். அதேபோல் இதில் காலரை தூக்கி கலாட்டா செய்துள்ளார். படம் தேங்கி நிற்கும் இடத்தில் எல்லாம் பூஸ்ட்டாக இருப்பது ரோபோ ஷங்கரின் காமெடி தான், தனக்கே உரித்தான Voice Modulation என அதகளம் செய்கிறார். இவர் பேசும் இடத்தில் தான் தியேட்டரில் விசில் சத்தம் பறக்கின்றது. காஜல் அகர்வால் அழகாக வந்து அதிரடியாக Twist வைத்து, மீண்டும் தனுஷ் மனதில் இடம்பிடிக்க அவர் முயற்சிப்பது கிக். விஜய் ஜேசுதாஸ் முதல் படம் என்று தெரியாத அளவிற்கு நன்றாக நடித்துள்ளார்.

பாலாஜி மோகன் கொஞ்சம் இன்னும் வித்தியசமான மாஸ் படத்தை தருவார் என நினைத்து செல்பவர்களுக்கு கொஞ்சம் ஏமாற்றம் தான். பெண்களை பற்றி பேசும் சில தவறான வசனங்களை குறைத்திருக்கலாம்.

மொத்தத்தில் மாஸ் ரசிகர்களை மட்டும் குறி வைத்து இந்த மாரி தான் நினைத்ததை 'செஞ்சுவிட்டார்'.



## சினிமா இளைஞர்களுக்கு உதவும் சூர்யா

அதர்வா நடித்து விரைவில் வெளிவரவிருக்கும் படம் சண்டிவீரன். அதர்வாவின் மார்க்கெட் தற்போது கொஞ்சம் டல். இதனால், இப்படத்தில் பாடலை சூர்யா தன் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இது படத்திற்கு ஒரு நல்ல விளம்பரத்தை ஏற்படுத்தி தரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

சுராஜின் இயக்கத்தில் வெளியான "சகலகலா வல்லவன்" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## அஞ்சலி, போட்ட வெயிட்டை குறையம்மா!!

சகலகலாவல்லவன் திரைப்படத்தின் புரமோஷன் நிகழ்ச்சியில் ஒரு பாட்டுக்கு நடனம் ஆடிய அஞ்சலி ஆட முடியாமல் திணறியுள்ளார். முன்னரைவிட குண்டாக மாறியுள்ள அஞ்சலி போதாக்குறைக்கு அவரது உடம்பை... குறிப்பாக வயிற்றை காட்டுவதுபோல் உடையணிந்து இருந்தார். அதனாலோ என்னவோ அஞ்சலியின் கவர்ச்சி எடுபடவே இல்லை. உடம்பைக் குறைக்காமல் இதேபோல் இருந்தால் இனி அஞ்சலியை தமிழ்த் திரைப்படங்களில் பார்ப்பது கஷ்டம்தான்.

## முத்தம் இனிப்பே தவிர காரம் இல்லை

டிவி சேனலில் நட்சத்திரங்களை பேட்டி எடுத்து அலுத்துப்போன சன் டிவி தொகுப்பாளர் ஆடம்ஸ் யு டியூப்பில் புதிதாக சேனல் ஆரம்பித்துள்ளார். ஆடம்ஸ் டாக்கீஸ் என்பதுதான் சேனலின் பெயர். ஃபேஸ்புக், டுவிட்டர் பக்கம் போல யுடியூப்பில் தனக்கான சேனலை தொடங்கியுள்ள ஆடம்ஸ் திரை நட்சத்திரங்களை பேட்டி எடுத்து அதை பதிவேற்றியுள்ளார்.

அதில் விஷாலுக்கு கொடுத்த முத்தம் இனிப்பான விசயம். அது எப்படி காரமாக இருக்கும் என்று கேட்டிருப்பது வேறு யாருமல்ல லட்சுமி மேனன்தான். சொன்னது பேட்டி எடுத்த ஆடம்ஸ் இடம்தான்.

## வருகின்றது கிராமத்துப் புயல்

பீட்சா திரைப்படத்துக்கு பிறகு தமிழில் தனக்கு நல்லதொரு எதிர்காலம் இருக்கும் என்றுதான் எதிர்பார்த்தார் ரம்யா நம்பீசன். ஆனால், அதன் பிறகு சில சின்ன திரைப்படங்களில்தான் நடித்தார். அதில் சில வெற்றி பெறவில்லை. சில திரைப்படங்கள் திரைக்கே வரவில்லை.

இந்த நிலையில்தான், தற்போது அருள்நிதிக்கு ஜோடியாக அவர் நடித்துள்ள நாலு போலீசும் நல்லா இருந்த ஊரும் என்ற திரைப்படம் திரைக்கு வந்திருக்கிறது. இந்த திரைப்படம் பெரிய ஹிட் இல்லை என்றபோதும், ஓரளவு ஓடிக்கொண்டிருக்கிறது.

## காமெடி சூப்பர் ஸ்டார்

ஆர்யா, சந்தானம், தமன்னா நடித்துள்ள படம் 'வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க'. ராஜேஷ் இயக்கும் இப்படத்தில் இமான் இசையமைத்துள்ளார். இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. சந்தானம் தன்னுடைய ரசிகைகளிடம் தான், தென்னிந்தியா காமெடி சூப்பர் ஸ்டார் என்று கூறினேன். அதை கேட்ட ஆர்யா, சேட்டை படத்தில் காமெடி சூப்பர் ஸ்டார் என்று பட்டம் கொடுத்துவிட்டார். அதன்பின்னர் ரஜினியுடன் நான் நடிக்கும் போது, ஆர்யா- சந்தானம் கூட்டணி நல்லா இருக்கு என்று அவர் பாராட்டினார்.

## ஏமாற்றத்தில் நித்தியா

மணிரத்னம் திரைப்படத்தில் நடித்து விட்டதால் மெகா ஹீரோக்களின் திரைப்படவாய்பபுகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்த நித்யாவுக்கு தற்போது சுமாரான ஹீரோக்களின் திரைப்பட வாய்ப்பு மாத்திரம் கிடைப்பது பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INFOMATION TECHNOLOGY

MOBILE

## நீர் மயமாகப் போகும் பூமி

சுமார் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நீரிலிருந்தே நிலம் வெளிவரத் தொடங்கியதாகவும் கண்டங்களின் மேலோட்டின் தடிப்பு, அதன் அதிகபட்ச அளவான 40கிலோ மீட்டர் அளவை ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு எட்டியது எனவும் இலண்டன் நேச்சர் ஜியோசைன்ஸ் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தற்போது கண்டங்களின் மேலோட்டின் தடிப்பு குறைந்து வருகின்றது. கண்டங்களின் மேலோடுகள் அரிப்படைந்து வருவதால், 2 பில்லியன் ஆண்டுகளில் பூமி மீண்டும் நீரில் மூழ்கிவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## விண்டோஸ் 10

அதிவேக நவீன அம்சங்களை கொண்ட மைக்ரோசொப்டின் விண்டோஸ் 10 வெளியாகியுள்ளது. ஏற்கனவே, விண்டோஸ் நிறுவனத்தின் அதிகாரபூர்வ அனுமதியுடன் விண்டோஸ்-7, விண்டோஸ்-8, விண்டோஸ்-8.1 மொடல் கணனிகள் மற்றும் விண்டோஸ் 8.1 ஸ்மார்ட்கைப்பேசிகளை வைத்திருப்பவர்கள் விண்டோஸ்-10 பதிப்பில் உள்ள அனைத்து நவீன தொழில்நுட்ப வசதிகளையும் இலவசமாக தரம் உயர்த்திக் கொள்ளலாம் என மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது. சுமார் மூன்றாண்டுகள் இடைவெளிக்கு பிறகு வெளியாகும் விண்டோஸ்-10 பதிப்பில் பல்வேறு வகையான நவீன அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

OTHER

## உருவாகிறது அப்பிள் பல்கலைக்கழகம்

உலகத் தரம் வாய்ந்த கணனி மற்றும் மொபைல் சாதனங்களை வடிவமைத்து அறிமுகம் செய்யும் அப்பிள் நிறுவனமானது Apple Spaceship Campus எனும் பிரம்மாண்டமான கட்டடத்தொகுதி ஒன்றினை அமைத்து வருகிறது. இதன்படி 2,386 சதுர அடிகளில் விருந்தாளிகள் மையம், 10,114 சதுர அடிகளில் அப்பிள் ஸ்டோர் போன்றவற்றினையும் உள்ளடக்கியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இவை தவிர கூரைப் பகுதியானது கார்பன் பைபரினாலானதாக வடிவமைக்கப்படுவதுடன், வானம் போன்று காட்சியளிப்பதற்கு பிரம்மாண்டமான ஸ்கைலைட்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

## குப்பை மெயில்கள் குறைவு

மின்னஞ்சல்களில் சாதாரண மெயில்களுடன் குப்பை (Spam) மெயில்களும் சேர்ந்தே வருவது வாடிக்கை. ஆனால் தற்போது இந்த மெயில்களின் எண்ணிக்கை 50 சதவீதம் குறைந்துள்ளதாம். கடந்த 12 ஆண்டுகளில் முதன்முறையாக இந்த Spam மெயில்கள் எண்ணிக்கை குறைந்துள்ளதாக சைபர் பாதுகாப்பு நிறுவனமான சைமண்டெக் வெளியிட்டுள்ள தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Spam மெயில் களுக்கெதிரான பாதுகாப்பு மற்றும் சட்ட நடவடிக்கையே இந்த எண்ணிக்கை குறைந்ததற்கு காரணமாக அமைந்துள்ளது.




## பார்த்துக்கொண்டே குறுஞ்செய்தி அனுப்பும் வசதி

இணைய சேவை மற்றும் மின்னஞ்சல் சேவைகளை வழங்கிவரும் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றான யாகூ நிறுவனம் Livetext எனும் அப்பிளிக்கேஷனை அறிமுகம் செய்துள்ளது. Livetext இன் ஊடாக நண்பர்கள் அல்லது உறவினர்களை வீடியோவின் ஊடாக அவதானித்தவாறே குறுஞ்செய்திகளை அனுப்ப முடியும்.

இச் சேவையினை ஹாங்ஹொங், தாய்வான், அயர்லாந்து ஆகிய நாடுகளில் பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் தற்போது அமெரிக்கா, ஐக்கிய ராஜ்ஜியம், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் அறிமுகம் செய்துள்ளது. இந்த அப்பிளிக்கேஷனை Android மற்றும் iOS சாதனங்களில் நிறுவிப் பயன்படுத்த முடியும்.




## செல்போன் பாவனையால் புற்றுநோய் அறிகுறி




செல்போன் பயன்படுத்துவதால் புற்றுநோய் உள்பட பல்வேறு நோய் பாதிப்புகள் ஏற்படும் என ஜெர்னல் எலக்ட்ரோமேக்னடிக் பயாலஜி மற்றும் மருந்துகள் என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. அதில், செல்போன் கதிர்-வீச்சுக்களால் புற்றுநோய் மட்டுமின்றி வளர்சிதை மாற்றங்கள் உட்பட மேலும் பல நோய்கள் ஏற்படவும் செல்போன்கள் காரணமாக இருப்பதாக தெரிய வந்துள்ளது.

முறையற்ற வளர்ச்சிதை மாற்றங்களால் உடலில் ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் துகள்கள், ஆன்டி ஆக்சிடென்டுகளுடன் வினைபுரிய தொடங்குவதால் சுவாச கோளாறுகளும் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் மேலும் கூறுகின்றது. இதன் மூலம் புற்றுநோய் மட்டுமின்றி தொடர் தலைவலி, உடல்சோர்வு, தோல் வியாதிகள் போன்றவைகளும் வருகிறது என்கிறது.

## MOTOROLA - MOTO G

Motorola நிறுவனம் நீர் உட்புகாத ஸ்மார்ட் கைப்பேசியினை வடிவமைத்துள்ளது. Moto G எனும் இக் கைப்பேசியானது 5 அங்குல அளவுடையதும், 1280 x 720 Pixel Resolution உடையதுமான தொடுதிரையினையும், 1.4GHz வேகத்தில் செயல்படக்கூடிய Quad Core Snapdragon 410 Processor தரப்பட்டுள்ளது. இரண்டு பதிப்புக்களாக வெளிவரும் இக்கைப்பேசியில் 16GB சேமிப்புக் கொள்ளளவினைக் கொண்டதன் பிரதான நினைவகமாக 2GB RAM உம், 8 GB சேமிப்பு கொள்ளளவினைக் கொண்ட கைப்பேசியின் பிரதான நினைவகம் 1GB RAM உம் ஆக காணப்படுகின்றது.



இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா, 2470 mAh என்பன தரப்பட்டுள்ளன.

## உயிர்கொல்லியை மாற்றும் தடுப்பூசி கண்டுபிடிப்பு

மலேரிய நோயிலிருந்து பாதுகாப்பை தரக்கூடிய Mosquirix எனும் தடுப்பூசியினை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதுடன், இத் தடுப்பூசியானது European Medicines Agency (EMA) இனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த கட்டமாக உலக சுகாதார நிறுவனத்தினால் பரிசீலிக்கப்பட்டு அதன் அனுமதியினைப் பெறும் கட்டத்தில் காணப்படுகின்றது. இத் தடுப்பூசியினை 6 மாதம் தொடக்கம் 17 மாதம் நிரம்பிய குழந்தைகளுக்கும் பயன்படுத்த முடியும்.

இதேவேளை 2013 ஆம் ஆண்டின் தரவுகளின்படி இந்நோயினால் 584,000 வரையானவர்கள் இறந்துள்ளதுடன், இவற்றில் 75 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் 5 வயதிலும் குறைவான குழந்தைகள் என சுட்டிக்-காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கணனி பற்றி கண்ணோட்டம் – அதன் வரலாறும், ஏற்பட்ட மாற்றங்களும்

கணனி தொழில்நுட்பத்தின் ஆரம்பமாக "அபாக்கஸ்" – எனப்படும் மணிச்சட்டம் கொண்ட ஒரு சிலேட். கணிதத்தை எளியமுறையில் கணிப்பிடுவதற்கும், எளிதாக பயன்படுத்துவதற்க்கும் கண்டுபிடிக்கப்-பட்டிருந்தது என்பதை மேலே பார்த்தோம்.

அதன் பிறகு கணிதத்தை மேலும் எளிதாக்குவதற்கு ஒரு இயந்திரத்தை கண்டுபிடிப்பதில் பலர் முயற்சியில் இறங்கினர். அவர்களுள் "நேப்பியர், ஆர்த்ரெட், பாஸ்கல், சார்லஸ் பபேஜ்" போன்றோரைக் குறிப்பிடலாம். அவர்களது ஆய்வுகளும், முடிவுகளும் பின்னராக காலகட்டங்களில் இந்த கணனியின் வருகைக்கு ஆதாரமாகவும் அமைந்திருந்தன. அதன் பின்னர் ஹெர்மன் ஹோலரித் என்பவர் மக்கள் தொகையினைக் கணக்கெடுப்பதற்காக டேபுலட்டிங் என்கிற இயந்திரப்பொறி ஒன்றை உருவாக்கியிருந்தார். பின்நாளில் இவர்தான் (ஐ.பி.எம்) நிறுவனத்தை நிறுவினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உண்மையில் இன்றிருக்கின்ற கணனிக்கும் அன்றைய காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட கணனிக்கும் நிறையவே வித்தியாசம் காணப்பட்டது. அப்போதிருந்த கணனிகள் வெற்றிட குழாய்கள் (vaccum tube) கொண்டு வடிவமைக்கப்பட்டன. இதனால் உருவத்தில் மிகப் பெரிதாகவும், எடையில் பல நூறு கிலோவும் காணப்படலாயிற்று. இதன் காரணமாக இதனை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதும் கஷ்டமான காரியமாக இருந்தன.

இந்த நிலைமையில் டிரான்ஸ்சிஸ்டர் கண்டுபிடிக்கப்பட்டதன் பிற்பாடு கணனி தொழில்நுட்பத்தின் சாகசத்திற்கு மாபெரும் திருப்புமுனையாக அமைந்தது. வெற்றிட குழாய்கள் நீக்கப்பட்டு, டிரான்ஸ்சிஸ்டர் பயன்படுத்தப்பட்டதால் கணினியின் அளவும், எடையும் சிறியதாக மாறியன. டிரான்ஸ்சிஸ்டர்-ஐ இன்னும் எவ்வாறு சுருக்கலாம் என்று ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது ஐ.சி கண்டுபிடிக்கபட்டது. பல ஐ.சி சேர்க்கியூட்களை ஒரே சில்லுக்குள் நுழைக்கலாமா? என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது இன்டெல் நிறுவனத்தின் ராபர்ட் நைஸ் என்பவர் மைக்ரோப்பிரசரை கண்டுபிடித்தார். இக்கண்டுபிடிப்பிற்குப் பிறகு கணனியின் அளவு மிகவும் சிறியதாக காணப்படலாயிற்று. அதன் காரணமாக இன்று மேசை கணனி, மடிக்கணனி, கைக்கணனி என்று அளவில் சுருங்கிக் கொண்டே செல்கின்றது.



தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டு நடப்பு

# தீமையிலும் நன்மை உண்டாகலாம்!!

- பாலையூற்றான் -

பாலா அப்பகுதியில் மிகப் பிரசித்தமான மின்சாரப் பொறியியலாளரான அவர் கிறான்ட்பார்ஸ் தனியார் தளபாட உற்பத்தி நிறுவனம் ஒன்றின் மனித வளப்பிரிவுக்குப் பொறுப்பாக கடமையாற்றுகிறார். விமலன் அவரின் அயலவர் மாத்திரமல்ல நெருங்கிய உறினரும் கூட. விமலனும் பாலாவைப் போன்று பிரபல்யமான ஒருவர்.

எமது நாட்டில் நல்லவனாக வாழ்ந்தாலும் பிரபல்யமாகலாம் அதேவேளை தீயவற்றை பின்பற்றி வாழ்தாலும் பிரபல்யமாகலாம். நல்லதை செய்து பிரபல்யம் பெறுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதானாலும் சமூகத்தில் தீயவற்றைப் புரிந்து எதிர்காலத்தை ஒளிமயப்படுத்தியவர்கள் ஏறாளம்.

அண்மையில் காலம் சென்ற முன்னைய ஜனாதிபதியும், உலகில் புகழ் பெற்ற அணுசக்தி விஞ்ஞானியுமாகிய அப்துல் கலாம் தனது உயரிய கொள்கையால் பிரபல்யமானவர். அவர் உலக மகா மேதைகளில் ஒருவர்.

அதேளை பல்லாயிரக்கணக்கான அப்பாவி உயிர்களை கொன்று குவித்து மண்ணாசை காரணமாக மக்களை சித்திரவதை செய்து உலகின் கொடூர மனிதனாக அன்று வாழ்ந்த ஹிட்லர் கூட தனது தீய செயல்களினால் உலக மக்களிடையே பிரபல்யமானவர். அவரையும் பலர் போற்றினர். அவருக்கும் பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்கள் இருந்தனர்.

எனவே ஒரு மனிதன் தீயவைகளும், நல்லவைகளும் அடிப்படைக் காரணிகளாக இருப்பதை தெளிவாக எடுத்துரைக்கலாம். அதே வேளை நன்மைகளை கைதட்டி வரவேற்பவர்கள் போன்று தீயவைகளை அவ்வாறு வரவேற்பவர்களும் உலகில் இருக்கத்தான் செய்கின்றனர். நன்மைகளூடாக தீயவைகளும், தீயவைகளூடாக நன்மைகளும் இடம்பெறாமலல்ல.

பாலா, விமலன் ஆகியோரின் குடும்பங்கள் அப்பகுதியில் சகலராலும் விரும்பப்பட்ட குடும்பங்கள் ஆகும். இறைவன் இரு குடும்பத்தாருக்கும் சகல வசதிகளையும் அள்ளி வழங்கியிருந்தார்.

மேலும் விமலன் அப்பகுதியிலுள்ள பிரபல்ய பத்திரிகை நிறுவன மொன்றில் கணக்காளராக கடமை புரிகிறார். பல தடகைள் அரசாங்க உத்தியோகத்திற்காக முயற்சி செய்தும் அவரது கல்விக்கு தகுந்த தொழில் கிடைக்காததினால் தனியார் நிறுவனம் ஒன்றில் சேர்ந்து கொண்டார்.

பாலாவின் நிலையும் அதுவே. தங்கள் தங்கள் படிப்புக்கு ஏற்ப தொழில்கள் அரசாங்கத்தில் கிடைக்காவிட்டாலும், எப்படியோ நிறைவேற்று அதிகாரத்துக்குரிய தொழிலை தனியார் நிறுவனங்களில் பெற்றுக் கொண்டனர்.

எமது நாட்டில் சாதாரண கூலித்தொழிலைக் கூட அரச துறையில் இலகுவாக பெற முடியாது. அப்படிப் பெறுவதாகில் பாரிய இலஞ்சத் தொகையை கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்து அதிகாரிகளிடமும், அரசியல்வாதிகளிடமும் ஏமாறியவர்கள் பலர்.

தொழிலுக்காக பாலியல் கப்பங்களை வழங்கிய பெண்களும் நம் நாட்டில் இல்லாமல் அல்ல. பாடசாலையில் தாம் பெற்ற பிள்ளைகளுக்கு அனுமதி கேட்கப் போன இளம் தாயார் ஒருவரும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சம்பவத்தை ஊடகங்கள் மூலம் அறிந்துள்ளோம்.

பாலாவினதும், விமலினதும் மனைவிமார் நல்ல கல்வியறிவும், தகமையும் கொண்டிருந்தாலும் அவர்கள் தொழிலில் நாட்டம் இல்லாது இருந்தனர். அவர்களுக்கு அதைவிட முக்கியம் தத்தமது பிள்ளைகளை நல்ல முறையில் கற்பித்து வளர்க்க வேண்டுமென்பதே. பாலாவிற்கு ஒரேஒரு ஆண்பிள்ளை. விமலனிற்கோ ஒரேஒரு பெண்பிள்ளை.

அந்தப் பெற்றோரைப் போன்றே இருவீட்டுப் பிள்ளைகளும் ஆளுக்கால் மிகவும் பாசமாக இருந்தனர். பாலாவின் மகன் கஜன், விமலனின் மகள் கஜனி. சிறுபராயம் தொட்டே இருவரும் ஒரே வகுப்பில் கல்வி கற்று வந்தனர்.

ஆனால் பல்கலைக்கழக பிரவேசத்தின் போது ஆளுக்கால் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. கஜன் மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்திலும், கஜனி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் தேர்வானார்கள்.

இரு குடும்ப பெற்றோரும் தத்தமது பெற்றேரை தனித்தனியே பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு சற்று தயங்கினர். அரசியல் செல்ாக்கு என்ற ஒன்று இருந்தால் நமது நாட்டில் எதைத்தான் சாதிக்க முடியாது?

எப்படியோ அந்தக் குடும்பத்தினரும் தமக்குள்ள அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி பிள்ளைகள் இருவரும் ஒரே பல்கலைக்கழகத்திற்கு செல்லும் வகையில் அனுமதி பெற்றுக் கொண்டனர். அதன்படி இருவரும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தனர்.

மேலும் கஜனின் பொழுது போக்கு விடயங்கள் அங்கு சற்று அதிகரித்துக் காணப்பட்டமையால், கல்வி நிலையில் அவனது ஆர்வம் குறைந்தது. உரிய பரீட்சையில் அவனால் சித்தியடைய முடியவில்லை. கஜனியோ மிக அழகானவள் என்பதால் அங்கு மாணவர்களின் தொல்லை அதிகமாகக் காணப்பட்டது. இருப்பினும் அவள் அதனை பொருட்படுத்தாமல் தனது படிப்பில் கவனத்தை செலுத்தியதால் இலகுவாக பரீட்சையில் சித்தி பெற்றால். ஆனால் கஜன் இலகுவில் உணர்ச்சி வசப்படக் கூடியவன்.



கஜனியை எவராவது பகிடி பண்ணினால் அல்லது ஏதேனும் சேட்டை செய்தால் அவனால் அதைப் பார்த்துக் கொண்டு பொறுமையாக அவனால் இருக்க முடியாது. அவள் தனக்கு மாத்திரமே சொந்தமானவள் என மிக உறுதியாக இருந்தான் அவன்.

கஜனி தனது பட்டத்தை பெற்றுக் கொண்டாலும் கஜனால் பட்டம் பெற முடியவில்லை. பலர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற பாடத்தை மீண்டும் தொடர அவனது மனம் இடம் கொடுக்கவில்லை. அத்துடன் கஜனி இல்லாது அவனால் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு போக முடியாது. சிறு வயது தொடக்கம் இருவரும் ஒன்றாக பழகிக் கொண்டதால் அவள் மேல் அவன் பைத்தியமாகவே இருந்தான். எப்படியோ பெற்றோரின் நிறைந்த ஆசீர்வாதத்துடன் கஜனுக்கும், கஜனிக்கும் திருமணம் இடம்பெற்றது.

அப் பெற்றோருக்கு இருக்கும் வசதிக்கும். செல்வாக்கிற்கும் தம் பிள்ளைகளுக்கு ஏதாவது ஒரு தொழிலை பெற்றுக் கொடுக்கவா முடியாது!

கஜன் எப்படியோ ஒரு கௌரவமான தொழிலை பெற்றுக கொண்டான். மேலும் கஜனியை அவன் என்றுமே வெளியில் செல்ல அனுமதித்த தில்லை. அப்படியிருக்கையில் அவளை எப்படி உத்தியோகத்திற்கு அனுப்பப் போகின்றான்? இரு குடும்பத்தின் அம்மாமாரே அவ்வளவு கற்றிருந்தும் எந்தவொரு தொழிலுக்கும் போகாது வீட்டிலிருக்கையில் தனது மனைவியையா அவன் தொழிலுக்கு அனுப்பப் போகின்றான்? அந்த பல்கலைக்கழகத்திலேயே அவனுக்கு முன்னால் பலர் கஜனியை கிண்டல் செய்யும் போது எத்தனை பேருடன் சண்டைக்குப் போய் அடிதடியில் இறங்கிய அவன் எப்படி அவளை உத்தியோகத்திற்கு அனுப்புவான்?

திருமணமாகி மூன்று வருடங்களாகியும் அவர்களுக்கு குழந்தைகள் இருக்கவில்லை. வீட்டில் தனியே இருக்க அவளால் முடியவில்லை. எனவே அவனுக்குத் தெரியாமல் திறந்த பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக ஆகுவதற்கு விண்ணப்பித்திருந்தாள். விண்ணப்பித்தவுடன் அவனை எவ்வாறேனும் சம்மதிக்க வைக்க அவள் அரும்பாடு பட்டாள். இருந்தும் பயனற்றுப் போனது. பின் அவனது சொல்லையும் மீறி அவள் வேலைக்குச் சென்றாள். அதனால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் உண்டாகின. சிறு குழப்பங்கள் நாளடைவில் பெரிதாகி விவாகரத்து வரை சென்றது. அதற்கிடையில் அவளுக்கு அலுவலகத்தில் அவளது நேர் மேலதிகாரியால் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டன. இவற்றை சகித்துக் கொண்டு வேலை புரிய அவளது மனம் இடம் கொடுக்கவில்லை. ஒரு நாள் அவரது சேட்டை அதிகரிக்கவே அன்றுடன் பணிபுரியும் ஆசை அவளை விட்டகன்றது. உடன் தன் தவறை எண்ணி வருந்தியவள் தன் கணவனிடம் சென்று மன்னிப்புக் கோரி மீண்டும் அவனுடன் சேர்ந்து வாழத் தொடங்கினாள்.

# இதுவல்லவோ பாசம்

ஆனால் அந்த அம்மணியோ நான் வந்து நான்கு நாட்கள் தான் ஆகிறது. என் கணவனுக்கு இளைப்பு நோய் வந்து மருத்துவமனையில் அட்மிட் பண்ணி இருக்கின்றோம். நான் எப்படி வர இயலும் என்று தன்னுடைய இயலாமையை கூறினாள்.

எனில் அவளுடைய குடும்பத்திற்கு விசா ஏற்பாடு பண்ணுங்க என்று கூறி, அவளிடம் அனுமதியும் வாங்கப்பட்டது. அடுத்த பிரச்சனை. அவளுடைய கணவருக்கும் குழந்தைகளுக்கும் பாஸ்போர்ட் இல்லை. சிறிலங்காவிற்கு விசா கிடைப்பது அரிது. அதுவும் பாமிலி விசா- குதிரைக்கொம்பு. குறைந்தது 4 வாரங்கள் ஆகும். அதுவரை குழந்தை தாங்குமா?

அதற்கு அந்த சௌதி என் மனைவி ஒரு அமீரா(இளவரசி). என கூறி 2 நாட்களில் அனைத்தும் முடிந்து அவர்கள் அனைவர்களும் தம்மாம் ஏர்போர்ட் வந்து இறங்கி விட்டார்கள். குழந்தையின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. கசக்கி போட்ட சிறு துண்டு போல கிடந்தது. ஒரு சிறு அசைவு கூட இல்லை. நேராக அவர்களை அழைத்துக்கொண்டு சாத் மருத்துவமனைக்கு சென்றனர்.

குடும்பத்தார்கள் கூட்டம் ஒருபக்கம். நண்பர்கள், நிறுவனத்தின் முக்கிய ஆட்கள் என்று பெரும் கூட்டம். குழந்தை இருந்த அந்த சூட்-க்குள் சென்றனர். குழந்தை இருந்த நிலையை பார்த்ததும் அந்த அம்மணி கதறி விட்டார். அவளை தேற்றி ஆறுதல் படுத்தி குழந்தைக்கு அருகில் அழைத்துச் சென்றனர். மெதுவாக அம்மணி ஆதில், ஆதில் ராஜா! (தமிழில் தான்) என்று கூற கூற காலின் பெருவிரல் அசைய ஆரம்பித்தது. இங்கிலாந்து மருத்துவர் சைகை காட்ட காட்ட அந்த அம்மணி ஆதில் ஆதில்.. ராஜா.. ராஜா.. என் ராஜா.. என்று கூறக் கூற, ஒரே நிசப்தம். சிறிது சிறிதாக குழந்தையிடம் அசைவு தெரிய.. அனைவரது முகத்திலும் பிரகாசம் தெரிய ஆரம்பித்தது. ஒரு 20 நிமிடத்தில் கண்ணை திறந்தான். அருகில் இருக்கும் கத்தாமா(அம்மணி)வை பார்த்தான்.

எப்படி தான் அவன் உடலில் இவ்வளவு சக்தி வந்ததோ தெரியவில்லை. சடார்..... என்று எந்திரிக்க உடலில் இணைக்கப்பட்ட வயர்கள், டியூப்கள் எல்லாம் இழுபட அவளை கட்டிப்பிடித்து, முதுகில் குத்து குத்து என்று குத்தி, கறுத்த அவளுடைய முகத்திலும், கழுத்திலும் முத்தங்கள் பொழிய அனைவருடைய கண்களிலும் கண்ணீர் உருண்டு ஓடியது.

எத்தனை பாசமலர் படம் பார்த்தாலும் இந்த காட்சி கிடைக்காது. அங்கு வந்து இருந்த அனைத்து பெண்மணிகளும் அந்த பெண்மணியை முத்தத்தால் நனைத்தார்கள். சிறிது நேரத்தில் அந்த வளாகம் குதூகலமாகவும், சந்தோசமாகவும், ஒரு பார்ட்டி ஹால் மாதிரி உருமாறி விட்டது.

தொடர்ந்து அவருடைய கணவருக்கு அதே மருத்துவ-மனையில், மருத்துவம் அவர்களின் நிறுவனத்தில் நல்ல ஊதியத்தில் வேலை, குழந்தைகளுக்கு நம்ப முடியாத பள்ளியில் உயர்ந்த கல்வி. கொடுக்க நினைப்பவன் கொடுக்க நினைத்தால்.....!!!! வாழ்க்கை வசந்தமே...!

முற்றும்





தொகுப்பு - தன்யா
முகப்புத்தகத்திலிருந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## இஸ்லாம் கூறும் குற்றப் பரிகாரங்கள்

**அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்**



எவர் இதற்கும் சக்தி பெறவில்லையோ அவர் அறுபது ஏழைகளுக்கு உணவளித்தல் வேண்டும். அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீது விசுவாசம் கொள்வதற்காக (இவ்வாறு கட்டளையிடப்பட்டுள்ளது) மேலும் இவை அல்லாஹ் விதிக்கும் வரம்புகளாகும். அன்றியும் மாறுசெய்பவர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு". (58:3,4)

சிறு பாவங்களுக்கான குற்றப்பரிகாரங்கள்

1) ஐவேளைத் தொழுகை

பெரும் பாவத்தை தவிர்ந்து கொண்ட எந்த முஸ்லிமாவது ப்ர்ளான தொழுகைக்காக நல்ல முறையில் ஒழுச் செய்து அத்தொழுகையை நல்ல முறையில் தொழுதால் அதற்கு முந்திய பாவங்களுக்கு அது பரிகாரமாகும். .து காலம் முழுவதுமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனனுல் பைஙகி)

2) ஜும்ஆ தொழுகை

யார் வெள்ளிக் கிழமை குளித்து, பல் துலக்கி, அவரிடத்திலுள்ள மணத்திரவியத்தை பூசி, அவருடைய ஆடையில் நல்லதை அணிந்து, பள்ளிக்கு வந்து மனிதர்களின் பிடரியை மடக்கிக் ரெண்டு செல்லாமல்,அவருக்கு முடிந்த அளவு சுன்னத் தொழுது, இமாம் (குத்பா பிரசங்கத்திற்காக) வெளியானதிலிருந்து (ஜும்ஆ) தொழுகையை தொழும் வரை வாய்மூடி (யாரிடமும் பேசாமல்) இருந்தால் ஜும்ஆவிற்கும் அதற்கு மந்திய ஜும்ஆவிற்கும் மத்தியிலுள்ள பாவங்களுக்கு பரிகாரமாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (சுனனுல் பைஙகி)

பெரும் பாவங்களிலிருந்து தவிர்ந்து கொண்டால் ஐவேளைத் தொழுகைகள் மற்றும் ஒரு ஜும்ஆவிலிருந்து அடுத்த ஜும்ஆவிற்கும் இடையிலுள்ள தவறுகளுக்கு பரிகாரமாகும். என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

தொடரும்... – ஆசிரியர் : ஆரிஃப் –

## திருச்சபையின் வரலாறு

திருச்சபை வரலாறு பற்றி எழுத வேண்டுமென்று அநேகர் பல வருடங்களாகவே கேட்டு வந்துள்ளனர். தமிழில் முறையாக எழுதப்பட்ட திருச்சபை வரலாற்று நூல்கள் இல்லை. இருப்பவையும் ரோமன் கத்தோலிக்க மதத்தின் அடிப்படையில் எழுதப்பட்டு சீர்திருத்த காலத்தை வேண்டத்தகாததாகவே படம்பிடித்துக் காட்டுகின்றன. இந்தியாவில் இருந்து ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள சபை சரித்திர நூல்களும் இதே வகையில்தான் எழுதப்பட்டுள்ளன. சமீபத்தில் செராம்பூர் கல்லூரி நிர்வாகத்தினரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்திய திருச்சபை சரித்திர நூல் ஒன்றை நான் பெற்று வாசிக்க நேர்ந்தது. இதில் ரோமன் கத்தோலிக்க சபை கிறிஸ்தவ சபையாகவே வர்ணிக்கப்-பட்டிருக்கிறது. ஆகவே, சீர்திருத்த விசுவாசத்தின் அருமை பெருமைகளையும், அதன் அவசியத்தையும் வாசகர்கள் புரிந்துகொள்ள திருச்சபை வரலாறு அவசியம் என்பதாலும், சீர்திருத்த, சுவிசேஷ இயக்கத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட திருச்சபை வரலாற்று நூல் ஒன்று தமிழில் இல்லாத குறையைத் தீர்ப்பதற்காகவும் இப்பக்கங்களில் தொடர்ந்து திருச்சபை வரலாறு பற்றி எழுதத் தீர்மானித்துள்ளேன். சீர்திருத்தப்போதனைகள் வளர இதைக் கர்த்தர் பயன்படுத்துவராக!

முதலாவது நூற்றாண்டு முடிவடை-வதற்குள் சுவிசேஷம் எருசலேமுக்கு வெளியில் பல நாடுகளுக்கும் பரவி இருந்தது. எந்தவித எதிர்ப்பாலும் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. கிழக்குப் பகுதிகளில் மெசப்பொடேமியா, பார்தியா வரையும் சுவிசேஷம் பரவியிருந்தது. மேற்கு நாடுகளில் பிரான்ஸ், ஸ்பெயின் வரை பரவியிருந்தது. திருச்சபை ரோம், கார்த்தேஜ், அலெக்சான்டிரியா போன்ற நகரங்-களில் பெரும் வளர்ச்சியடைந்-திருந்தது. அந்தியோகியா, எபேசு, கொரிந்து பட்டணங்களில் சபை வல்லமையுடன் விளங்கியது. கிறிஸ்தவர்கள் அரேபியா, இல்லிரியா, சிரியா போன்ற இடங்களெல்லாம் பரவியிருந்தனர். எழுபது வருடங்களில் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் சபை வளர்ந்து வந்தது.

ஆனால், இரண்டாம் நூற்றாண்டின் முதல் எழுபது வருடங்களும் திருச்சபை வரலாற்றில் தெளிவற்ற ஒரு நிலை காணப்பட்டது. இக்காலத்தின் ஆரம்பப் பகுதியில் அப்போஸ்தலனான யோவான் மரணமடைந்தார். டொமிஸியன் என்ற ரோம பேரரசன் காலத்தில் பெத்மோஸ் தீவில் நாடுகடத்தப்பட்டு வாழ்ந்து வந்த யோவான். டொமிஸியன் 96 இல் இறந்தவின் மீண்டும் தன் நாட்டுக்குத் திரும்ப முடிந்தது. டொமீஸியன் இரண்டாம் நீரோ என்று அழைக்கப்படும் அளவுக்கு கிறிஸ்தவர்களுக்கு எதிராக அநேக கொடுமைகளைச் செய்திருந்தான்.

தொடரும்... www.bible.me

## அழகு குறிப்புகள்

வாழ்க்கை முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்தும் போது உடல் அழகு நம்மிடம் எளிதில் வந்துவிடுகிறது.

1. மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டு பார்க்காதீர்கள். ஒவ்வொருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். இவற்றை மாற்றிக் கொள்ளுங்கள்.

2. மற்றவர்களுடன் அன்பாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள். இந்த அன்பான பழக்கவழக்கம் முகத்தை அழகாக காட்டும்.

3. வாய்விட்டு சிரியுங்கள். இதன் மூலம் உங்களை சுற்றி வசீகர அலை பரவும். உங்களின் சிரித்த முகம் பலரையும் சுண்டி இழுக்கும்.

4. உடலில் கவனத்தை செலுத்துங்கள். உடலை கட்டுக்கோப்பாக ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள். இதனால் உற்சாகமாக இருக்கமுடியும்.



5. முகம் அழகானவர்களை விட திறமையால் அழகாக தெரியும் பலரை பார்த்திருப்பீர்கள். திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

6. பிறரை குறை கூறும் பழக்கத்தை விட்டு விடுங்கள். சிறிய விடயங்களையும் பாராட்ட கற்றுக் கொள்ளுங்கள்.

7. உன்னால் முடியும் என்று நம்பிக்கை ஊட்டும் சொற்களை மற்றவர்களுக்கு கூறுங்கள். நம்பிக்கை எண்ணமே உங்களை தனித்தன்மையுடன் காட்டும்.

8. உங்களுக்கு உங்களையே பிடிக்காமல் இருக்கலாம். முதலில் அதை விட்டுவிடுங்கள். நிறம், உயரம் ஆகியவற்றை பற்றி கவலைப்படுவதை விட்டு விட்டு உங்களை நீங்களே நேசியுங்கள்.

9. உங்களுக்குள்ளே ஒரு குரல் இது முடியாது என்று அவநம்பிக்கையை ஏற்படுத்தும். அதைவிடுத்து நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

10. நடை, உடை போன்றவற்றில் கவனமாக இருத்தல், பாதங்களை சீராக வைத்துக் கொள்ளுதல், நறுமணம் வீசும் பொருட்களை பயன்படுத்துதல் போன்றவற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்துக் கொள்ளுங்கள்.

## பிறந்த எண் பலன்கள் 5

ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்கள் எதிலும் பிறர் உதவியின்றி தனித்து செயல்பட முடியாது. பலரது அபிப்ராயத்தைக் கேட்டு தெரிந்து கொண்டாலும் தங்கள் மனதில் உள்ளதை வெளியிட மாட்டார்கள். எதையும் வெகு எளிதில் கிரகித்து கொள்வார்கள். பின்னால் நடக்கப் போவதைகூட முன் கூட்டியே அறியக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள். வெளித் தோற்றத்திற்கு வெகுளியாக காட்சியளிக்கும் இவர்கள் மிகுந்த காரியவாதிகள். பிடிக்காதவர்களின் தொடர்பை உடனே அறுத்தெறிவார்கள். இவர்களின் பேச்சில் கேலியும் கிண்டலும் நிறைந்திருக்கும். மற்றவர்களுக்கு துன்பம் நேர்ந்தால் மனதிற்குள் சந்தோஷப்படுவார்கள். எதையும் அவசர அவசரமாக செய்து முடிப்பார்கள். சிரிக்க சிரிக்கப் பேசி தன்னுடைய காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். இவர்களுக்குத் தனிமை பிடிக்காது.

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தன்னம்பிக்கை-யுடன் செயல்படுவீர்கள். அக்கம் பக்கத்தினரின் பாராட்டு கிடைக்கும்.



**ரிஷபம்** : பணவரவில் முன்னே-ற்றம் உண்டு. குடும்பத்தில் சுபம் குறித்த பேச்சு நிகழும். உறவினர்கள், பாசமுடன் பழகுவர்.



**மிதுனம்** : குடும்பத் தேவை-க்கான செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.



**கடகம்** : உறவினர்களிடம் அளவாக பேசுவது நல்லது. உழைப்பினால் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்பு செய்ய நேரிடும்.



**சிம்மம்**: இனிய பேச்சால், பிறரை கவர்வீர்கள். உடன்பிறந்தவரால் உதவி கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.



**கன்னி** : செயலில் புத்துணர்ச்சி வெளிப்படும். விலகிய சொந்தம் நெருங்கி வந்து பாராட்டும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.



**துலாம்** : புதிய பணிகளை நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் உயரிய அந்தஸ்து கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு செலவு உண்டாகும்.



**விருச்சிகம்** : பணிகள் தங்கு தடையின்றி நிறைவேறும். வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுங்கள். உடன் பிறந்தவர்களின் உதவி, ஓரளவே கிடைக்கும்.



**தனுசு** : சிறிய முயற்சிக்குக் கூட பெரிய நன்மை காண்பீர்கள். நண்பர்களின் உதவி, தக்க சமயத்தில் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். உறவினர்களுடன் இணக்கம் ஏற்படும்.



**மகரம்** : புதியவர்களின் நட்பு கிடைக்கும். சகோதரர்களின் ஆலோசனை, வளர்ச்சிக்கு துணை நிற்கும். வாகன பயணம் இனிதாக அமையும். புதிய நடைமுறையை பின்பற்றி, லாபத்திற்கு வழிவகுப்பீர்கள்.



**கும்பம்** : சிறு முயற்சியிலும் பெரிய நன்மை உண்டாகும். எதிரிகள், இருந்த இடம் தெரியா-மல் பறந்தோடுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



**மீனம்** : மற்றையவர் விடயத்தில் தலையிடுவதை தவிர்க்கவும். குடும்பத் தேவைக்கான பண செலவு அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணங்களில் விழிப்புடன் இருப்பது நல்லது.




அந்த ஆளுக்கு ஏன் கலண்டர் இல்லைன்னு திருப்பி அனுப்பிட்டே...?

அவர் ரெண்டாயிரத்து பதினைந்து கலண்டர் கேட்டார் முதலாளி! நம்மிடம் நூறு கலெண்டர் தானே இருக்கு...!!

103க்கும் 105க்கும் நடுவுல என்ன இருக்கு?

"104"

நீங்க என்ன கணக்குல வீக்கா? நடுவுல "0" தானே இருக்கு!

நோயாளி : என்ன! தினமும் பச்சை முட்டை சாப்பிடணுமா? முடியாது டாக்டர்

டாக்டர் : ஏன் முடியாது?

நோயாளி : ம்ம்... எங்க வீட்டுல வெள்ளை முட்டை தானே இருக்கு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு.... மக்கள் முரசு

உங்களோடு இங்கே அமேரிக்கா பற்றி உரையாடிக் கொண்டு இருக்கும் பொழுது அமெரிக்காவிற்குள் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. சிலவற்றை தொட்டுக் கொண்டு 2ம் உலக யுத்தத்தில் அமெரிக்காவின் சில்மிசங்களைப் பார்க்கலாம்.

ஈரானுடன் அணு சக்தி, மற்றும் செறிவூட்டல் தொடர்பாக அமேரிக்கா பல சுற்று இரகசிய பேச்சுவார்த்தை-களை நடத்திக் கொண்டிருக்கிறது. என்ன பேசுகிறார்கள் என்று வெளியில் தெரியாத பொழுதும் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு அனைத்து உலக நாடுகளும் ஆவலாக காத்திருக்-கின்றன. அதேநேரம் 2016 நவம்பரில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வர இருப்பதால் அங்கே மிகவும் செல்வாக்குடைய இரு பெரும் கட்சிகளான ஜனநாயக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சிகளுக்குள் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் போட்டியில், கட்சிகளுக்குள் வாக்கெடுப்பு நடைபெறுவதால் இந்த ஈரான் விவகாரம் சூடுபிடித்த பேசு பொருளாக அமைந்திருக்கிறது.

அதனை விட இந்த மாதம் அமெரிக்க உயர் நீதிமன்றத்தால் "ஒரே பால் திருமணம்" சட்டரீதியானது என்றும் அனைத்து மாநிலங்களிலும் அமுலுக்கு வருகிறது என்றும் சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதாவது தனி மனித விருப்பு வெறுப்புகளை அது கணக்கில் எடுத்திருப்பதாக காட்டியிருக்கிறது.

அவை அப்படியே நிற்க. 2ம் உலக யுத்தத்தில ஜப்பானை வைத்து 1941 இல் "அமெரிக்காவின் கர்வம்" பேர்ல் காபரை தாக்கி அமெரிக்காவை யுத்தத்திற்குள் அழைத்து வந்து விட்டோம். என்னதான் மாயம் செய்வார்களோ தெரியாது அவர்கள் உள்ளே நுழைந்தால் யுத்தத்தின் போக்கு மாறுகிறது. 1வது உலகப் போரிலும் சரி, 2ம் உலகப் போரிலும் சரி. அமேரிக்கா நுழைந்ததுமே நேச நாட்டுப் படைகளுக்கு ஒரு கிக் கிடைத்ததாக ஆய்வாளர்கள் சொல்லியிருக்கி-றார்கள்.

அதாவது 1939 தொடங்கி 1941 இன் ஆரம்பம் முதல் 2ம் உலக யுத்தம் சூடு பிடிக்க வில்லை என்றும், ஆங்காங்கே சண்டைகள் நடந்ததாகவும், ஆனால் பெரும்பாலான வீரர்கள் ஓய்விலேயே களத்தில் இருந்தார்களாம். அந்த காலபகுதியை ஆய்வாளர்கள் "போலிப்போர்" (Phoney War) என்று குறிப்பிடுகிறார்கள். அச்சமயம் அமேரிக்கா- பிரிட்டனுக்கு ஆயுத வழங்கல் செய்ததும், அந்த கப்பல்களை தேடி ஜெர்மன் நீர் மூழ்கிகள் தாக்கியளித்ததும் நடந்த வண்ணமே இருந்திருக்கிறது. ஆயுதக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டால் உண்டாகிற வேதனை நமக்கு புரியாததும் அல்ல. அமெரிக்காவின் நுழைவு, போரின் திசையையும் கதியையும் மாற்றியது என்றே சொல்கிறார்கள்.

இதே போன்று கடந்த காலங்களில் தமிழரின் ஆயுதப் போர் வரலாற்றிற்குள்ளும் இப்படியான நிலைமைகள் இருந்ததாக பல இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். கட்டமைக்கப்பட்ட கடும் கட்டுக் கோப்புகள் உடைய படையணிகளை தமிழர் தரப்புக் கொண்டிருந்தனர். அதிலும் சில படையணிகள் களத்தில் நிக்கிறதாம் என்று செய்தி வந்தாலே அங்கே முன்னரங்கில் நிற்பவர்களுக்கு ஒரு உத்வேகம் கிடைத்ததாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதனைவிட எதிரிகளுக்கு அந்த செய்தி கிடைத்தால் வயிற்றைக் கலக்குவதாகவும் சொல்லு-வார்கள். அவ்வளவு ஏன்? சில தளபதிகள் வந்து நிக்கிறாங்கள் என்றாலே எதிரிகளுக்கு அந்த நிலைமைதானாம். இவற்றை நான் சொல்ல வில்லை. யாரோ சொன்னார்கள்.

இந்த இரண்டாம் யுத்த காலப்பகுதிக்குள் சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளும் தனித்தும் கூட்டுச் சேர்ந்தும் ஏறக்குறைய 500 குறையாத இராணுவ நடவடிக்கைகளை செய்திருக்கிறது. அதிலும் அமேரிக்கா ஜப்பானுடன் மிகவும் மூர்க்கமாகவும், பலமாகவும் போரிட்டிருக்கிறது. தென் கிழக்காசிய நாடுகள், மற்றும் வளங்கள் நிறைந்த அமேரிக்கா ஆளுகைக்குள் இருந்த பசுபிக் சமுத்திரம் எங்கும் பரவிக் கிடக்கும் பல தீவுக் கூட்டங்களை பாதுகாக்கவும், அங்கே அமைக்கப் பட்டிருந்த கண்காணிப்பு நிலைகளுடன் இராணுவ தளங்கள் களஞ்சியங்களை பாதுகாக்கவும் போரிட்டிருக்கிறது. கடல் வான் தரை என அனைத்து வளங்களை-யும் அமேரிக்கா ஒருங்கிணைத்தே போராடியது. அதிலும் ஜப்பானிய ஜேர்மனிய நாசகார நீர்மூழ்கிகள் மிகவும் பயங்கரமாக சேதங்களை அமெரிக்கா-விற்கு உருவாக்கியது. ஜேர்மனிய U -boat என்கிற நீர்மூழ்கிகள் அமெரிக்க ராடரிலே தட்டுப் பட்டால் அமெரிக்க வீரர்களுக்கு வயிற்றில் புளியை கரைப்பதாக சொன்னார்களாம். ஜப்பானிய சிறிய போர்க்கப்பல்களை பார்த்து பிசாசுப்படகுகள் என்ற இந்த அமேரிக்கா கலங்கித்தான் போயிருக்கிறது.

இந்த உலகப்போரின் தீவிரத்தை உணர்ந்து கொள்ள ஒரு ஒப்பீடு ஒன்றை சுட்டிக் காட்டலாம். அதாவது கார் தயாரிப்பிலும் விற்பனையிலும் அப்பொழுதும் கொடிகட்டிப் பறந்தது அமெரிக்காதான். ஆனால் போர் தாங்கிகளை வடிவமைத்து போரில் தாக்குதல் வழிமுறைகளையும் உருவாக்கியது ஜெர்மனிதான். அன்றைய நாளில் அமெரிக்காவில் ஒரு நாளைக்கு எத்தனை கார் தயாரிக்கப் பட்டதோ, அதே எண்ணிக்கையில் ஜெர்மனியில் போர் தாங்கிகள் உற்பத்தி செய்யப் பட்டதாக வராலாறுகள் சொல்கிறது. உலகப்போரில் ஜெர்மன் வென்றிருந்தால்? என்ற கேள்வியே புரியவைக்கும் அந்தப் போரின் தீவிரத்தை...

அந்த நேரம் அமெரிக்க ஜனாதிபதி-யாக இருந்தவர் ரூஸ்வெல்ட் என்றாலும் முப்படை ஒருங்கிணைப்பு மற்றும் படை நடவடிக்கைகள் தொடங்கி கீழ்மட்ட படை விசாரணை-கள் வரை ஆயிரம் கைகள் கொண்டு செய்து முடித்தவர் General of the Army . George Catlett Marshall, Jr. (1880 – 1959) முதலாம் உலகப்போர் கண்டு, பின்னர் இரண்டாம் உலகப்போரிலும் ஆளுமையை நிலை நிறுத்தியவர். அத்துடன் நோபல் பரிசும் வென்றவர். ஐந்து நட்சத்திர அதிகாரியாக Field marshal தரத்தில் இருந்தவர். இறுதிவரை அமெரிக்க இராணுவத் திற்-காகவே பணியாற்றியவர். மேலும் அந்த இரண்டாம் உலக யுத்தத்தினால் அதிகரித்த அமெரிக்க காலாட்படை பயிற்சிகளுக்காக அவர் உருவாக்கிய முகாம்கள், பயிற்சி நெறிகள். தந்திரோபாயங்கள் என்று ஏராளமாக உள்ளன. அதிலும் அவர் உருவாக்கிய நூலான "Infantry in Battle" என்கிற நூல் இன்றளவும் அமெரிக்க இராணுவத்தால் பின்பற்றுகிற ஒரு வழிகாட்டல் நூலாக இருக்கிறது என்கிற ஒரு விடயமே போதும் அவருடைய ஆளுமைகளை பறைசாற்ற...

என்னதான் மத்தியில் அரசு உறுதி என்றாலும் போர் என்று வரும் பொழுது தளபதி அங்கே முக்கியமா-கிறான். தமிழர் தரப்பில் அப்படி உதாரணங்கள் பல இருந்தாலும், எதிரியை கூட சமனாக மதிக்கும் பண்பு எம்முடையது என்பதால். இங்கே நாம் சரத் பொன்சேகா அவர்களை எடுத்துக் காட்டலாம். மிகச்சிறந்த இராணுவப் போர் வீரன். போர் இறுக்கம் என்றால், அவனது படை பின் வாங்குகிறது என்றால் களத்தின் முன்னணிக்கு போய் இறங்கக் கூடியவன். தமிழர்களுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் இலங்கை அரசுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரம் சரத் பொன்சேகா. உலக நாடுகள் ஆயிரம் உதவிகளை செய்திருந்தாலும் சரத் பொன்சேகாவின் உறுதியும் வழிநடத்தலும் தான் அவர்களுக்கு வெற்றி தேடித் தந்தது. (புரியும் என்று நினைக்கிறேன்...)

பொதுவாக தமிழர்களுக்கு 2ம் உலகப்போரின் பல விடயங்கள் தெரிய வந்ததே கடந்த தமிழர் போராட்டத்தின் வழிதான். உலக யுத்தத்தில் இடம்பெற்ற பல சம்பவங்கள் தமிழர் போரியலுடன் ஒப்பிடப்படுகிறது.

வருகை - 07



தொடரும்

வித்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து...

## 30 வருட காலமாக ஒரே மாதிரி புகைப்படம்

அமெரிக்காவை சேர்ந்த ஜான் வார்ட்லா, ஜான் டிக்சன், மார்க் ரூமர், டாலாஸ் புரூனி மற்றும் ஜான் மொலொனி இவர்கள் ஐவரும் கடந்த 30 ஆண்டுகளாக கலிபோர்னியாவில் உள்ள கொப்கோ ஏரியில் ஒரே மாதிரி புகைப்படம் எடுத்துவருகின்றனர். பள்ளியில் படிக்கும் போது முதல் முறையாக கடந்த 1982 ஆம் ஆண்டு நண்பர்கள் ஐந்துபேரும் புகைப்படம் எடுத்துகொண்டனர். பின்னர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று கொப்கோ ஏரிக்கு சென்று ஐந்து பேரும் கடந்த முப்பது ஆண்டுகளாக தவறாமல் புகைப்படம் எடுத்து வருகின்றனர்.





## விநோதங்கள்

### ஏன் இந்த கொலைவெறி

பிரித்தானியாவின் லண்டனில் இருந்து சென்றுகொண்டிருந்த ரயில் ஒன்றில் பயணம் செய்த 40 வயது மதிக்கத்தக்க ஒரு தம்பதி காம விளையாட்டில் ஈடுபட்டனர். ஏராளமான பயணிகள் இருந்தபோதும் அதைபற்றி கவலைப்படாமல் சுமார் 30 நிமிடங்களுக்கு இவர்கள் சில்மிஷத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இதை பார்த்து அதிர்ச்சியடைந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வேறு இடத்துக்கு அழைத்து சென்றனர். இந்நிலையில் இவர்களை கைது செய்ய முடிவு செய்துள்ள பிரித்தானிய போக்குவரத்து காவல்துறையினர் அவர்களின் புகைப்படத்தை இணைய-தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

### அதிகபட்ச தண்டனை

வடக்கு மெக்சிகோவில், 11 பெண்களை கொலை செய்த ஐந்து பேரின் வழக்கு விசாரணைக்கு வந்தது. அவர்கள் மீது பெண்களை பாலியல் மற்றும் போதைப் பொருள் விற்பனைக்கு பயன்படுத்தி, பின் அவர்களை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அவர்களும் பெண்களை கொலை செய்து, அவர்களின் உடல்களை, ஜுவாரேஜ் பள்ளத்தாக்கில் வீசியதாக, ஒப்புக்-கொண்டனர்.

இதையடுத்து, அவர்களுக்கு, 697 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது, மேலும் அவர்களால் கொலை செய்யப்பட்ட பெண்களின் குடும்பத்தினருக்கு, 4.80 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கவும் உத்தரவிடப்-பட்டுள்ளது.

- பிரான்ஸ், பாரீஸில் உள்ள ரயில் நிலையத்தில் ரயிலின் கூரை மீது அமர்ந்து பல நபர்கள் பயணம் செய்துள்ளனர். அப்போது, லண்டனை நோக்கி சென்ற யூரோ ஸ்டார் என்ற ரயில் எதிர்புறமாக வந்துள்ளது. லண்டனிற்கு சட்டவிரோதமாக நுழையும் முயற்சியில், இரண்டு ரயில்களும் அருகருகே வந்தபோது, எகிப்து நாட்டை சேர்ந்த இளம் வாலிபர் ஒருவர், ரயிலில் இருந்து யூரோ ஸ்டார் ரயில் மீது திடீரென தாவியுள்ளார். அந்த நபர் தாவியதும் யூரோ ஸ்டார் ரயில் மேல்புறத்தில் இருந்த உயர் மின்னழுத்த கம்பியில் சிக்கி இறந்துள்ளார்.
- குவைத் ஏர்வேசுக்கு சொந்தமான விமானம் ஒன்று பிரித்தானியாவில் இருந்து நியூயோர்க் புறப்பட்டு நடுவானில் பறந்துகொண்டிருந்த போது, அதில் பயணம் செய்த ஆபாச படங்களில் நடித்துவரும் நடிகை விமானியின் அறைக்குள் நுழைந்து விமானியுடன் உல்லாசமாக இருந்ததை அடுத்து விமானி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்படியும் நடக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# TNA க்கு சோதனையா? ஆயின் TNPF அதனை சாதனையாக்குமா? குழம்பிய குட்டைக்குள் மீன் பிடிக்கப்போவது யார்?

தமிழ்த் தேசியக் கூட்டமை-ப்பிற்கும் த.தே.ம.முக்கும் இடையே மூர்க்கத்தனமான போட்டிப் பிரச்சாரங்கள் நிகழத் தொடங்கியுள்ளன.

இப் பிரச்சாரங்களில் த.தே.ம.மு சார்பில் பெரும்பாலும் இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பகுதியினர், அதன் நிர்வாக மட்டத்தில் உள்ளவர்களில் ஒரு பகுதியினர், பல்கலைக் கழக ஆசிரியர்களில் ஒரு பகுதியினர், பாடசாலை ஆசிரியர்கள் சிலர், சமூக ஆர்வலர்கள், சிவில் சமூகத்தில் உள்ள சிலர் எனப் பலதரப்பட்டவர்கள் இத்தகைய பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடைய நோக்கம் முழுவதும் தமிழ்த் தேசியக் கூட்ட்மைப்பை இல்லாது செய்ய வேண்டும் என்பதாக இருக்கிறது. அதன் பின் · நடக்க வேண்டியது தானாக நடக்குமா? அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை வலுவிலக்கச் செய்த பின் தாம் மேற்கொள்ள வேண்டிய அவசிய நடவடிக்கைகள் பற்றி இவர்கள் தெளிவான சிந்தனையைக் கொண்டுள்ள-னரா?

த.தே. கூட்டமைப்பில் உள்ள சில தனி நபர்களுடனான முரண்பாட்டில் முழுக் கூட்டமைப்பையே நிர்மூலமாக்கும் நோக்கத்தை த.தே.ம.மு கொண்டிருப்ப-தாகத் தெரிகிறது.

அண்மையில் முதலமைச்சர் எஸ் கே விக்கினேஸ்வரன் அவர்கள் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வாழ்கின்ற நாடுகளுக்கு பயணத்தை மேற்கொண்-டிருந்தார்.

புலம்பெயர் தமிழர்களையும், அகத்தில் உள்ள தமிழர்களையும் இணைக்கும் பாலமாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் விளங்க மாட்டாரா? என்ற கோரிக்கையும் அப்பொழுது ஊடகங்களில் வெளிப்பட்டது. குறிப்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பிரித்தானிய விஜயத்தை, அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழ்த் தேசிய முன்னணிக்குப் பாய வைப்பதற்கான பயணமாக மாற்றப் பலர் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டதாக அறியக்கிடைக்கிறது.

தவிரவும், சம்பந்தன், மற்றும் சுமந்திரன் இல்லாத கூட்டமைப்பின் தலைவராக முதலமைச்சர் விக்னேஸ்வரனை முன்னிலைப்படுத்துவதற்கான முயற்சி-களும் திரை மறைவில் மேற்கொள்ள-ப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இங்கு கூட்டமைப்பின் தலைவர் மாறுவது பற்றியோ அல்லது சம்பந்தன் சுமந்திரன் ஆகியோர் கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப்படுவது பற்றியோ யாருக்கென்ன கவலை. அதுவல்ல பிரச்சனை.

மாகாண சபை முறைமையை ஏற்றது தவறு, மாகாண சபைத் தேர்தலில் பங்கு கொண்டது தவறு, பிள்ளையானும், வரதராஜப்பெருமாளும் நிராகரித்த அல்லது பிரயோசனம் அற்றது எனக் கூறிய மாகாண சபையை ஏற்பவர்களைத் துரோகிகளாகத்தானே கருத வேண்டும் எனக் கூறியவர்கள், கொழும்பு 7ல் தனது வாழ்நாள் காலத்தின் பெரும்பகுதியைக் கழித்த விக்னேஸ்வரனை முதலமைச்சராக நியமித்தது தவறு எனக் கூறியவர்கள். வாசுதேவநாணயக்கார மகிந்த ராஜபக்ஸவின் விசுவாசி. அத்தகைய விசுவாசியின் சம்பந்தியான துரோகியை எப்படி முதலமைச்சராக்க முடியும்? எனக் கேட்டவர்கள் அதே மாகாண சபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரனைக் கூட்டமைப்பின் தலைவராக்க விரும்பியதையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவு வழங்கக் கோரியதையும் என்னவென்று சொல்ல? புலம்பெயர் தமிழர்களைச் சந்தித்த போது முன்னாள் நீதியரசரும், வடக்கின் முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரனிடம், தமிழ்த் தேசிய முன்னணியை ஆதரிக்கும் தரப்பினர் ஒரு கோரிக்கையை முன்வைத்ததாக அறிந்தேன். "நீங்கள் ஏன் தமிழ்த் தேசிய முன்னணியை ஆதரிக்கக் கூடாது?" என்பதே அது அதற்கு அவர் மிகத் தெளிவான பதிலை வழங்கியுள்ளார். "நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக அரசியலில் பிரவேசித்தேன். அந்தக் கட்சியில் இருந்து விலகிப் பிறிதொரு கட்சியை ஆதரிக்கும் தேவை எனக்கு இல்லை".

மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணியுங்கள், ஜனாதிபதி தேர்தலை புறக்கணியுங்கள், என்ற கோசங்களை முன்வைத்த பலர் இலங்கையில் ஒரு பாராளுமன்ற தேர்தல் இவ்வளவு விரைவாக வருமென்று நினைத்திருக்க-வில்லை.

மாகாண சபைத் தேர்தலின் பின் ஜனாதிபதி தேர்தல் வரும் அத்தேர்தலில் மகிந்த ராஜபக்ஸவே மீண்டும் ஜனாதிபதியாக வருவார். அவரை எவரும் வெல்ல முடியாது. மகிந்த மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின் பாராளுமன்ற தேர்தலை அறிவிக்க மாட்டார். அவ்வாறு சென்றால் அப்போது அவர் கையில் இருந்த மூன்றில் இரண்டு பெரும்பாண்மை கிடைக்க மாட்டாது. எனவே ஜே.ஆர் செய்தது போல் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்ற ஆயுட்காலத்தை மேலும் 6 வருடங்களுக்கு நீடிப்பார் என்றே பலரும் கணக்கிட்டிருந்தனர். இந்த நிலையில், தமிழ்த் தேசிய அரசியற் செயற்பாட்டாளர்கள் ஐ.நாவை நோக்கிய தமது கோரிக்கைகளை வைத்து மகிந்த ராஜபக்ஸவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதற்கான செயற்பாடுகளை முடுக்கிவிட்டதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நோக்கிய விமர்சனங்களையும் முன்னெடுத்தனர்.

இக் காலப்பகுதியில் மக்களிடத்தே தமது அரசியல் நிலைப்பாடுகள் குறித்த வேலைத் திட்டங்களையோ, தமது கொள்கைகளையோ, அல்லது பாராளுமன்ற அரசியலுக்கான அணிதிரட்டல்களிலோ ஈடுபடவில்லை. மாறாகப் பத்திரிகை அறிக்கைகள், வெளிநாட்டு சந்திப்புகள், ஜெனிவாப் பயணங்கள் என்ற அளவிலேயே தமது செயற்பாடுகளைச் சுருக்கி இருந்தனர்.

இவர்கள் வடக்கில் யாழ்ப்பாணத்திலும், பின்னர் கிளிநொச்சியில் சிறிய அளவிலும் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து தமிழர் தாயகக் கோட்பாட்டை ஒரு நாடு இரு தேசக் கோரிக்கையாக சுருக்கிக் கொண்டனர்.

இவ்வாறான சூழல் தொடருகையில் ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு வெளியாகியது. வெளியாகிய பின் மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக களமிறங்குவார் என எவரும் எதிர்பாராத நிலையில் அவர் மகிந்தவுக்கு எதிரான அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பாளராக களமிறங்கினார். அப்போது கூட மகிந்தவை அவரால் ஒருபோதும் வெல்ல முடியாது என்ற பலரின் நினைப்பு தவறானது.

தீவிர தமிழ் தேசியச் செயற்பாட்டாள-ர்களின் எதிர்பார்ப்புகள், எதிர்வு கூறல்கள் தலைகீழாக மாறின. 100 நாள் வேலைத்திட்டத்தின் பின் பாராளுமன்ற தேர்தல் நடைபெறுவதும் உறுதியானது. ஜனாதிபதித் தேர்தலை புறக்கணி-யுங்கள், மகிந்தவின் மீள் வருகை ஒன்றே, ஐநாவை நோக்கிய தமிழ் மக்களின் நீதிகோரலை துரிதப்படுத்தும், அதற்கான சூழல் வரும் எனக் கூறியவர்கள் அவசர அவசரமாக பாராளுமன்ற தேர்தலுக்கு இப்பொழுது ஆயத்தமாகிறார்கள்.

மைத்திரியின் ஆட்சியில் துளி அளவு கூட மாற்றம் இல்லை என்று சொன்னவர்கள், அவரது ஆட்சியில் கிடைத்த அரசியல் இடைவெளியை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திற்கு வெளியில் வன்னியிலும், தேர்தல் அலுவலகங்-களைத் திறக்கத் தொடங்கினார்கள். மைத்திரியின் ஆட்சியினால் பயனில்லை என்று சொன்னவர்கள், இடையிட்டு புலனாய்-வாளர்கள் எம்மைத் தொடர்கிறார்கள் என அறிக்கைகளை விட்டு ஏனைய கட்சிகளைப் போல் தாமும் தாராளமாகப் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

குறைந்தது மாகாண சபைத் தேர்தல் காலத்திற்கு முன்னதாக, அல்லது 2010 தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த பின்பாவது வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் மேற்குறித்த கட்சி தமது அரசியற் பணிகளை ஆரம்பித்திருக்க வேண்டும். மாவட்டம் தோறும் அலுவலகங்கள் திறக்கப்பட்டு இருக்க வேண்டும். கிராமட்டங்களில் மக்களைத் திரட்டி அரசியற் தெளிவூட்டும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்க வேண்டும்.

பிரதான தமிழ்த்தேசியக் கட்சியாக தன்னை அடையாளம் காட்டி உள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ன தவறுகளை விடுகிறது. அக்கட்சியின் தலைமை இணக்க அரசியலுக்குள் பிரவேசிக்கிறதா அல்லது சலுகை அரசியலுக்குள் கால் பதிக்கிறதா? கட்சியின் தலைமை தமிழ் மக்களின் போராட்டத்தை, தியாகங்களை காட்டிக் கொடுக்கிறதா? கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களின், தலைவர்களின் தவறுகள் என்ன? கூட்டமைப்பு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறதா? கதிரைச் சுகங்களுக்காக தமிழ் மக்கள் மீது சவாரி செய்கின்றதா? என்பது போன்ற விடயங்கள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்திஅவர்களை அரசியல் மயப்படுத்தி இருக்க வேண்டும். அதனூடாக தமிழ் மக்களுக்கான மாற்றுத் தலைமை-யாக தாம் உருவாகுவதற்கான காரணத்தையும், அதன் வழி முழு மக்களும் தம்மை ஏற்றுக் கொள்ளும் மனநிலையினைத் தமது நடவடிக்கை-கள் மூலம் ஏற்படுத்தி இருக்க வேண்டும். இதனூடாக கூட்டமைப்பின் மீது அதிருப்தி கொள்பவர்கள் சரியான திசையில் திரும்ப ஏதுவாகும்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது ஏற்படுகின்ற அதிருப்தி, விரக்தியாக மாறாமல், அதன் வழி இவங்களுக்கு வாக்களிப்பதை விட, UNPக்கோ, அல்லது EPDPக்கோ, அல்லது SLFP அங்கயனுக்கோ வாக்களிக்கலாம் என்கிற நிலமை ஏற்படாதிருக்கும்.

கூட்டமைப்பின் மீது தொடர்ச்சியாக தொடுக்கப்படும் ஆரோக்கியமானதும் ஆரோக்கிய மற்றதுமான தாக்குதல்-களால் பலர் ஒருவித அரசியல் விரக்திக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். காரணம், பலர் 30 வருட ஆயுதப் போராட்டத்தில் அடைந்த வலிகளைக் கூட்டமைப்பு முழுமையாக இல்லாது போகச் செய்யாது விட்டாலும் மேலும் அதிகரிக்க விடாமல் குறைக்கும் என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கை படிப்படியாக அல்லாமல் தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே தகர்க்கப்படும் என்ற அச்சம் தோன்றியுள்ளது. தீவிர தமிழ் தேசிய அரசியல் அல்லது எதிர்ப்பு அரசியல் பாரிய எதிர் விளைவுகளைத் தோற்று-விக்கும் எனச் சிலர் அச்சமடையத் தொடங்கியுள்ளனர். சிலர் பேசாமல் வாக்களிக்காமல் விடுவோம் எதையாவது செய்து தொலைக்கட்டும் என எண்ணுகின்றனர். சிலர் இவர்கள் இருவரும் மாறி மாறி ஒன்றைத் தான் கதைக்கிறார்கள். பேசாமல் ஈபிடிப்பிக்கு வாக்களித்து விட்டுப் போவோம். குறைந்தது கொஞ்ச அபிவிருத்தி மற்றும் வேலை-வாய்ப்புக்கள் ஆவது கிடைக்கும் எனக் கருதுகிறார்கள்.

சிலர் 1977ல் இருந்து மாறி மாறி இவர்களுக்கு வாக்களித்து என்ன பிரயோசனம் ஆட்சிக்கு வர இருக்கிற UNPக்கு வாக்களிப்பின் அரசாங்கத்திடம் இருந்து வேலை வாய்ப்பு மற்றும் அபிவிருத்தியை எதிர்பார்க்கலாம் என நினைக்கிறார்கள்.

இளையவர்கள், படித்த நடுத்தர வர்க்கத்தினர், இணைய வெளியில் உலா வருகிறவர்கள், மாற்றம் வேண்டும் அதற்காக மாற்றத்திற்கான அணிக்கு சந்தர்ப்பம் கொடுத்து பார்ப்போம் என நினைக்கிறார்கள்

முதியவர்கள் கூட்டமைப்பு தங்களுக்குள் பிடுங்குபட்டாலும், ஒன்றா நிற்கிறார்கள், அனுபவம் உள்ளவர்கள், நீண்டகாலம் அறிமுகமானவர்கள் அவர்களுக்கு வாக்களிப்போம் என நினைக்கிறார்கள் .

ஆக இங்கே தேர்தல் அறிவிப்பிற்குப் பிறகு வாக்குத் திரட்டும் அரசியலை முதன்மைப் படுத்திய பிரசாரங்களே இடம் பெறுகின்றன. மக்களுக்கு போதியளவு விளங்கங்களை அளித்து யாரும் பிரச்சாரம் செய்வதாக இல்லை. மக்களுக்கோ தம்முன்னுள்ள பிரச்சனைகளை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளைத்தரக்கூடிய அரசியற் கட்சிகளைத் தெரிவு செய்யக் கால அவகாசம் இல்லை.

ஆக த.தே.கூ க்கும் த.தே.ம.மு க்கும் இடையிலான மோதலாக விரிந்திருக்கும் இத்தேர்தல்களத்தினால் நன்மையடைப்போவது சிங்கள அதிகார வர்க்கமே என்ற அச்சம் உருவாகத் தொடங்கியுள்ளது.

**ராஜன் ஸ்கந்தவேள் - www.globaltamilnews.net -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. A + B ஒரு நிறை வர்க்கமாகவும் B + C ஒரு நிறை கனமாகவும் உள்ள A, B, C எனும் மூன்று அடுத்துள்ள நேர் நிறை எண்களைக் காண்க.

02. வீடமைப்புத் திட்டமொன்றில் ஒரு வீட்டில் தீந்தையை பூசுவதற்கு இரு மனிதர்கள் மூன்று நாட்கள் எடுக்கின்றனர். அத்தகைய 10 வீடுகளில் 12 நாட்களில் தீந்தையை பூசுவதற்கு எத்தனை மனிதர்களை ஈடுபடுத்த வேண்டும்.

03. காரணி ஒன்றின் $1000m^2$ பரப்பளவுள்ள பகுதியொன்றின் விலை ரூபா 80,000 எனின், காணியின் $900m^2$ பரப்பளவுள்ள பகுதியின் விலையைக் காண்க.

04. $-6xy+8xy^2$ என்பதை மறைப் பொதுக் காரணியாக வேறாக்குக.

05. மனிங் அன் கம்பனியின் ரூபா 10 பங்குகளை கொள்வனவு செய்வதற்கு ஒருவர் ரூபா 10,800ஐ முதலீடு செய்கிறார். அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை 900 எனின், ஒரு பங்கின் சந்தைப் பெறுமதியைக் காண்க.

06. 5 ற்கும் -9 இற்கும் இடையிலுள்ள கூட்டலிடையைக் காண்க.

**பகுதி 02**

01. தோடம்பழச் சாறு நாரத்தைச் சாறு, நீர் ஆகியவற்றை முறையே 300மி.லீ, 200மி.லீ, 500மி.லீ வீதம் ஒரு பானக்கலவை தயாரிக்கப்பட்டுள்ளது.
   1. இக்கலவையிலுள்ள தோடம்பழச்சாறு, நாரத்தைச் சாறு, நீர் ஆகியற்றிற்கு உள்ளிகிதத்தை மிக எளிய வடிவத்தில் காட்டுக.
   2. இக்கலவையில் உள்ள நீரின் சதீதத்தைக் காண்க.
   3. இக்கலவையில் இருந்து எடுத்த ஒரு பானக்குளையில் 50மி.லீ நாரத்தைச்சாறு உள்ளது. அதிலுள்ள தோடம்பழச் சாற்றின் அளவு யாது?
   4. இக்கலவையின் 800மி.லீ உடன் மேலும் 200மி.லீ நீரை சேர்க்கும் போது கிடைக்கும் புதிய கலவையில் உள்ள தோடம்பழச் சாறு நாரத்தைச் சாறு, நீர் ஆகியற்றிற் கிடையில் உள்ள விகிதத்தைக் காண்க.

## பாடம் : வரலாறு

01. மேல்ருவோருள் புராதன இலங்கையைப் பற்றி மிகவும் ஆதாரபூர்வமான செய்திகளைக் குறிப்பிட்ட வெளிநாட்டவர் யார்?
   1. அரிஸ்ரோற்றில் 2. ஸ்ரீ ஜவர்லால் நேரு
   3. புஆ.ற்றெவெலியன் 4. நு.ர்.கார்

02. 1ம் நிரலிலே தரப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளை 2ம் நிரலிலுள்ள அரசர்களின் பெயர்களோடு தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| 1ம் நிரல் | 2ம் நிரல் |
|---|---|
| இலங்கையிலுள்ள கிராமங்களின் எல்லைகளை வரையறை செய்தமை | E - வசபன் |
| | F - பண்டுகாபயன் |
| பர்மா மீதான படையெடுப்பு | G - 1ம் பராக்கிரமபாகு |
| சந்திரபானுவின் இலங்கைப் படையெடுப்பு | I - 6ம் புவனேகபாகு |
| சிங்கள சங்க என்ற கிளர்ச்சியை அடக்கியமை | J - 4ம் பராக்கிரமபாகு |

1. E, G, H, J 2. F, I, G, J 3. F, G, H, I 4. E, I, J. G

03. மேல்வருவனவற்றுள் எக்காரணத்திற்காக இலங்கை மீது ஏற்பட்ட ஸிநாட்டுப் படையெடுப்புக்கள் தொடர்பான நிகழ்ச்சிகளில் மலையரட்ட முக்கியத்தும் பெற்றது?
   1. போர் முனைகளுக்குத் தேவையான பொருள்களை வழங்குதல்
   2. புகலிடம் 3. போர்த் தளபாடங்களின் உற்பத்தி
   4. மேலதிகமான ஆயுதப் படைகளைப் பெற்றுக் கொள்ளுதல்

04. அமெரிக்காவின் இரு கண்டங்களிலும் 16ம் நூற்றாண்டில் மிகக் கூடிய குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய தேசம்?
   1. ஸ்பானியா 2. பிரான்ஸ் 3. போர்த்துக்கல் 4. ஒல்லாந்து

05. இங்கிலாந்து மகாராணியார் இலங்கை அரசின் தலைவர் என்ற நிலை அற்றுப் போதற்கு ஏதுவாயமைந்தது?
   1. 1931ம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்பு
   2. 1947ம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பு
   3. 1972ம் ஆண்டு 1வது குடியரசு அரசியலமைப்பு
   4. 1977ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு

## பாடம் : விஞ்ஞானம்

01. சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க.
   அ. இந்தோ அவுஸ்திரேலியப் புவித்தட்டில் இலங்கை அமைந்துள்ளது.
   ஆ. புவியின் வெளிப்புறப்படை கற்கோளம் எனப்படும்.
   இ. சுனாமி அலையின் வீச்சம் ஆழமான கடலில் குறைவாகக் காணப்படும்.
   1. அ, ஆ சரி 2. ஆ, இ சரி 3. அ, இ சரி 4. மூன்றுமே சரியானது

02. நீரினூடாக ஒளியின் வேகம் குறிப்பது?
   1. $3.0\times10^8 m/s$ 2. $2.25\times10^8 m/s$
   3. $2.0\times10^8 m/s$ 4. $1.24\times10^8 m/s$

03. தாவர இலைகளில் காணப்படும் சில இசைவாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   அ. அவிழ்ந்த இலை வாய்கள் இருத்தல்
   ஆ. மிகவும் மெல்லிய புறத்தோல் இருத்தல்
   இ. மேற்றோல் மயிர்கள் இருத்தல்.
இவற்றில் ஆவியுயிர்ப்பு வீதத்தை குறைப்பதற்கு உதவும் இசைவாக்கங்கள் யாவை?
   1. அ, ஆ ஆகியன மாத்திரம் 2. அ, இ ஆகியன மாத்திரம்
   3. ஆ, இ ஆகியன மாத்திரம 4. அ, ஆ, இ ஆகிய எல்லாம்

04. பின்வரும் கூற்றுக்களிடையே பொய்யான கூற்றைத் தெரிந்தெடுக்க.
   1. நீரில் கரையத்தக்க அயன் சேர்வைகளும் கரையாத அயன் சேர்வைகளும் மண்ணில் உள்ளன.
   2. மண்ணில் உள்ள போசனைப் பொருள்களைத் தாவரங்களுக்கு வழங்கும் ஊடகமாக மண்ணீர் செயற்படுகின்றது.
   3. தாவரத்தில் உள்ள அத்தியவசிய மூலங்கள் எல்லாம் மண்ணிலிருந்து பெறப்படுகின்றன.
   4. மண்ணில் உள்ள பல்வேறு உப்புக்கள் கரைந்த கரைசலாக மண்ணீரைக் கருதலாம்.

05. மின்னை உற்பத்தி செய்வதற்காக இலங்கையிலே மிக அண்மையில் அறிமுகஞ் செய்யப்பட்ட சக்தி மூலம் எது?
   1. கிளிரிசீடியா 2. உயிர்வாயு 3. சூரிய சக்தி
   4. ஓர் உயர் தரையில் சேமித்து வைத்த நீரின் அழுத்தச் சக்தி

06. இலங்கையின் சில பிரதேசங்களில் நிலக்கீழ் நீரில் உள்ள ஒரு குறித்த மூலகம் மனிதனின் பற்களில் கபில நிறம் ஏற்படக் காரணமாக உள்ளது. அம்மூலகம் யாது?
   1. புளோரீன் 2. குளோரீன் 3. சோடியம் 4. கல்சியம்

07. $0.5moldm^{-3}$ செறிவுடைய $NaOH$ இன் 600ml கரைசலின் செறிவை $0.3moldm^{-3}$ ஆக்குவதற்கு சேர்க்கவேண்டிய நீரின் அளவு?
   1. 200ml 2. 300ml 3. 400ml 4. 600ml

08. பழங்களுக்கு விசிறி வெட்டுப்படை உண்டாவது தாமதப்படுத்தப்படுவதன் மூலம் பழம் வருவதை தாமதப்படுத்தும் ஓமோன் எது?

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

மரபுத்தொடர்கள்.

**சொற்கள் சேர்ந்து நின்று தமக்குரிய நேர்பொருளை உணர்த்தாமல் குறிப்பான வேறு ஒரு பொருளை உணர்த்திவருவது இலக்கணத்தொடர் எனப்படும். அத்தகைய குறிப்புப் பொருள் பரம்பரை பரம்பரையாக மக்கள் மத்தியில் வழங்கி வருவதலால் அதனை மரபுத்தொடர் என்றும் கூறுவதும் வழக்கம்.**

47.நாக்கடைத்தல் - பேசமுடியாதிருத்தல்
48.நாக்கு நீளுதல் - அடக்கமின்றி பேசுதல்
49.நாக்கு தவறுதல், 50.நாக்கு புரளுதல், 51.நாக்கு தப்பல் - பேச்சு தவறுதல், பொய் சொல்லுதல்
52.பல்லிளித்தல் - ஏளனஞ் செய்தல் பல்லைக் காட்டிக் கெஞ்சுதல்
53.பல்லைக் கடித்தல் - துன்பந்தருவதை சகித்துக் கொள்ளுதல்
54.பல்லைப் பிடுங்குதல் - சக்தியை அடக்குதல்
55.முகத்திலடித்தல் - நேரே நிந்தித்தல்
56.முகந்தருதல் - அன்பு காட்டல்
57.முகங் கொடுத்தல் - இன்முகங் காட்டுதல்
58.முக முறிதல் - மனம் நோகல்
59.முகம் பார்த்தல் - இரக்கங் காட்டுதல் அன்பு காட்டுதல்
60.வயிற்றிலடித்தல் - சீவனத்தை கொடுத்தல்
61.வயிறு வளரத்தல் - எவ்வாறோ பிழைத்துக் கொள்ளல்
62.வயிறு கிள்ளுதல், 63.வயிறு கடித்தல் - பசியுண்டாகுதல்
64.வயிறு குளிர்தல் - திருப்தியடைதல்
65.வாய் விடுதல் -வெளிப்படையாககேட்டல்
66.வயிறெரிதல் - பொறாமை கொள்ளுதல்
67.வாய் புலம்பல் - பிதற்றுதல்
68.வாய் திறத்தல் -பேசத் தொடங்குதல்
69.வாய்ப் பூட்டு போடுதல் - பேசாது தடுத்தல்



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**Write questions with how long and when.**

1. It's raining. (how long?) How long has it been raining?
(when?) When did it start raining?
2. Kate is learning Italian. (how long / learn?) ..........................................
(When / start / learn?) ..........................................
3. I know Martin. (how long / know?) ..........................................
(When / first / meet) ..........................................
4. Bob and Alice are married. (how long?) ..........................................
(When?) ..........................................

***Complete answers to questions.***

01. Amy is in hospital, isn't she? Yes, she has been in hospital since Monday.
02. Do you see Ann very often? No, I ..................... her for three months.
03. Are you waiting for me? Yes, she ..................... married for ten years.
04. You know Linda, don't you? Yes, we ..................... each other for ages.
05. Do you still play tennis? No, I ..................... tennis for years.
06. Is Jim watching TV? Yes, he ..................... TV all evening.
07. Do you watch TV a lot? No, I ..................... TV for a long time.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 31

01. இரவு வேளையில் நடமாடி உணவு தேடும் பிராணி
    i. காகம் ii. மழைக்குருவி iii. வெளவால் iv. தேன்சிட்டு

02. நீர்த்தாவரம் அல்லாதது?
    i. வலிசுனேரியா ii. ஜங்கோணியா iii. ஐதரில்லா
    iv. மடுப்பனை

03. இரும்புச்சத்துக் குறைவினால் ஏற்படுவது
    I. உடல்நலிவு ii. கண்டமாலை
    iii. இரத்தச்சோகை iv. நீரிழிவு

04. தாவரங்களில் இரவைக்கழிக்கும் பிராணி அல்லாதது?
    i. ஆந்தை ii. மயில் iii. கறையான் iv. தேவாங்கு

05. எம்பக்க தேவாலயம் அமைந்துள்ள மாவட்டம்
    I. திருகோணமலை ii. குருணாகல்
    iii. கண்டி iv. பொலனறுவை

06. சீருடை அணியாத நபர் ஒருவர்
    i. தபாற்காரர் ii. தாதி iii. பொலிஸ் அதிகாரி
    iv. கருங்கல் உடைப்போர்

07. சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான தொலைபேசி இலக்கமானது
    i. 1263 ii. 1241 iii. 1919 iv. 1929

08. நெத்தலியில் அதிகம் உள்ள போசனைகூறு
    I. கல்சியம் ii. பொஸ்பரஸ் iii.இரும்பு iv. சோடியம்

09. அதி விரைவாக முளைக்கும் வித்து
    i. மிளகாய் ii. பயற்றங்காய் iii. கத்தரி iv. கடுகு

10. அயடீன் அதிகமுள்ள ஓர் உணவு
    I. சிறிய கடல் மீன்வகை ii. பசளி
    iii. சோயா iv. கரட்

பகுதி – 02

01. கமல் ஒரு பொருளை விலைக்கு வாங்கி வியாபாரியிடம் ரூ.500.00 காசுத் தாளைக் கொடுத்த போது வியாபாரி கமலிடம் இன்னும் ரூ.60.00 வாங்கிக் கொண்டு, மீதிப்பணமாக ரூ 150.00 ஐத் திருப்பிக்கொடுத்தார் அதன்படி வாங்கிய அப்பொருளின் விலையாது?

.......................................................................

02. பி.ப 1.30 மணிக்குப் பாடசாலை கலைந்து கமலுக்கு வீட்டுக்கு வருவதற்கு 45 நிமிடங்கள் செலவானது. அதன் படி, கமல் வீட்டு வந்தநேரத்தை நியம நேரமாகத் தருக?

.......................................................................

03. ரவி 2010 டிசம்பர்மாதம் 30 ஆம் திகதி வீட்டுக்கு வந்தார். அவன் மீண்டும் நாளை மறுதினம் வீட்டுக்கு வருவதாக அம்மாவிற்குக்கூறினான் அதன்படி, அவர் மீண்டும் நாளை மறு தினம் வீட்டுக்கு வரும் வருடம், மாதம், நாள் என்பவற்றை எழுதுக.

வருடம் : ............ மாதம் .......... நாள் ..............

04. கருத்தினைத் தமிழிழில் எழுதுக
    i. Shall we eat :- ..........................................................
    ii. Can I see :- ..........................................................

05. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக
    i. றவும(வு)ட (DH) துவன்ன ..........................................................
    ii. கஹ பா (T)ட ..........................................................

06. ரூ. 18.00க்கு அப்பிள் ஒன்றும் ரூ. 9.50 தோடை ஒன்றும் கொள்வனவு செய்து வியாரிக்கு ரூ 50.00 காசுத்தாள் ஒன்றைக்கொடுத்தாள் கிடைக்கும் மீதி?

.......................................................................

சென்றவார விடைகள்

01. 1 02. 2 03. 4 04. 3 05. 1 06. 1 07. 4
01. பி.ப 2.45 02. 800m 03. 0.6 04. 14 வயது 1மாதம்
05. 3/4 06. ரூ 37.50 07. 10Km



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு





சிறுவர்களுக்கான குட்டிக் கதை

## நட்புக்குள் துரோகம்

ஓர் அடர்ந்த காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் சேர்ந்து ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன. அதாவது நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச் செல்ல வேண்டும் என்றும் இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும் அந்த ஒப்பந்தத்தின் மூலம்



உறுதி செய்து கொண்டன. ஒரு நாள் நரி, தன் நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்தற்காக கழுதையின் இருப்பிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும் சிங்கம் ஒன்று நரியை வழிமறித்தது. சிங்கத்தைக் கண்டு அந்த நரி நடுங்கியபடி எப்படியாவது அதனிடமிருந்து உயிர் தப்ப வழியுண்டா என யோசித்தது.

நரி உடனே சிங்கத்தை நோக்கி, மன்னாதி மன்னா! அற்பப் பிராணியான என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப் போதில்லை. உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் சொல்ல முடியும். "என் நண்பனாக, நன்கு கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதனை சிரமமில்லாது நீங்கள் பிடித்துக் கொள்வதற்கு ஓர் ஏற்பாட்டை நான் செய்கின்றேன். அந்தக் கழுதை இரண்டு மூன்று நாட்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்" என்று கூறிற்று. அந்த ஏற்பாட்டிற்கு சிங்கமும் ஒப்புக் கொண்டது. நரி சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழுதையின் இருப்பிடத்திற்குச் சென்றது. நண்பனே இரைதேடச் செல்லலாமா? என கழுதையை அழைத்துக் கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது

உடனே சிங்கம் கழுதை மீது பாய்ந்து அதைக் கொன்றது. தான் தப்பித்தேன் என நினைத்து பெருமூச்சு விட்டது நரி. சற்று நேரத்தில் சிங்கம் நரியின் மீதும் பாய்ந்து பிடித்தது.

அப்போது நரி, "மகாராஜா! எனக்குப் பதிலாகதானே நான் கழுதையை காண்பித்தேன். இப்போது என்னையும் கொல்லப் பார்க்கிறீர்களே" என்றது.

"நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுத்த நீ, நாளை பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம். ஆகவே உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது" எனக் கூறிக் கொண்டு நரியையும் கொன்று வீழ்த்தியது.

**- தீய சகவாசம் இருப்பின் தீமையே கிட்டும், சரியான நட்புடன் பழகுதலே மிகச் சிறந்தது -**

# பொது அறிவு போட்டி

**சிந்திக்க .. ..**
தனியாக இருக்கும் பொழுது சிந்தனையிலும் கூட்டத்தில் இருக்கும் பொழுது வார்த்தையிலும் கவனமாக இருக்க வேண்டும்...

இங்கு தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை கீழே தரப்பட்டுள்ள இடத்தில் நிரப்பி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

*விடையை அனுப்ப வேண்டிய முகவரி :* 
*மலைமுரசு.*
*இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி,*
*திருகோணமலை.*

01. வழிநடத்தலில் முக்கியமாக கையாளப்படும் வளம் யாது?

02. மிக்க திரத்தன்மை வாய்ந்த சொத்து எது?

03. 2012இல் ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெற்றது?

04. அந்நிய நாணயங்களில் வழங்கப்படும் அரச கடன் பத்திரம் எது?

05. வர்த்தக வங்கி மூலமாக பணம் அனுப்பும் பிரதான முறை யாது?

06. அமெரிக்காவில் அதிக கறுப்பினத்தவர்களைக் கொண்ட நாடு?

07. உலக வர்த்தக ஸ்தாபனத்தின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

08. மின்சக்தியை பொறிமுறை சக்தியாக மாற்றும் கருவி எது?

09. தற்போது 2014 இல் விக்கிபீடியாவில் எத்தனை மொழிகள் செயற்படுகிறது?

10. வருடத்தின் ஒரே நாளில் 24 மணிநேரத்தில் பகலும், இரவும் சரியாக 12 மணிநேரம் மட்டும் வருவது எந்த நாளில்?

11. பாலில் உள்ளதை விட அதிக கால்சியம் உள்ள காய்கறி எது?

12. ஒரு ஹெக்டார் என்பது எவ்வளவு ஏக்கர்?

13. 2013ஆம் ஆண்டில் 18,000 தடவை உலகைச் சுற்றிப்பறந்த விமானம் எது?

14. ஏற்றுமதியாளராவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்று பதிவு செய்யுமிடம் எது?

15.இந்தியாவின் முதன்மையான விளையாட்டு அலைவரிசை வலையமைப்பு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருப்பொழிவு சிறப்புத் திருப்பலி"

அதி வணக்கத்துக்குரிய நோயல் இமானுவேல் ஆண்டகை அவர்களின் திருப்பொழிவு சிறப்புத் திருப்பலி நிகழ்வு கடந்த 25.07.2015 அன்று புனித சூசையப்பர் கல்லூரியில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.


இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற அதி வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், கொழும்பு மறை மாவட்ட பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் அவர்களும், பாப்பரசரின் பிரதிநிதி உயர் திரு பியர்ரே நுய்யேன் வான் டொற் அவர்களும், ஏனைய மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆணர்களும் இணைந்து சிறப்பித்தனர்.

புதிய ஆயராக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் திருகோணமலை மாவட்டத்தின் மறை மாவட்டம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கிறிஸ்தவ மக்கள் மாத்திரமல்லாமல் வேறுபாடின்றி அனைத்து மக்களும் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து புனித மரியாள் தேவாலயத்தில் மறுநாள் 26.07.2015 அன்று விசேட பூசையும் இடம்பெற்றது.

இதில் ஒரு விசேடம் யாதெனில் திருகோணமலையில் பிறந்து வளர்ந்த ஒருவர் திருகோணமலை மறை மாவட்டத்திற்கு ஆயராக தெரி செய்யப்பட்டமை ஆகும். இயேசுவை மையப்படுத்தி குருத்துவ பயணத்தை பயணித்ததாலேயே இன்று ஆயராக உயர்த்தப்பட்டுள்ளது.







# கன்னிக் கால் வெட்டும் நிகழ்வு

மட்டக்களப்பு ஊறணி அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருச்சடங்கின் கன்னிக்கால் வெட்டும் சடங்கு சிறப்பாக நடைபெற்றது. கடந்த 22ஆம் திகதி ஆரம்பமான ஆலயத்தின் வருடாந்த திருச்சடங்கு சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. பல வருடமாக இந்த கன்னிக்கால் நடைபெறும் நிகழ்வானது இருதயபுரம் ஏழாம் குறுக்கில் உள்ள இல்லம் ஒன்றில் நடைபெற்றுவருகின்றது.


வீதியுலா சென்ற அம்பாள் ஏழாம் குறுக்கில் உள்ள இல்லத்துக்கு சென்று அங்கு விசேட பூஜைகள் நடைபெற்று இந்த கன்னிக்கால் வெட்டும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.







## ஸ்ரீ நாகபூசனி அம்பாள் திருவிழா - நாவற்சோலை

கிழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணமலை, கும்புறுப்பிட்டி நாவற்சோலை கிராமத்தில் அமர்ந்து அருள் ஆட்சி புரியும் ஸ்ரீ நாகபூசனி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 22.07.2015 புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவம் நடைபெற்று வந்தது. அதனைத் தொடர்ந்து கடந்து 30.07.2015 வியாழக்கிழமை அன்று மாலை அம்பாள் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின் அதனைத் தொடர்ந்து கும்பறுப்பிட்டி நாவற்சோலை ஸ்ரீ நாகபூஷனி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்வத்தின் இறுதிநாளான தீர்த்த உற்சவ பெருவிழா 31.07.2015 நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றபோது பல்வேறு கிரியைககள் இடம்பெற்றன. அத்துடன் மாலை பூங்காவனம் எனப்படும் நிகழ்ச்சியுடன் திருவிழா இனிதே நிறைவு பெற்றது.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மூதூர்...

முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டன. அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சாதகமாகப் பரிசீலிக்கத் தொடங்கியதை அடுத்து அமெரிக்காவில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த தரு. தௌபீக் (திடீர்) திருகோணமலைக்கு வருகை தந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடாத்தியிருந்தார். இதனையடுத்து கடந்த புதன்கிழமை மூதூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட சம்மந்தர் "முஸ்லிம்களுடன் ஒற்றுமையைக் கட்டியெழுப்பி நினைத்த அனைத்தையும் சாதிக்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முஸ்லிம்கள் எம்முடன் கைகோர்க்க வேண்டும்" எனத் தெரிவித்திருந்தார்.

எனினும் மேலதிக ஆசனமொன்றை மூதூருக்கு வழங்குவது தொடர்பாக எவ்வித முடிவுகளையும் அன்றை தினத்தில் அவர் வெளியிடவில்லை.

அதேவேளை தேசியப் பட்டியல் ஆசனங்கள் தொடர்பாக ஏற்கனவே சில அரசியல் கட்சிகள் தமது பட்டியலைச் சமர்ப்பித்துள்ள நிலையில் அப் பட்டியலில் பெயர் குறிக்கப்படாத எவருக்கும் நியமனங்களை வழங்க முடியாது என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஏற்கனவே பதின்மூன்று தேசியப் பட்டியல் அங்கத்தவர்களை பெயரிட்டு தேர்தல்ச் செயலகத்தில் வழங்கியுள்ளது. அப்பட்டியலில் தௌபீக்கின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. இந் நிலையில் அப் பதின்மூவரும் விரும்பி தமது விலகல் கடிதங்களை வழங்கினால் மட்டுமே தௌபீக்கிற்குத் தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்க முடியும் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழ் காங்கி....

தனது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றங்களையும் அவர்களது கோரிக்கை ஏற்படுத்த மாட்டாது எனத் தெரிவித்த சந்திரகுமார் இவ்வாறான இழிநிலை அரசியலை விடுத்து கொள்கையுடன் கூடிய உறுதியான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சந்திரகுமார் அவர்களுக்கு கூறித் திருப்பியனுப்பதாகவும் தெரிவித்தார்.

## காணிகளை அடையாளமிடுக!

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சம்பூரில் தத்தமது சொந்த இடங்களை அடையாளம் கண்டு அவற்றை அப்பிரதேச செயலாளர் ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு சம்பூர் மக்களிடம் மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார கேட்டுக் கொண்டுள்ளார்.

சம்பூர் மீள்குடியேற்றம் தொடர்பான விசேட கூட்டம், சம்பூர் கோவில் வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோதே இதனைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சம்பூர்...

வரையான அனல் மின்நிலையப பகுதிக்கு நீட்சிப்படுத்தப்பட வேண்டுமாம். இவ்வழியால் அனல் மின் நிலையத்திற்கு நீர் வழங்கும் குழாய் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் அடுத்த பாதை கடலிலிருந்து ஜீவா பேக்கரிக்கு அருகாக அனல் மின்நிலையம் வரை அமைக்கப்பட வேண்டும். இவ்வீதி வழியே கடலிருந்து நிலக்கரி எடுத்துச் செல்லப்பட வேண்டும். இஃஅவ்விடயங்கள் நடந்த பின்பே குடியேற்றத்தினை தன்னால் முறைப்படி ஆரம்பிக்க முடியும். என மாவட்டச் செயலாளர் தெரிவித்ததாக அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இதனையடுத்து மக்கள் பெரும் குழப்ப நிலையில் இருப்பதால் தோதலின் பின்னரே குறித்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படப் போவதாகத் தெரிகின்றது.

## திருமலையின் வதைமுகாம்....

செய்யப்பட்டுள்ளன.

போருக்குப் பின்னர் தாம் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக, சாட்சிகளால் தெரிவிக்கப்பட்ட இரகசிய தடுப்பு முகாம்கள் உள்ளிட்ட 41 தடுப்பு முகாம்கள் பற்றிய விபரங்களும் இந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக திருகோணமலை டொக்யார்ட் கடற்படைத்தளத்தில், காட்டுக்குள் உள்ள இரகசியத் தடுப்பு முகாமின் செய்மதிப்படம் இதில் இணைக்கப்பட்டுள்ளதுடன், வவுனியாவில் யோசெப் முகாமின் தடுப்பு முகாம் வசதிகள் குறித்த விரிவான வரைபடமும் இதில் இடம்பெற்றுள்ளது.

இந்த அறிக்கைக்காக சாட்சியமளித்த 155 பேரில் கால் பங்கினர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற பின்னர் தமது உறவினர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளர்.

விடயம் குறித்து நடவடிகை எடுக்கா விட்டால், மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்குவதில் அனைத்துலக சமூகம் தோல்வியடையும் என்று எச்சரித்துள்ள இந்த அறிக்கை, இதனை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் நடவடிக்கைக்காக ஐ.நா பாதுகாப்புச் சபை பரிந்துரைக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.

''திருகோணமலை டொக்யார்ட்டில் உள்ள சிறிலங்கா கடற்படையின் இரகசிய தடுப்பு முகாமின் புவிநிலைகாட்டி விபரங்களை அம்பலப்படுத்தி யிருக்கிறோம். அங்கு பணியாற்றிய சித்திரவதைகளை மேற்கொண்ட வர்களின் பெயர்கள் படங்களும் உள்ளன.

வெள்ளை வான் கடத்தல்களுக்கான தளமாக வவுனியா யோசெப் முகாமை இராணுவப் புலனாய்வுப் பிரிவு பயன்படுத்தி வந்துள்ளது. அங்கு பல சாட்சிகள் சித்திரவதைகள் மற்றும், பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

41 தடுப்பு முகாம்களை அடையாளம் கண்டுள்ளோம். எனினும், சிறிலங்காவில் இதற்கு மேலும் இரகசிய தடுப்பு முகாம்கள் இருக்கலாம்.

ஏனென்றால், உயிர் தப்பிய பலர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்பட்டதால், தாம் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தோம் என்று அறியாதுள்ளனர்" என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், இத்தகைய மீறல்களில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தின் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் சிறிலங்கா கடற்படையின் புலனாய்வு அதிகாரிகள் பற்றிய விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## ஈழத் தமிழரை...

நாவின் இரகசிய செயற்திட்டம் தொடர்பில் அவர் பதில் கூறியே ஆக வேண்டும்" என்றும் வடக்கு-கிழக்கைத் தளமாகக் கொண்டியங்கும் அந்த அமைப்பு கேட்டிருக்கிறது.

உள்ளக விசாரணை ஒன்றை இலங்கையில் உருவாக்குவதற்கு ஐ. நா இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து இரகசியமான முறையில் திட்டம் ஒன்றை வகுத்துள்ளதாக சனல் 4 நிறுவனம் நேற்றைய தினம் செய்தி வெளியிட்டது.

இது தொடர்பிலான ஐ. நா ஆவணம் ஒன்று தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக சனல் 4 தெரிவித்திருக்கின்றது. பிரதமரின் அலுவலகத்தாலும், வெளிநாட்டு அமைச்சகத்தாலும் இவ்வுள்ளக விசாரணை நெறிப்படுத்தப்படும் என்றும் ஐ.நா வெறுமனே தொழில்நுட்ப ஆலோசனை மட்டும் வழங்கும் எனவும் இவ்வாவணம் தெரிவிக்கின்றது.

இவ்விடயம் தொடர்பில் ஐ. நா செயலாளர் நாயகத்தின் அலுவலகப் பிரதிநிதி ஒருவர் தன் மீது முறையற்ற விதத்தில் அழுத்தம் பிரயோகிப்பதாகவும் இவ்வுள்ளக விசாரணை திட்டம் தமிழர்களை ஏமாற்றும் தன்மையானது என்றும் முதமைச்சர் விக்கினேஸ்வரன் சனல் 4க்கு தெரிவித்துள்ளார்.

"இவ்விடத்தில் கடந்த ஜுலை 3, 2015 அன்று ஐ. நா மனித உரிமை ஆணையாளருக்கு தமிழ் சிவில் சமூக அமையத்தின் தலைமையில் 15 பொது சன அமைப்புக்கள் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தமையை நினைவு படுத்த விரும்புகிறோம்." ஐ. நாவின் வதிவிடப் பிரதிநிதி ஜுன் 4 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற மாநாடொன்றில் உள்ளகப் பொறிமுறை ஒன்றிற்கு ஐ. நா நிதி வழங்கத் தயார் என்று கூறியிருந்தமையை இவ்வமைப்புக்கள் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டின.

இப்பொழுது சனல் 4 இனால் கசியவிடப்பட்டுள்ள ஆவணத்தின் அடிப்படையிலேயே இவ்வுரை அமைந்திருந்தது என இப்பொழுது தெரிய வந்துள்ளது. செப்டெம்பரில் ஜெனீவா அறிக்கை வர முன்னரே இப்படியான அறிவிப்புக்கள் தவறானவை என்றும் அவை ஐ. நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையின் பெறுமதியைக் குறைக்கும் தன்மையானவை என்றும் இவ்வமைப்புக்கள் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டியிருந்தன. இவ்வறிவிப்பு தொடர்பில் ஐ. நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் கலந்தாலோசிக்கப்பட்டதா என்று கேள்வியையும் அந்தக் கடிதம் எழுப்பிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழ் காங்கி....

(முன்பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கொள்கையால் ஈர்க்கப்பட்டே தான் அக் கட்சியை ஆதரிப்பதாகவும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். போராட்டத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது உருவாக்கப்பட்ட கொள்கையில் இருந்து விலகிச் செல்வதால் அக்கட்சியைத் திருத்தி விடுதலைப் புலிகளின் தலைவரால் உருவாக்கப்பட்ட பாதையில் அக் கட்சியை நடத்திச் செல்வதற்கான பொறுப்பு தனக்கு இருந்ததாகவும் அப் பொறுப்பின் பாற்பட்டே அக் கட்சியில் தேர்தலில் நிற்பதற்காகத் தான் முடிவு செய்து அக் கட்சியின் தலைமைப் பீடத்திடமும், திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவரிடமும் தனது வேட்பாளர் விண்ணப்பங்களைக் கையளித்ததாகத் தெரிவித்தார். எனினும் அவரது வேட்பாளர் பத்திரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆதிகோணேஸ்வராவில் ஐந்தாம் ஆண்டுக்குச் செயலமர்வு



தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் 2015ஆம் ஆண்டு புலமைப் பீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான செயலமர்வு 2015.07.18ஆம் திகதி சாரதா வித்தியாலயத்தில் இலவசமாக நடாத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்




## ஆரோக்கியமான மாணவர்களை உருவாக்குவோம்

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட நானுஓயா தமிழ் வித்தியாலயத்தில் "ஆரோக்கியமான சிறுவர்களை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் கடந்த வியாழக்கிழமை விளையாட்டு போட்டி நடைபெற்றது. சேவ் த சில்ரன் நிறுவனத்தின் அனுசரனையில் நடைப்பெற்ற இந்நிகழ்வில், கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். அத்துடன் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன. அப்போட்டிகளில் மாணர்கள் பங்குபற்றியிருந்தனர்.



## 12 அணிகளுக்கிடையேயான சமர்

ஜே.பி.எல் என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் பிறிமியர் லீக் இருபதுக்கு– 20 கிரிக்கெட் போட்டிகள் நேற்று வெள்ளிக்கழமை முதல் யாழ்ப்பாணம் இந்து மற்றும் கொக்குவில் இந்து கல்லூரிகளின் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் இந்தச் சுற்றுப்போட்டி இம்முறை 3 வருடமாக லைக்கா மொபைல் அனுசரணையில் நடத்தப்படுகின்றது. இம்முறை சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றுவதுடன், அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 38 போட்டிகள் நடைபெறவுள்ள இந்த சுற்றுப்போட்டியில், ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிப் போட்டிகளில் விளையாடும்.

## உதித் சலஞ்சர் கிண்ண மென்பந்து சுற்றுப் போட்டி

**ஊவா** பரணகம, அம்பகஸ்தோவ தெலும்கஹாவத்த மைதானத்தில் நடைப்பெற்ற "உதித் சலஞ்சர் கிண்ண" மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், வெலிமடை யுனைடட் அணி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.



"ப்ளக் ஈகல்" விளையாட்டு கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போட்டித்தொடரில், 53 அணிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## முரளிக்கு பின்னர் சாதனையாளர் ஸ்டெய்



பங்களாதேஷிற்கு எதிரான 2-ஆவது டெஸ்ட் போட்டியில் தமிம் இக்பால் விக்கெட்டை வீழ்த்திய தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் டெஸ்ட் போட்டிகளில் 400-ஆவது விக்கெட்டைக் கைப்பற்றி சாதனை புரிந்தார்.

முத்தையா முரளிதரன் 72 டெஸ்ட்களில் 400 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடம் வகிக்க, நியூஸிலாந்தின் முன்னாள் வேகப்பந்து மேதை ரிச்சர்ட் ஹேட்லி 80 போட்டிகளில் 400 விக்கெட்டுகளைக் கைப்பற்ற தற்போது டேல் ஸ்டெய்ன் 80ஆ-வது டெஸ்ட் போட்டியில் 400ஆ-வது விக்கெட்டை வீழ்த்தி ஹேட்லியுடன் 2-ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

## உலகக் கிண்ண கால்பந்து தொடர்

**உலகக் கிண்ண கால்பந்து (2018)** தொடருக்கான தகுதிச் சுற்றில் பிரான்ஸ், நெதர்லாந்து, சுவீடன் அணிகள் ஒரே பிரிவில் இடம் பிடித்துள்ளன. 2018 இல் ரஷ்யாவில் "பிபா" உலகக் கிண்ண கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் நடக்கின்றன. இதில் ஐரோப்பிய அணிகளுக்கான தகுதிச் சுற்றில் மோதும் அணிகளின் அட்டவணை கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டது.

மொத்தமுள்ள 52 அணிகள் 9 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணிகள் உலகக் கிண்ண பிரதான சுற்றில் விளையாடத் தகுதி பெறும் ஒவ்வொரு பிரிவிலும் 2 ஆவது இடம் பிடிக்கும் அணிகளில் இருந்து சிறந்த 8 அணிகள் பிளே ஒவ் சுற்றில் விளையாடும். இதில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் உலகக் கிண்ணத்தில் விளையாடும்.

## மன்செஸ்டரிடம் விழுந்தது பார்சிலோனா

மன்செஸ்டர் யுனைட்டெட்-பார்சிலோனா அணிகளுக்கிடையில் கலிபோர்னியா சந்தா கிலாரா லெவி அரங்கில் இடம்பெற்ற போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டெட் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டம் ஆரம்பித்து எட்டாவது நிமிடத்தில் ஆஷ்லி யங் அடித்த மூலையுதையை தலையால் முட்டி வெய்ன் 'ரூனி மன்செஸ்டர் யுனைட்டெட் அணிக்காக முதலாவது கோலைப்பெற்றார். அவர் தனது 8 ஆட்டங்களில் பெறும் முதலாவது கோலைப்பெற்றார்.

## மெக்சிகோவின் கால்பந்து பயிற்றுவிப்பாளர் பணி நீக்கம்

அண்மையில் நடந்த "கான்காப்" தங்க கிண்ணக் கால்பந்து தொடரில் மெக்சிகோ அணி, இறுதி ஆட்டத்தில் ஜமைக்கா அணியை 1—0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்த போட்டியில் கிண்ணத்தை வென்ற 24 மணி நேரத்துக்குள், மெக்சிகோ அணியின் பயிற்சியாளர் மிகுவேல் ஹெரைரா, தொலைக்காட்சி நிருபர் ஒருவரை தாக்கியதாக குற்றச்சாட்டு எழுந்தது.



கடந்த திங்கட்கிழமை பிலடெல்பியா விமான நிலையத்தில் வைத்து, அஸ்டெகா தொலைக்காட்சியின் நிருபரான கிறிஸ்டியன் மார்ட்டினோலியின் முகத்தில் மிகுவேல் குத்தியுள்ளார். இது குறித்து விசாரணை நடத்திய மெக்சிகோ கால்பந்து சங்கம், மிகுவேல் ஹெரைராவை உடனடியாக பதவியை விட்டு நீக்கியது.

## வாழ்நாள் தடையை நீக்க கோரிக்கை

ஐ.பி.எல். சூதாட்ட விவகாரத்தில் தன் மீதான குற்றச்சாட்டுகளை டெல்லி நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ள நிலையில், தன் மீது விதிக்கப்பட்டுள்ள வாழ்நாள் தடையை நீக்குமாறு பி.சி.சி.ஐ.யிடம் கோர உள்ளதாக இந்திய அணி முன்னாள் வீரர் ஸ்ரீசாந்த் தெரிவித்துள்ளார்.

பி.சி.சி.ஐ. செயலர் அனுராக் தாக்கூரை சந்திப்பதற்காக அனுமதி கோரியுள்ளேன் எனவும் என் மீதான வாழ்நாள் தடையை நீக்குமாறு கோரி நான் விண்ணப்பிக்கலாம் என்று அவர் தொலைக்காட்சி ஒன்றில் தெரிவித்துள்ளார் எனவும் தெரிவித்தார்.



## தயாராகும் விராட் கொஹ்லி



இந்தியா 'ஏ'- அவுஸ்திரேலியா 'ஏ' அணிகள் மோதும் அதிகாரப்பூர்வமற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி சென்னையில் கடந்த புதன்கிழமை தொடங்கியது. இதில் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோஹ்லி விளையாடுவதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலியா 'ஏ' அணி புஜாரா தலைமையிலான இந்திய "ஏ" அணியுடன் அதிகாரப்பூர்வமற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது. இதில் இலங்கை சுற்றுப்பயணத்திற்கு முன்னோட்டமாக இந்திய 'ஏ' அணியில் விராட் கோஹ்லி களமிறங்குகிறார்.

## அடுத்த 9 இல் 900

அடுத்த 9 மாதத்தில் 900 போட்டிகளை நடத்த இந்திய கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாம். இதன் மூலம் இந்திய அணியில் இணைந்து ஆடும் வாய்ப்பு பல இளம் வீரர்களுக்குக் கிடைக்கும் என்றும் பி.சி.சி.ஐ. கூறுகிறது. மேலும் மண்டலங்களுக்கிடையிலான ஒரு நாள் தொடரான தியோதர் கிண்ணப் போட்டி முறையையும் மாற்றத் திட்டமிட்டுள்ளது பி.சி.சி.ஐ.அனில் கும்ப்ளே தலைமையிலான தொழில்நுட்பக் குழு கொடுத்த பரிந்துரைகளையும் அமுல்படுத்தவும் பி.சி.சி.ஐ. முடிவு செய்துள்ளது.

தியோதர் கிண்ணப் போட்டிகள் வருடா வருடம் ஜனவரி 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை ஐந்து நாட்களுக்கு நடைபெறும். 50 ஓவர் கொண்டதாக இந்தப் போட்டிகள் இருக்கும். என்கேபி சால்வே சலஞ்சர் டிபாரி போட்டிகளில் உள்ளதைப் போல 3 அணிகள் தியோதர் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் செய்திகள்

## அஞ்சல் வாக்களிப்பு 3ம் திகதி !!!

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான அஞ்சல் வாக்களிப்பானது திருகோமலை மாவட்டத்தில் எதிர்வரும் 3ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.


இத்தேர்தலுக்கான முதல் அஞ்சல் வாக்களிப்பை ஆசிரியர்களும் காவல்துறையினரும் இத்திகதியில் மேற்கொள்ள் எனத் தெரிகின்றது.

ஏனைய அரச அலுவலர்களில் தபால் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பித்திருந்தவர்கள் எதிர்வரும் 5ம் திகதி தமது வாக்குகளை செலுத்த முடியும்.

## விபத்து

குச்சவெளி பிரதேசசபைக்குச் சொந்தமான வாகனமொன்று கடந்த 29ம் திகதி விபத்தடைந்தது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த இந்த மிட்சுபிசி ரக பிக்கப் வாகனம் மின்வழங்கு தூணை தகர்த்துள்ளது. எனினும் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.



## ஈழத்தமிழர்களை ஏமாற்ற முயற்சி!!!

# உள்ளக விசாரணைக்கு ஐ.நா. - அரசு ஏற்பாடு

## தமிழ்ச் சிவில் சமூகம் கடும் கண்டனம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் ஒரு தலைப்பட்சமாக இலங்கை அரசாங்கத்தோடு மட்டும் கலந்தாலோசித்து முன்வைக்கப்பட்டிருக்கும் உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கான இரகசிய செயற்திட்டத்திற்கு எதிராகத் தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டிருக்கும் சுயாதீன தமிழ் சிவில் சமூக அமையம், அதனை முற்றுமுழுதாக நிராகரித்திருக்கிறது.

இன்று புதன்கிழமை அது வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் ‘‘பொறுப்புக் கூறலிற்கான செயன்முறையில் தமிழ் மக்களும் ஓர் பங்காளிகள் என்பதை ஐ. நா ஏற்க மறுப்பதை அவர்களின் இந்த செயற்பாடு சுட்டிக் காட்டுகின்றது‘‘ என்றும் தெரிவித்திருக்கிறது.

“இத்திட்டத்தை தமிழ் சிவில் சமூக அமையம் முழுமையாக நிராகரிக்கின்றது - உள்ளக பொறிமுறை மூலமாக பொறுப்புக் கூறல் இலங்கையில் சாத்தியமில்லை என்பதை நாம் ஆணித்தரமாகக் கூறி வைக்க விரும்புகிறோம்” என்று தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளர்களான குமாரவடிவேல் குருபரன் மற்றும் எழில் ராஜன் ஆகியோர் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் தனது பதவியின் மாண்பை காப்பாற்ற விரும்பின் இனியும் அமைதியாக இருக்க முடியாது என்றும் “உள்ளக விசாரணையை உருவாக்குவது தொடர்பிலான ஐ. 21

# தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்களை வாங்க முயற்சி ???

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்தல் களத்தில் இருந்து விலக்கி வைப்பதற்கான முயற்சிகளைப் பிரபல தமிழ்க் கட்சியொன்றின் முக்கியஸ்தர்கள் முன்னெடுத்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

கடந்த 31ம் திகதி இரவு தம்பலகாமத்தில் அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் வேட்பாளர் திரு. சந்திரகுமார் (லிங்கன்) அவர்களிடம் டாட்டா ரக மகிழுந்தில் வந்திருந்த இரண்டு முக்கியத்தர்களே இந் நடவடிக்கையை முன்னெடுத்திருந்ததாக லிங்கன் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியைவிட்டுவிலகி தமது கட்சியில் இணைய வேண்டும், அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும் எனக் கோரிய இவர்கள் அதற்காக ஏற்படப் போகும் இழப்புக்களுக்கு நட்ஈட்டை வழங்கவும் தாம் தயாராக இருந்ததாக அவர் தெரிவித்தார்.

21

# திருமலையின் வதைமுகம் தொடர்பாக மேலும் அம்பலமாகும் தகவல்கள்

திருசேறிலங்காவில் சித்திரவதைகள், வல்லுறவுகள், சட்டவிரோத தடுத்து வைப்பு போன்ற வழிகளில் தமிழ்ச் சமூகம் மீது திட்டமிடப்பட்ட துன்புறுத்தல்கள் அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்படுவதாக அனைத்துலக ஆய்வு அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

அனைத்துலக மனித உரிமைகள் நிபுணர் யஸ்மின் சூகா தலைமையிலான சிறிலங்காவில் உண்மை மற்றும் நீதிக்கான அனைத்துலக திட்டம் என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்க மற்றும் பாதுகாப்புப் படைகளின் உயர் மட்டத்தினால், சித்திரவதைகளும், பாலியல் வன்முறைகளும் எவ்வாறு நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கையாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை இந்த 134 பக்க அறிக்கை விரிவாக விளக்கியுள்ளது.

“இன்னமும் முடிவுறாத போர்: சிறிலங்காவில் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகளில் இருந்து உயிர் தப்பியோர்- 2009- 2015” என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் கவனமாக பதிவு 21



## மாவட்டக் கலாசாரப் பேரவை உருவாகியது

திருகோணமலை மாவட்டத்தின் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப்பிரிவில் பிரதேச செயலாளர் திரு.எஸ்.ஜே. அருள்ராஜ் அவர்கள் தலைமையில் 2015.07.30ஆம் திகதி பிரதேச கலாசாரப் பேரவை உருவாக்கப்பட்டது.

இப் பேரவையில் கலை இலக்கியம், நாடகம், குறுந்திரைப்படம் , இசை, நடனம், வாத்தியம் போன்ற ஒவ்வொரு துறைக்கும் துறைசார் வல்லுனர்கள் உறுப்பினராக தெரிவு செய்யப் பட்டதுடன்,துறைசார் கலைஞர்களை உள்ளடக்கிய வகையில் குழுக்களாக

## 27 வருடங்கள் தண்டனை

கடந்த 2006 ஆம் ஆண்டு, முள்ளிப்பொத்தானையில் 11 வயது சிறுமியை வன்பிரயோகத்துக்கு உட்படுத்தியவருக்கு 27 வருட சிறைத் தண்டனை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

தம்பலாகமம், எட்டாம் கொலனி முள்ளிப்பொத்தானையை சேர்ந்த 11 வயது சிறுமியை பாலியல் வன்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் எச்.எல்.கபிபுல்லா என்ற 47 வயது நபர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தார். குற்றம் நிரூபிக்கப்பட்டதற்கு அமைவாக இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 இலட்சம் ரூபாயை நட்டஈடாக செலுத்துமாறும் அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில், ஐந்து வருட சிறைதண்டனையும் ஐம்பதாயிரம் ரூபாய் தண்டப்பணமும் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். இதேவேளை, 50 ஆயிரம் ரூபாயை செலுத்த தவறும்பட்சத்தில் இரண்டு வருட சிறைதண்டனையுமாக 27 வருட சிறைதண்டனை வித்தித்து மேல்நீதி மன்ற நீதிபதி பா.சசிமகேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

# கிழக்கு கடற்பரப்பில் எண்ணை அகழ்விற்கு அனுமதி

கிழக்குக் கடற் படுக்கைகளில் மசகு எண்ணையை அகழந்தெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்- பட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

மன்னார்க் கடற் படுக்கைகளில் ஆய்வுகளை நடாத்தி வந்த இந்தியக் கம்பனி “கெயன் இந்தியா” என்ற கம்பனியின் ஆராய்ச்சிப் பணிகள் நிறைவுக்கு வரும் காலத்திலேயே திறந்த பொருள் வழங்கும் கேள்விப்பத்திர நடைமுறையூடாக பிரெஞ்சுக் கம்பனிக்கு கிழக்கில் எண்ணை வள அகழ்விற்கு கடற் படுக்கைகள் தாரை வார்க்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org